
கழுகு வேட்டை!
லயன் காமிக்ஸ்
ரூ.10/-


கழுகு வேட்டை


வின் கேட் கோட்டையிலிருந்து நவஜோ குடியிருப்பு பிராந்திய எல்லையை நோக்கிச் சென்ற வழித் தடத்தில்...
நவஜோ செவ்விந்தியர்களின் உரிமைகளுக்காகப் போராடியவர் டெக்ஸ் வில்லர். அவருக்கு 'இரவுக் கழுகு' என்று செவ்விந்தியர் பெயரிட்டிருந்தனர்!
வோவ்...! இம்முறை தன் வெள்ளை சகோதரர்கள் மீது இரவுக் கழுகாருக்கு எந்த கோபதாபமும் ஏற்பட இடமில்லை...!
என்னுடைய எண்ணமும் அதுதான்!


விநியோகப் பொறுப்பில் இருக்கிற ஆசாமி முந்தைய ஆளைவிட யோக்கியன் என்பதோடு, அவன் நமக்குத் தந்த பணம் வாஷிங்கடனோடு நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் சொல்லப் பட்டுள்ள அதே தொகை என்பதும் குறிப்பிடத் தக்கது.


அந்த ஒப்பந்தத்தில் சில பாரல்கள் ''தண்ணி''யும் சேர்க்கப்பட்டிருந் திருக்கலாம்.....!
எதற்கு...? - கிராமத்தில் கொண்டாட்டப் போடவா?



எவ்வளவு உலர்ந்த மாமிசங்களையும், எத்தனை கம்பளிப் போர்வைகளையும் நாம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை பார்த்த மாத்திரத்திலேயே ஜனங்களுக்கு கொண்டாட்டமாகிவிடும் - இல்லையா?
'தண்ணி'யைப் பற்றிய சிந்தனையை நீ கொஞ்சம் மூட்டை கட்டி வைத்து விடுவதுதான் உனக்கு நல்லது!
இந்த மது வகைகளை வீசியெறிந்துதான் வெள்ளையர்கள் நம் இனத்தவர் மீது வலுவான ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதை சற்று யோசித்துப் பார்.
ஹோபி இனத்தவர்களுக்கு நேர்ந்த கதி அதற்குள் உனக்கு மறந்துவிட்டதா? அன்று வீரப்பராக்கிரமசாலிகளாக அனைவராலும் பாராட்டப்பட்டு வந்தவர்கள் இன்று கையேந்தும் ஈனப் பிறவிகளாக நசிந்து போய்விட்டார்கள்.
வழியில் யாரோ... ஜனங்கள்!


எச்சரிக்கை... அவர்கள் வருகிறார்கள்!
சுரங்கத் தொழிலாளிகளோ?
அப்படித் தோன்றவில்லை!
கௌ-பாய்களாகவும் தெரியவில்லை!
படையிலிருந்து தப்பியோடி வந்தவர்கள் அல்லது ஊர் சுற்றித் திரியும்தறுதலைகளாக இருக்கலாம்.
டைகர் ஜாக்தான்.... சூப்பர்


கவனி! கறுப்பு உடை யணிந்திருக்கிறவன் ஒரு செவ்விந்தியன்!
அவனை அடையாளம் தெரியும் எனக்கு
அவன் - ஸ்கார் ஃபேஸ்
அகோமட் பழங்குடி யிலிருந்து விலகி இராணுவத்திற்கு வழி காட்டியாக சென்றவன்.
ஆமாம்...! அவனுடைய தோழர்களின் முறைப்பை பார்த்தால் மீண்டும் தன் தொழிலை இவன் மாற்றிக் கொண்டுவிட்டால் என்று தெரிகிறது.
ஒவ்...!
அசிங்கப் பிண்டங்கள்!
நல்வாழ்த்துக்கள் தோழர்களே!
நலமா?
ஹலோ... எப்படி இருக்கிறீர்கள்!


ஒரு ஆங்கிலேயனைப் போல் வசீகரமாக இருக்கிற நீ...
?!
...உன் தோலின் நிறத்தை மாற்றிக் கொள்ள முடியாமல் போனது தான் பரிதாபம்... ஸ்கார் ஃபேஸ்!
கிண்டலா...! வார்த்தைகளை அளந்து பேசு - ஜாக்கிரதை!
ஹே... நிறுத்துப்பா...! காப்பியின் நறுமணம் உன் நாசியை துளைக்கும்போது, சண்டையில் ஆர்வம் காட்ட உன்னால் எப்படித்தான் முடிகிறதோ.
வாருங்கள்...! எங்களோடு அமர்ந்து காப்பி பருகிவிட்டு செல்லலாமே!
ம்ம்... காப்பி போதாது என்று நீங்கள் நினைத்தால் இதோ விஸ்கி இருக்கிறது!



இங்கே நீங்கள் வழித் தங்கலா?
ம்ம்... அப்படித்தான் என்றில்லை!
ஒரு நபரை - உங்களுக்கு நன்றாக அறிமுகமானவர் தான் - சந்திக்கும் உத்தேசத்தோடு இங்கே இருக்கிறோம்...
அது... யாரென்று -
தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறதா...? என் நண்பர்கள் உங்களுக்கு புரிய வைப்பார்கள்!
ஆமாம்.. ஆனால் வாய் வார்த்தைகளால் அல்ல!
டமார்
செமத்தியான அடி!
நகர முயற்சிக்காதே நவஜோ... இல்லையேல் நேராக பரலோகம்தான்!
அடப்பாவிகளா!


டைகரின் நண்பன் புலிப் பாய்ச்சலாக தன் குதிரையை நோக்கிப் பாய்ந்தான்...
சண்டாளர்கள்..
ஆனால் - ஸ்கார் ஃபேஸ் சரேலென்று தன் கத்தியை உருவி மின்னல் வேகத்தில் எறிந்தான்.
விடாதே... கொல்!
ஆஆஆஆ.....
சத்!
நாசமாகப் போகிற நச்சுப் பாம்புகள்...
ஏய்... சனியனே - வழியை விட்டு ஒதுங்கு!
ஈனப் பிறவி!
ஊஹூம்... இனியும் உன்னை விட்டு வைக்கலாகாது.
டுமீல்
ஆஆ...



நரகத்தில் உனக்கு சுகபோகங்கள் கிட்ட வாழ்த்துகிறேன்.
துணைக்கு வந்த அப்பாவி அவன்
வியாக்கியானம் தேவையில்லை... செம்மூஞ்சிக் குரங்கே
எங்களை யாரென்று நினைத்தாய்?
பளீர்!
பட்டினி கிடந்து சாவோடு போராடும் அறிவு கெட்ட நவஜோக்கள் இல்லை நாங்கள்
உன் சரக்குகளுக்கு நேரிடப் போகும் கதியைப் பார்...
டுமீல்
டுமீல்


ஹூய்ய்ய்....
ஓடுங்கள்.... ஊய்ய்
மனிடோவின் சாபம் உங்கள் மீது விழட்டும்! என்னதான் வேண்டும் உங்களுக்கு!
சீக்கிரமே புரிய வைப்போமடா பன்றிப் பயலே
அதற்கு முன் உன் திமிரைக் கொஞ்சம் வடியச் செய்ய வேண்டியிருக்கிறது...
இது உன் நினைவு ஆற்றலை தூண்டுவதற்காக!
டமார்
இப்போது புரிந்திருக்குமே...? சரி... எழுந்து நில். இது ஒரு தொடக்கம்தான்!



டைகர் பதிலடி கொடுக்க யத்தனித்தான்...
?!
விஷப் பாம்பே...!
ஆனால் அவனுடைய முயற்சி அர்த்த மற்றது...
இவன் மீது விழுந்து அமுக்குங்கள்.
என்னிடம் விடுங்கள்... தீர்த்துக் கட்டி விடுகிறேன்.
உன் தலைக் கனத்தை இது வடியச் செய்யும்...
டமார்
தூக்கி நிறுத்து அவனை
இதோ
பிடித்துக் கொள்கிறேன்... இஷ்டத்திற்கு அடித்து நொறுக்கு
நன்றி!



நிறையக் கொடு!
ஈனப் பிறவி!
ஒன்று
இரண்டு!
ஆவ்வ்...
நாயே...
அவ்வளவு திமிரா... உன் முகரையை பெயர்க்கிறேனா இல்லையா பார்...
என்னையா எட்டி உதைத்தாய்...
டமார்
வெறி கொண்ட விலங்கு போல் டைகரை நையப்புடைத்தான் அந்த அயோக்கியன்...
முடிவில் - டைகர் சுயவுணர்விழந்து சரிந்தான்.
ஸ்லேட்டர்..! போதும் நிறுத்து... ஆசாமி அம்பேல்!


அவனை உசுப்பி எழுப்பு... கற்றுத் தந்தது போதாது!
ஒரேயடியாக கொன்றுவிட எண்ணமா உனக்கு?
சரி... அதை அப்புறமாக தீர்மானிக்கிறேன்!
அரை நிமிடத்திற்குப் பின் சுயவுணர்வு வரப்பெற்ற டைகருக்கு அதிர்ச்சியும், அதீத வலியும் தாங்க முடியாததாக இருந்தது.
ஒவ்வ்...
இரண்டாவது சுற்று - உன்னுடைய முறை ஸ்கார் ஃபேஸ்
ஓ..! மறுபடியும் கிடைக்குமா இப்படியொரு வாய்ப்பு?
அப்போது-
போதும் நிறுத்துங்கள்... -
என்ன விஷயம் பாஸ்?
?!
?!


இவன் கல்லுளி மங்கன்... இன்னும் நிறைய கொடுத்தாலும் தாங்குவான்.
வாயை மூடு ஸ்லேட்டர்... உன் யோசனை தேவைப்பட்டால் அப்போது கேட்டுக் கொள்கிறேன்.
ஏய்... எழுந்திரு
காதிலே விழவில்லையா... செங்குரங்கே?
?!
கேட்கிறதடா கிழட்டு முண்டமே!
திமிர் பிடித்த நாயே...
சத்க்
மரியாதையாக நான் கேட்பதற்குப் பதில் சொல்!
என்ன வேண்டும் உனக்கு?



உன் நண்பன் டெக்ஸ் வில்லருக்கு ஒரு செய்தியை நீ கொண்டு செல்ல வேண்டும்.
அவனுடைய ஆட்ட பாட்டமெல்லாம் இனியும் செல்லுபடியாகாது... அவனுடைய சகாப்தத்துக்கு சாவுமணி அடித்தாகி விட்டது என்று போய்ச் சொல்...
...அவனைக் கண்டு அஞ்சாத சிங்கம் ஒன்று இங்கே சவாலுக்கு தயாராகிவிட்டது என்றும் அவன் ஒரு
வாரத்திற்குள் ப்யூப்லோ பெலிஸிலுள்ள பூட்ஹில்ஸுக்கு வந்தால் இந்த எல் மியூர்டோ அதை நிரூபித்துக் காட்டுவான் என்றும் அவனிடம் சொல்.
நான் சொன்னதெல்லாம் மண்டையில் ஏறியதாடா...
பதிலுக்கு நான் ஒன்று சொல்கிறேன். கேட்டுக்கொள் -
...உன்னை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணி தன் நேரத்தை வீணடிக்க டெக்ஸ் இஷ்டப்படா விட்டால் ப்யூப்லோ பெலிஸுக்கு நான் வருவேன்.
...வந்து - இப்போது நீ என்னை அடித்ததற்கு வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுக்கா விட்டால் நான் ஆண்மகனே இல்லை!
முட்டாள்!


இன்னுமா உன் வாய்க்கொழுப்பு அடங்கவில்லை?
பட்!
என்னைப் போன்ற வீர புருஷர்கள் இங்கே வந்த பிறகு நீ, டெக்ஸ் மற்றும் அவனுடைய அடிவருடிகள் எல்லோரும் புலியைக் கண்ட அற்ப விலங்குகளாக ஓடி மறைய வேண்டும டா!
சரியாகச் சொன்னீர்கள்... பாஸ்!
இவனை அப்புறப் படுத்துங்கள்!
இதோ...!
தூக்குங்கள்- சீக்கிரம்!
கடிவாளத்தை நன்றாக பிடித்துக் கொள் -உயிர்மீது ஆசையிருந்தால்!
ம்ம் - இந்தா!
உன் நண்பனையும் வழியில் கழுகுகளுக்கு இறையாக்கி விடாமல் ஊருக்கு கொண்டு போய் சேர்!


சண்டாளர்கள்...
ஓடு... ஹிய்ய்ய்....
டுமீல்
டுமீல்
ஊய்... ஊய்ய்
காலம் இப்படியே போகாதடா... சனியல்களா...! விரைவிலேயே வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் போகிறீர்கள்!
உருப்படியாக ஊர் போய்ச் சேர... வாழ்த்துக்கள்!
மேடு, பள்ளம் பார்த்துப் போடா... கண்ணா!
ஹீ...ஹீ...!
ம்ம்... இனி இங்கே நமக்கு வேலை இல்லை... முதல் அத்தியாயத்தை சரியாக எழுதி விட்டோம்... இனி அடுத்த கட்டத்திற்கு தயாராக வேண்டும்!


கிராதகர்களின் ராட்சஸத்தனமான அடி உதைகளால் ரணமாகிப் போயிருந்த உடல் குதிரையின் ஓட்டத்தினால் அசைந்த போது நாளங்களில் பரவிய மரண வேதனையை தாங்கிக்கொள்ள உதட்டை இறுகக் கடித்தவாறே பயணம் செய்த டைகர் சேணத்திலிருந்து விழுந்து விடாமலிருக்க மிகவும் சிரமப்பட்டான்.
இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய நாள் அவர்களுக்கு சீக்கிரமே வரும்... நிச்சயமாக வரும்...
பல மணி நேர கடினமான பயணத்திற்குப் பின் குற்றுயிரும் குலையுயிருமாக நவஜோ கிராமத்தைச் சென்றடைந்தான் டைகர்..
ஒவ்..! அது - டைகர் ஜாக் அல்லவா!
?!
?!
ஆண்டவனே... என்ன ஆயிற்று அவனுக்கு!
வாருங்கள்... ஓடிப் போய் பார்ப்போம்.
குதிரை மீது வேறு யாரோ அவனையும் விட மோசமான நிலையில் கிடக்கிறார்கள்.
டைகர்!


இரவுக் கழுகுக்கு விஷயத்தை தெரிவியுங்கள்
இந்நிலையில் எப்படித் தான் கீழே விழுந்து விடாமல் தாக்குப் பிடித்தானோ!
சீக்கிரம்.. ஒரு கை கொடுங்கள்
ச்சு... இவனுக்கு உயிர் இல்லை!
டெக்ஸை... கூப்பிடுங்கள்....
ஏற்கனவே ஆளை அனுப்பிவிட்டோம்... டைகர்!
மெள்ள... மெள்ள...
டெக்ஸை நான் உடனடியாக பார்க்க வேண்டும்.
உடனடியாக நாம் புறப்பட்டுச் சென்றால் அந்த நச்சுப் பாம்புகளை விரட்டிப் பிடித்துவிட முடியும்.


ஆனால் நடந்ததை கேள்விப்பட்ட டெக்ஸ்
உடனடியாக விரட்டிச் செல்வது வீண்
பிரயத்தனம் என்று நினைத்தார்.
இதற்கிடையே, இறந்து
போனவனுடைய
குடிசையில் இறுதிச்
சடங்கு
வேலைகள் நடந்தன.
டெக்ஸ் வில்லர் வெகு நேரம் டைகரோடு
கலந்துரையாடினார்...
அந்தப் பெயர்தானா?
சரியாகத்தான் காதில்
வாங்கிக் கொண்டாயா?
எல் மியூர்டோ... அப்படித்
தான் அவன் சொன்னான்.
எவ்வளவுதான் யோசித்துப் பார்த்த போதிலும்
அப்படியொரு பெயரை இதுவரை கேள்விப்
பட்டதாகவே தெரியவில்லையே...!


அவனுடைய அங்க அடையாளங்களை நீ விபரமாக சொன்ன போதிலும், அப்படியொரு நபரை நான் பார்த்ததாக ஞாபகம் வரவில்லையே!
மோசமான பேர்வழி...!
என்னை சவாலுக்கு அழைத்து அதன் மூலம் பெருமை தேடிக்கொள்ள நினைக்கிறவன் வேறு எப்படி இருப்பான்.
தகுந்த காரணம் இல்லாமல் 'நீயா - நானா' சவாலில் நான் இறங்க மாட்டேன் என்று எப்படியோ தெரிந்து கொண்டு இப்படியொரு அடாவடித்தனத்தை அவன் செய்திருக்க வேண்டும்...
நிச்சயம் நீங்கள் அங்கே போவீர்கள் அல்லவா?
என்ன யோசனை... டெக்ஸ்?
ஹம்ம்... அதில் சந்தேகம் வேண்டாம்!
இப்படியொரு கொடுமை இழைத்த பயலை அப்படியே விட்டுவிட முடியுமா என்ன? ஆனால் முதலில் அவனைப் பற்றி விபரங்களை நான் சேகரித்துக் கொள்ள வேண்டும்!


அவனையும் அவன் கூட்டத்தினரையும் சட்டத்தின் பொறுப்பில் விட்டு விடுவதுதான் சரியாக இருக்க முடியும்.
ஸ்கார் ஃபேஸ்?
ப்பூ...! அவன் அடிவருடும் வெள்ளையர்களுக்கு நேரும் கதிதான் அவனுக்கும்... விரைவிலேயே தூக்கில் தொங்கத்தான் போகிறான்.
இதற்கிடையே, கிழக்கு வெளுத்ததும் கழுதைகளையும், சரக்குகளையும் மீட்டு வர ஆட்களை அனுப்ப வேண்டும்.
....நானும் கிளம்பிச் சென்று வின்கேட்டில் உள்ள ஷெரீப்போடு இது பற்றி கலந்தாலோசிக்கப் போகிறேன்!
நாளை ஸாண்டா ஃபே கோச்சு வண்டியில் ஊர் திரும்பும் கிட்டை வரவேற்கவும் எனக்கு வாய்ப்புக் கிட்டும்.
நானும் வருகிறேனே!
இரவு நன்றாக தூங்கி ஓய்வெடுத்துக் கொண்டு விட்டேனேயானால் பயணத்துக்கு தயாராகிவிடுவேன்.
உனக்கென்ன பைத்தியமா?



உனக்கு கிடைத்த அடி உதைகள் ஒரு காட்டெருமைக்கு கிடைத்திருந்தால் அது கூட எழுந்திருக்க ஏழு நாள் ஆகுமே...
அதனால்தான் உங்களோடு வர பிரியப்படுகிறேன். அங்கே நான் இழந்ததை மீட்க ஒரு வாய்ப்பு கிடைக்குமே.
பழிக்குப்பழியா?
உன் மனோநிலை தெளிவாக புரிகிறது நண்பனே.. ஆனால் நீ இப்போதிருக்கும் நிலையில் குதிரை மீது ஏறி அமர்வது என்பது விவேகமான செயலாக இராது...!
புரிகிறது... டெக்ஸ்!
உன்னால் எனக்கு இடைஞ்சல்தான் ஏற்படும்..!
இம்மாதிரி சந்தர்ப்பங்களில் முட்டுக்கட்டை ஏதுமின்றி நான் சுதந்திரமாக செயல்படுவதையே விரும்புகிறேன்.



அதோ... அவரே வருகிறார்!
'இரவுக் கழுகாரே'
?!
ஓனோப்கா! என்ன விஷயம்..?
நானும் உங்களோடு வருகிறேன்!
எதிரிகளைத் தேடி நாளைக் காலை நீங்கள் கிளம்பப் போவதாக அறிந்தேன்... நானும் வருகிறேனே!
ஏன்... உயிர் மீது ஆசை இல்லையா!
ஓவ்...! என் மகனின் உயிரற்ற சடலத்தை டைகர் கொண்டு வந்த சேர்ப்பித்த அக்கணமே, நானும் அவனோடு பரலோகம் போய்விட துடித்துக் கொண்டிருக்கிறேன்.


என் முடி நரைத்துவிட்டிருக்கலாம்... ஆனால் இன்னமும் இந்தக் கைகளில் வில்லை
நாணேற்றி எய்யவும், கோடரியை குறி வைத்து வீசவும் தேவையான வலு இருக்கிறது.
அதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஒனோப்கா! அத்தோடு உன் மனக் கொதிப்பும் புரிகிறது. ஆனால் நாளை என்னோடு வேறு எவரும் வருவதை நான் விரும்பவில்லை.
உன் மகனின் மரணத்திற்கு பழி தீர்க்கப்படும்... ஆனால் நீ நினைக்கிற மாதிரி அல்ல!
வெள்ளையர்களுக்கும் செவ்விந்தியர்களுக்குமிடையே நிலவும் நல்லுறவுக்கு பாதகம் விளையும் வகையில் நாம் எந்த பதிலடி நடவடிக்கையிலும் இறங்கலாகாது. ஆட்சியாளர்களின் சட்டம் நமக்கு நியாயம் வழங்கும் என்று எதிர்பார்ப்போம்
ஒருவேளை அங்கிருந்து நமக்கு நியாயம் கிடைக்கத் தவறினால் இருக்கவே இருக்கிறது என் துப்பாக்கி!
ஓவ்..!
உங்களுடைய வார்த்தைகள் என் நெஞ்சைத் தொட்டுவிட்டன... நாளை நீங்கள் பயணமாகும்போது என் நெஞ்சத்தின் உணர்வுகளும் உங்களுடனேயே வரும்...



வெற்றி ஈட்டி வர என் நல்வாழ்த்துக்கள் இரவுக் கழுகாரே!
நன்றி!
தெய்வத்தின் அருள் என்றென்றும் உங்களுக்குத் துணை இருக்கட்டும்!
மறுநாள் - வின் கேட்டில்...
ஆமாம்... நீ விவரிக்கும் அடையாளம் உள்ள நபர்களைப் பற்றி நாலைந்து தினங்களுக்கு முன் எனக்கு தகவல் வந்தது.
ஷெரீப்
ஆனால் அந்த இருவரும் எந்த பிரச்சனையையும் உருவாக்கவில்லை என்பதால் அவர்களைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை.
பரிதாபம்.
அவர்களைப் பிடித்து விசாரித்திருந்தால் கூடுதல் விபரம் தெரிய வந்திருக்கும்!



தகவல் தெரிந்து என்ன பிரயோஜனம்... அவர்களுடைய பெயரும், விலாசமும் என் பதிவேடுகளில் இருப்பதால் அதை மட்டும் வைத்து அவர்களுக்கு எதிராக நான் ஏதாவது நடவடிக்கை எடுக்க இயலுமா சொல்!
வேண்டுமானால் மற்ற பகுதி ஷெரீப்புகளுக்கு நான் தந்தி கொடுத்து இந்த தடியன்கள் அவர்களுடைய பகுதியினுள் நுழையும் பட்சத்தில் ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கலாம். அவ்வளவுதான்.
?!
வேடிக்கையாக இருக்கிறது உன் பேச்சு...! ஒரு மொள்ளமாறிக் கும்பல் ஒரு செவ்விந்தியனை கொன்று இன்னொருவனை குற்றுயிரும் குலையுயிருமாக அடித்துப் போட்டிருக்கிறது... நீயானால்
உங்களுடைய சகாக்களுக்கு எச்சரிக்கை விடுத்தால் போதும் என்று நினைக்கிறாய்....
கிண்டல் பேச்சு வேண்டாம் டெக்ஸ்... நான் வேறு என்னதான் செய்ய முடியும்?
என் எண்ணவோட்டம் உனக்குப் புரியாததல்ல.. ஆனால் நானோ 'நட்சத்திரத்தை' அணிந்து கொண்டிருக்கிறேனே..!
புரிகிறது ஜிம்...!
இம்மாதிரி பேச்சை இதற்கு முன் பல ஷெரீப்புகளிடமிருந்து நூறு முறையாவது கேட்டிருப்பேன்... உன்னை மாதிரி ஷெரீப்புகளோடு பேசுவது என்பது செவிடன் காதில் சங்கு ஊதுவது போன்று வெட்டிவேலை என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறேன்.


வா..! கோச்சு வண்டி வர இன்னும் நேரம் இருக்கிறது...
அதற்குள் போய் கொஞ்சம் பீர் ஊற்றிக் கொண்டு வந்துவிடலாம்.
வருகிறேன்... ஆனால் ஒரு நிபந்தனை... நான் தான் பணம் கொடுப்பேன்.
ஏன்.. இப்போதெல்லாம் சம்பளம் நிறைய கொடுக்கிறார்களோ?
அடுத்த மாதத்திலிருந்து உயர்கிறது..
நாற்பத்தைந்திலிருந்து ஐம்பத்தைந்து டாலராக...! மகிழ்ச்சியளிக்கும் சமாச்சாரம்தான் - இல்லையா?
சீக்கிரமே பெரும் சீமானாகிவிடுவாய் என்று சொல்!
SHERIFF
கேலியா...? பார்த்துக் கொண்டே இரு! என்னைக்காவது ஒரு நாள் சாக்கு நிறைய பணத்தோடு நான் ஸ்டைலாக கோச் வண்டியில் கிளம் பத்தான் போகிறேன்!
அப்போது திருடர்கள் பாங்கை கொள்ளையடிப்பதை விடுத்து உன்னை வழிப்பறி செய்வார்கள்!
SALOON
அதோ.. கோச்சு வண்டி வருது... கோச்சு வண்டி வருது!


ஆச்சரியமாக இருக்கிறது! இன்றைக்கு ரொம்ப சீக்கிரமாக வந்துவிட்டதே!
யிப்பீபீஈ... ய்ய்!
வந்திட்டது டோய்ய்ய்.....
TONSORIAL
...ஒரு மணி நேரம் முன்னாடி வந்திருக்கிறது.
உனக்குப் பாதகமான அம்சம் இது... ஜிம்
என் மகனும் வந்து சேர்ந்து கொண்டால் நீ நிறைய பீர் பாட்டில்களுக்கு பணம் கொடுக்க வேண்டி இருக்குமில்லையா? அவன் நல்ல தாகத்தோடு வருவான்!
அரை நிமிடம் கழித்து தடதடவென்று அசுரகதியில் வந்து சேர்ந்தது கோச்சு வண்டி...
விலகுங்கள்... வழியில் நில்லாதீர்கள்



மெதுவாக வருவதற்கென்ன...? எங்கள் மீது வண்டியை ஏற்றிவிட்டுப் போய்விடுவாய் போலிருக்கிறதே!
ஓரம்... ஓரம்..
SALOON
BARGER'S
ஷெரீப்பை கூப்பிடுங்கள் - சீக்கிரம்
அப்படியே டாக்டருக்கும் ஆள் அனுப்புங்கள்.
நடக்கக் கூடாதது நடந்து விட்டது...
துணை வரும் ஆள் எங்கே?
உள்ளே - பலத்த காயங்களோடு!
அட அநியாயமே!



வழித்துணை ஆசாமியின் நிலைமை படுமோசம்... ஓடி வந்து ஒரு கை கொடுங்கள்... கீழே இறக்க!
கிட் என்னவானான்?
இவன் லேரி ஸ்டாண்டன்..
ஜாக்கிரதையாக இறக்குங்கள்.
உடனடியாக டாக்டரிடம் கொண்டு போக வேண்டும்.
சண்டாளர்கள்... அதிரடியாக தாக்கிவிட்டார்கள்.
அதை பிறகு விபரமாக பேசிக் கொள்ளலாம்... முதலில் காயமடைந்த நபரை கவனிப்போம்.
கிட்... உனக்கு என்ன ஆயிற்று
டாடி...!



பதற வேண்டாம்... லேசா காயம்தான்!
டாக்டரிடம் போவோம்... வா!
வழித்துணை ஆசாமிக்குத் தான் பயங்கர காயம்...
அவன் பிழைத்துக் கொள்ள பிரார்த்தனை செய்வோம்!
டாக்டரிடம் உடனடியாக கொண்டு போங்கள். நிற்கக்கூட திராணியற்றவன் போல் சிரமப்படுகிறான்.
வா.
கவலைப் படாதீர்கள் டாடி.. தோளில் தோட்டா பாய்ந்த காயம் மட்டும்தான்.
டாக்டர் பரிசோதனை செய்து மருந்திடட்டும்!
யாரென்று தெரியுமா?
உங்களை அடியோடு வெறுக்கிறவன்!
நீ யாரை குறிப்பிடுகிறாய்?
எல் மியூர்டோவை...! அந்தக் கும்பலுக்குத் தலைமை தாங்கியவன் அவன்தான்!


இம்முறையும் அவன் தானா? ரொம்பவும்தான் வெறியாட்டம் போடுகிறான்!
அவனை உடனே அடக்காவிட்டால் பிரளயமே நிகழ்ந்துவிடலாம்.
வழிப்பறி செய்யும் கும்பல் அல்ல அது மிஸ்டர் வில்லர்.
உன் மகன் மீது ஏதோ ஒரு வகையில் குரோதம் இருக்கிறது அவர்களுக்கு.
கடவுளே
கிட்
கிட்
வெறும் மயக்கம்தான்! கணிசமான இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும்!
சீக்கிரம் உள்ளே கொண்டு வாருங்கள் மிஸ்டர் வில்லர்
விலகுங்கள்... வழிவிடுங்கள்.
அந்த எல் மியூர்டோ அரக்கன் என் கையில் சிக்கினால் மறுவினாடியே அவனை உயிரோடு புதைத்து விட்டுத்தான் மறு காரியம்... இது சத்தியம்.


சற்று நேரம் கழித்து -
அதிக இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது... ஆனால் பயப்படும்படியாக எதுவுமேயில்லை!
அந்தக் காயம்?
ரொம்ப சாதாரண காயம்... டாடி!
உன் மகன் சொல்வது சரிதான். தோட்டா அதிக சேதத்தை ஏற்படுத்தவில்லை!
என் மனப் பளு இப்போது தான் குறைந்திருக்கிறது. என் மகனை அக்கறையோடு கவனித்துக் கொள்வீர்களா மேடம்...?
இவனுக்கு இனி வேண்டியதெல்லாம் நல்ல ஓய்வு ஒன்றுதான். உடல் தேற இது மாதிரி அருமையான இடம் வேறு எங்கிலும் காண முடியாது. சமையல் கலையில் எலிஸாவை மிஞ்சியவர்கள் இந்த வின்கேட்டில் எவருமில்லை.
இதை எனக்கு கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன்!
இதெல்லாம் என்ன பேச்சு...? -
இங்குள்ளவர்கள் அனைவரும் ஒரு வகையில் உங்களுக்கு நன்றிக் கடன் பட்டவர்களாவோம்.


அப்படியில்லை மிஸ்டர் வில்லர்... நீங்கள் இல்லை எனில் இப்பிராந்தியம் இன்னமும் புரட்சி செவ்விந்தியர்கள், துரோகிகள், சமூக விரோதிகளின் பிடியில் சிக்கி தத்தளித்துக் கொண்டிருக்கும். நீங்கள் ஆற்றிய தொண்டை நாங்கள் மறந்தால் நன்றி கெட்ட பாவிகளாவோம்!
இந்த அம்மா சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை!
ஓ.கே. என் இதய பூர்வமான நன்றி!
இதைப் பற்றி இத்தோடு முடித்துக் கொள்வோம்!
நீங்கள் உங்கள் மகனைப் பார்க்க என் வீட்டிற்கு அடிக்கடி வருவதை எனக்கு கிடைத்த பாக்கியமாக கருதுவேன்!
மிக்க நன்றி!
உங்களுடைய சமையல் திரமையைப் பற்றிய டாக்டர் வழங்கிய பாராட்டை கேட்ட பிறகும் உங்களுடைய விருந்தோம்பலை நான் அலட்சியம் செய்ய எனக்கென்ன பைத்தியமா?
அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு மூவரும் வாசலை நோக்கி நடந்தார்கள்.
நடந்தது என்னவென்று உன்னிடமிருந்து கேட்டறிய துடியாய் துடிக்கிறேன் பேக்கர்...
ரசிக்கும்படியான கதையில்லை அது.
என் அலுவலகத்துக்கு வாருங்கள் - யாருடைய இடையூறும் இராது.



சற்று நேரம் கழித்து -
சம்பவம் நடந்தது... இங்கிருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவில் கிழவன் டங்கனின் குடிசை அருகே!
கடந்த பத்தாண்டு காலமாக பைத்தியக்காரனைப் போல் தங்கப் புதையலை தேடி அலைகிற ஆசாமிதானே!
அவனேதான்! எல்லோருக்கும் அவனுடைய இடம் பழக்கமாகி விட்டதாகையால், நின்று பேசிவிட்டுத்தான் போவார்கள். நானும் அவனுக்கு விஸ்கி பாட்டிலோ, புகையிலை பொட்டலமோ கொடுத்து விட்டு வருகிறதுண்டு.
பதிலுக்கு, தன் செவ்விந்திய நண்பர்களிடமிருந்து சேகரித்த சங்கிலிகள், கங்கணங்கள் போன்றவற்றை எனக்குத் தருவான்.
சரி... விஷயத்திற்கு வா.
இன்று காலை, குடிசையை நாங்கள் நெருங்கியபோது எல்லாமே இயல்பாகத் தான் காட்சியளித்தது... ஒற்றை கழுதை வழக்கம் போல் மரத்தில் கட்டப்பட்டிருந்தது. டங்கன் குடிசையின் முன்நின்று சூரிய ஒளியில் குளிர் காய்ந்து கொண்டிருந்தான்.


ஹலோ... நல்வாழ்த்துக்கள்!
ஹாய்ய்... டங்கன்!
விஸ்கியை வெளியில் எடு... கிழவன் தாகமாக இருப்பது போல் தோன்றுகிறது.
எல்லாம் நல்லபடியாக இருக்கிறதல்லவா?
ம்ம்...ம்ம்... - அதில் என்ன சந்தேகம்?
ஆனல் வெளிறிப் போயிருக்கிற உன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்ற வில்லையே?
சரி... சரி... இதைக் குடித்தாயானால் எல்லாம் சரியாகிவிடும் - இந்தா!
அளவுக்கு மீறி குடித்துவிடாதே என்று சொல் அவனிடம்


ஊற்றட்டுமா..?
நன்றி... தோழர்களே!
அப்படியே எங்களையும் கவனிக்கிறது!
எங்களுக்கு மட்டும் நாவறட்சி இருக்காதா என்ன?
செவ்விந்தியர்கள் குடிக்கக் கூடாது என்று சட்டம் இருந்த போதிலும் ஸ்கார் ஃபேஸுக்கு விஸ்கியில் நாட்டம் அதிகம்!
சத்தியமான வார்த்தை!
உனக்கு இத்தனை நண்பர்கள் இருப்பார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.
அவர்கள்... ம்ம்... வந்து...
நாங்கள் வழிப் போக்கர்கள்... இளைப்பாறிச் செல்லவே இங்கே தங்கினோம்!



அட.... அவன் ஸ்கார் ஃபேஸ் அல்லவா!
ஆச்சரியமாக இருக்கிறதே... மறுபடியும் உனக்குள்ளே சைத்தான் புகுந்து கொண்டதா?
சுருக்கமாக சொல்கிறேனடா... குட்டி வல்லூரே!
எதிர்காலத்தை வளப் படுத்திக் கொள்ள வெள்ளையர்களின் சகவாசம்தான் ஒரே வழி என்று இந்த ஸ்கார் ஃபேஸ் புரிந்து கொண்டான்.
குட்டி வல்லூறு? அதாவது.... கிட் வில்லரா?
பிரபல டெக்ஸ் வில்லரின் மகனா?
ஆமாம்.. அவனேதான்!
நல்லதாகப் போயிற்று...! உன்னை எதிர்பார்த்துத் தான் நாங்கள் ஆவலோடு காத்துக்கிடந்தோம்!
காரணம்?
ஓ... சொல்கிறேனே!


அழுத்தம் திருத்தமாக சொல்ல வாய் வார்த்தைகள் பிரயோசனப்படாது.
... சுலபமாக புரிய வைக்க இதுதான் சரியான வழிமுறை.
ஆ
கும்!
என்ன - புரிந்ததா?
சதக்
படுபாவி...! திடீரென்று வெறிபிடித்துவிட்டதா அவனுக்கு?
அடேய் அயோக்கிய சிகாமணிகளே... அப்படியே அங்கங்கே நில்லுங்கள்!
நான் ஒருவன் இங்கே இருக்கிறேனடா... உன்னை முடக்கிப்போட!


ஐயோ... லேரி!
டுமீல்!
துப்பாக்கியை கீழே எறி... இல்லையேல் இதுவே உன் கடைசிப் பயணமாக இருக்கும்!
சனியனே... உனக்கு என்னதான் வேண்டும்?
முதலில் உன் வாயை மூடு!
மேலும் மோசமான விளைவுகளை சந்திக்க ஆசையிருந்தால் மட்டுமே இங்கே நில்... இல்லையேல், தலைதெறிக்கும் வேகத்தில் ஓடிப் போய்விடு.
க்ராக்!
தொடைநடுங்கி உன்னோடு பேசி நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை!



நீங்கள் அந்த நாசகார ரேஞ்சரின் பெருமை மிக்க வாரிசை உண்டு இல்லை என்று பண்ணுங்கள்...
இவனை நான் 'கவனி'க்கிறேன் பாஸ்!
கிட்டே வா... நான் யார் என்று புரிய வைக்கிறேன்.
ஹெக்..!
ஜாக்கிரதை!
?!
?
சண்டாளா!
?!



சுலபமாக புரிய வைக்கும் வழிமுறை இதுதான் என்று நீதான் எனக்கு கற்றுக் கொடுத்தாய்...!
தொப்
இது - உனக்கு!
சதக்
எழுந்து வந்து பிடியுங்கள் இவனை..
உன்னை நான் கவனிக்கவில்லையே என்ற ஆதங்கமா?
செ..த்..தே..ன்!
ஆனாலும் உன் எலும்புகள் உறுதியானவைதான் ஸ்கார் ஃபேஸ்
ஆ...ஆ
படீர்
அடேய்.... பொடியா - ரொம்பவும்தான் துள்ளுகிறாய்...! உன்னை


பன்றி மாதிரி கொழுத்து விட்டால் போதுமா...?
சாதுரியம் வேண்டுமடா... எருமைக்கடா!
சதக்
உன் போன்ற சுண்டெலிகளை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று எனக்குத் தெரியும்.
உன்னைப் போன்ற விஷப் பூச்சிகளை ஒடுக்கும் வழி எனக்கும் தெரியுமடா...
கத்தியையா எடுக்கிறாய் - அதை வீசி எறி கீழே!
இதோ - உன்னிஷ்டப்படியே...!


ஆஆ...
சதக்!
ஜாக்கிரதை...! பிஸ்டலை எடுக்க முயற்சிக்கிறான்!
விடாதீர்கள்!
அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்
விஷத்தேள் - நாசமாகப் போக
உன்னை இது நிச்சயம் முடக்கிப்போடும்!
டுமீல்
அத்தோடு பணிவையும் உனக்கு கற்றுக் கொடுக்கும்
சைத்தானே -
ஆ ஆ ஆ!


அறிவு கெட்ட முண்டம்!
டுமீல்
அவனை கொன்றுவிடக் கூடாது என்று நான் உங்கள் எல்லோரிடமும் வலியுறுத்திச்சொல்லி யிருந்தேனில்லையா?
ஆத்திரப்பட வேண்டாம் பாஸ்... பயலுக்கு தோளில் காயம் - அவ்வளவுதான்!
பிழைத்தீர்கள்! சரி... இனியும் நமக்கு இங்கே வேலையில்லை.
அவனைத் தூக்கி வண்டியின் உள்புறம் போடுங்கள்.
பயலை கிராமத்துக்கு பத்திரமாக கொண்டு போய் சேர்ப்பதோடு அவனுடைய அப்பாவிடமும் தகவலை சொல் - போ!
எவ்வளவு பெரிய தப்பை செய்திருக்கிறாய் என்று புரியவில்லையா உனக்கு!



டெக்ஸ் வில்லரின் மகனை நீ சுட்டிருக்கிறாய்... உலகின் எந்த மூலையில் போய் நீ பதுங்கினாலும் விடாமல் துரத்தி வந்து உன் தோலை உரிக்காமல் ஓயமாட்டார் அந்த ரேஞ்சர்!
அவன் அவ்வளவு தூரம் சிரமப்படத் தேவை யில்லை. என்னை சந்திக்க அவனுக்கு ஆர்வம் இருந்தால் ப்யூப்லோ பெலிஸுக்கு வந்தால் போதும்.
பூட் ஹில்ஸ் கிராமத்தில் அவனை எதிர்பார்த்து காத்திருப்பேன் என்று சொல்.
இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நான் அங்கே போய்ச் சேர்ந்து விடுவேன். வரும்போது உற்றார், உறவினர்களிடம் இறுதியாக விடை பெற்றுக் கொண்டு புறப்படச் சொல்!
நான் சொன்னதை புரிந்து கொண்டாயல்லவா?
புரிந்தது...! ஆனால் நான் உனக்கு ஒன்று சொல்ல...
மூடு வாயை... உன்னைப் போல் தின்று கொழுத்த கடா மாடுகளின் ஆலோசனை இந்த எல் மியூர்டோவுக்கு தேவையில்லை.. மம்... ஓடிப்போ - இங்கிருந்து.
டுமீல்


உயிர்மீது ஆசையிருந்தால் முடிந்தவரை வேகமாக வண்டியை ஓட்டு...
டுமீல்
யா...ரா...
டுமீல்
டுமீல்
டுமீல்
திரும்பி பார்க்கக் கூடாது - ஜாக்கிரதை!
யா...யா...ர...
டுமீல் டுமீல்
விஷப் பாம்புகள்...
டுமீல்
பிடியுங்கள்... ஓட்டம்!
யா...ர...ர...ர...
டுமீல் டுமீல்



நடந்தது இதுதான் வில்லர்... நான் தலையிட்டு ஏதாவது செய்ய முடியாமல் போனதைப் பற்றி எனக்கு ஏற்பட்ட மன வருத்தத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது!
உன் நிலைமையை புரிந்து கொள்ள முடிகிறது....
அவர்கள் யாரென்று யூகிக்க முடிகிறதா!
இல்லை... டைகர் அரை உயிராக இங்கே வந்து சேர்ந்தது முதல் அந்தக் கேள்விதான் எந்த நேரமும் என்னுடைய சிந்தனையாக இருந்து வருகிறது.
ஆனால் யோசித்து யோசித்து தலை வலி கண்டதுதான் மிச்சம்..
SHERIFF
ஸ்கார் ஃஃபேஸ் அந்தக் குழுவில் இருந்தான் என்பது நிறைய விஷயங்களை விளங்கிக் கொள்ள வகை செய்கிறது.
அவன் உங்கள் இனத்தை சேர்ந்தவனில்லையா?
ஆமாம்...! ஆனால் சுயலாபத்திற்காக எதிராளிகளுக்கு என் மகனைப் பற்றியும், டைகரைப் பற்றியும் தகவல் தந்திருக்கிறான் அந்த இனத்துரோகி.



அந்த விஷமிகளைப் பற்றி தகவல் கொடுக்குமாறு நாம் ஏன் ரேஞ்சர்களுக்கு வேண்டுகோள் விடுக்கக்கூடாது?
அருமையான யோசனை...! அப்படியே நீ பிங்கர்ட்டனின் ஆலோசனையையும் கோரலாம்!
யோசனைகளுக்கு நன்றி...! ஆனால் என் வழியே வேறு!
அந்த தெரு நாய்களின் மகன்கள் ஐவரையும் பரலோகம் அனுப்ப தனியொருவனாக என்னால் முடியாதா என்ன?
ரேஞ்சர்களின் தலைமையகமோ பிங்கர்ட்டன் ஏஜென்ஸி போன்ற ‘பெரிய’ மனிதர்களோ இவ்விஷயத்தில் எனக்கு எவ்வகையில் உதவ முடியும் என்று நினைக்கிறீர்கள்!
வீண் கால விரயம்தான் ஏற்படும்! நேரடி நடவடிக்கையில் நானே இறங்குவதுதான் நல்லதொரு முடிவு ஏற்பட சரியான வழிமுறையாகும்.
மிஸ்டர் எல் மியூர்டோ என்னோடு சண்டை போட ஆசைப்படுகிறானா...? ஓ.கே.... சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல... காலக்கெடுவுக்கு முன்னாலேயே அங்கே போய் நான் காத்திருக்கப் போகிறேன்!


இனியும் அவன் அப்பாவிகளை அடித்து நொறுக்கி எனக்கு தூது அனுப்ப அவகாசமே கொடுக்காமல் முந்திக் கொண்டு இலக்கை சென்றடைந்து, என்ன தான் நடக்கிறது என்று அவன் சுதாரித்துக் கொள்ளுமுன் அதிரடியாக அவன் மீது பாயப் போகிறேன்.
'நீயா - நானா' சவாலுக்கு என்னை அழைத்த அந்தப் பேடிக்கு பரலோகத்திற்கு வழிகாட்டி விட்டுத்தான் திரும்புவேன்.
கிட்டை அவர்கள் தாக்கிய இடம் இதுதான்.
இதோ இங்கே உள்ள பாழடைந்த கட்டிடங் களைத்தான் அந்த நீசர்கள் தங்கள் மறைவிடமாக பயன்படுத்தக் கூடும்..
ஒதுக்குப் புறமான இடம் அது... அங்கே போய்ச் சேர அந்த கிராதகன் கைபிடோ பள்ளத்தாக்கை கடக்க வேண்டும்.
பின்னர் எக்கோ ஹில்ஸின் தென்புறமாகத் திரும்பி பாலைவனப் பகுதியை கடந்து செல்லும் பாதை வழியே பயணம் செய்ய வேண்டும்.
ஆமாம்...!



அப்படியானால், கைபிடோ சாலை வழியாக நான் போனால் பியூப்லோ பெலிஸை அவர்கள் வந்தடைவதற்கு ஒருநாள் முன்னதாகவே நான் சென்றடைந்துவிட முடியுமல்லவா?
நிச்சயமாக!
ஆனால் பாதை படு மோசமானதாயிற்றே... ஒரு பயல் கூட அந்த வழியாக தனியாக செல்லத் துணிய மாட்டானே.
48 மணி நேர அவகாசம் எனக்குக் கொடு... உனக்குத் துணை வர ஒரு டெபுட்டியையும், அரை டஜன் தொண்டர்களையும் ஏற்பாடு செய்கிறேன்.
அவசியமேயில்லை...
அந்த பிராந்தியத்தின் அமைப்பு எனக்கு அத்துபடி... சரிவில் உருண்டு நரகம் வரை போய்ச் சேரவோ, நீரோடையை தவறான இடத்தில் கடக்க முயன்று உயிரை விடவோ நான் மடையனில்லை.
தொண்டர்களை துணைக்கு அனுப்பி எனக்கு உதவ நினைப்பது புரிகிறது - நன்றி! ஆனால் அது தேவையில்லை


இது என் சொந்த விவகாரம்! எனக்கும் இன்னாரென்று இனம் தெரியாத எதிரிக்கும் இடையேயுள்ள பிரச்சனை!
மற்றவர்களை இதில் ஈடுபடுத்தி உயிரை பணயம் வைக்க எனக்கு இஷ்டமில்லை.
உன்னிடத்தில் நான் இருந்தால் சற்று விவேகத்தோடு செயல்படுவேன்.
அந்த பயல் தனியாக இல்லை. அவனையும் விட படுமோசமான ஈனப் பிறவிகளோடு கும்பலாக இருக்கிறான்!
அதனால் என்ன...?
அவன் கருநாகம் என்றே வைத்துக் கொண்டாலும் '45'ரக தோட்டாவுக்கு முன் எம்மாத்திரம்?
ஒன்று நிச்சயம்! என்னைக் கொல்லும் சந்தோஷத்தை அவனுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிடமாட்டேன்!
அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது!
அதிர்ஷ்டம் உனக்கு துணை புரிய வாழ்த்துகிறேன்!
நன்றி!


வழியில் உனக்கு இது கிடைக்குமா என்பது சந்தேகம்தான் - தாராளமாக பருகிவிட்டுப் போ.
அருமையான யோசனை...
டக்கரான சரக்கு இது... மளக் என்று விழுங்கி விட்டாயானால் தப்பித்தாய். இல்லையேல் நாக்கு நொடியில் புண்ணாகிப் போகும்.
போதை குப்பென்று ஏறும் என்று சொல்!
குட் லக்... நண்பனே!
நன்றி... உங்களுடைய நலனுக்காக...!
எல்லாம் நல்லபடியாக நடக்கட்டும்!
அந்த ராஸ்கலை சீக்கிரம் நான் சந்திக்க அதிர்ஷ்டம் எனக்கு வாய்க்கட்டும்.
சரி... நான் புறப்படுகிறேன்.
இன்னும் கொஞ்சம் ஊற்றட்டுமா?



இப்போது வேண்டாம்... திரும்பி வந்த பிறகு வெற்றியைக் கொண்டாடும் போது வைத்துக் கொள்வோம்!
எதிர்பார்த்து காத்திருப்பேன்..!
ஷெரீப் ரொம்பவும்தான் அலட்டிக் கொள்வதாக தெரிகிறது
பாதை படு மோசம் என்று அவன் சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான்.. ஆனால் அதைவிட மோசமான பயணங்கள் பல மேற்கொண்ட அனுபவம் இருக்கிறதே எனக்கு!
நேரே நரகத்திற்கு அது என்னை இட்டுச் செல்வதானாலும் நான் பின்வாங்கப் போவதில்லை.
ம்ம்... கிளம்புடா.. ராஜா!
ஹீ ஈ ஈ...


எக்கோ ஹில்ஸை நோக்கி குதிரையை நாற்கால் பாய்ச்சலில் செலுத்திக் கொண்டு விரைந்தார் டெக்ஸ்.


கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்... அந்தப் பன்றிகள் ப்யூப்லோ பெலிஸை சென்றடைவதற்குள் நாம் முந்திச் சென்று சேர்ந்துவிட வேண்டியது அவசியம்!


நீ மட்டும் இதை சாதித்து விட்டாயானால் பதிலுக்கு நான் உனக்கு இந்த விவகாரம் ஓய்ந்தபின் முழுதாக இரண்டு வாரங்களுக்கு ஓய்வு கொடுக்க தீர்மானித்திருக்கிறேன்.



ஒரு மணி நேர பயணத்திற்குப்பின் மலையடி வாரத்தை தொட்டுவிட்ட டெக்ஸ் குதிரையை மேட்டில் செலுத்தினார்.
சோர்வடையாதேடா... ராஜா!
கடுமையான முயற்சி! ஆனாலும் அது அத்யாவசியம்தான்!
அனாமதேயங்கள் என்னை சவாலுக்கு அழைக்கின்றன.
அவர்களுக்கு நான் யார் என்று புரிய வைப்பேன்.
மலைத் தொடர்ச்சிகள் பலவற்றை கடந்த பின்னர் பாலைப் பகுதியினுள் பிரவேசித்தார் டெக்ஸ்
இன்னும் பத்து மைல் கடந்து விட்டோமே யானால் க்ராபி க்ரீச் போய்ச்சேர்ந்து விடலாமடா...!



சூரிய அஸ்தமன வேளைக்கு சற்று முன்னதாக ஆற்றை கடக்க நேரிட்டது.
கரையேறிவிட்டால் அப்புறம் மிச்ச தூரத்தை சுலபமாக கடந்துவிடலாம்.
ஹிஹிஹிஈஈஈ...
சற்று நேரம் கழித்து -
இன்றைக்கு ரொம்பவும் தான் கஷ்டப்பட்டு விட்டோம். ஆனால் நாளைக்கு இவ்வளவு கஷ்டம் இராது.
எளிய உணவை சாப்பிட்டு முடித்த டெக்ஸ் போர்வையால் இறுக போர்த்துக் கொண்டு படுத்துவிட்டார்... மறு நிமிடமே தூக்கம் அவரை அரவணைத்துக் கொண்டது.
கிழக்கு வெளுத்ததும் மீண்டும் பயணம் தொடங்கிவிட்டது.
உற்சாகம் கொள்ளடா ராஜா... மதியத்திற்குள் நாம் ஸன்ஸெட் வில்லா போய்ச் சேர்ந்துவிடலாம்!


சில மணி நேரம் கழித்து -
இங்கே நாம் பூரண ஓய்வெடுத்துக் கொள்ளலாம். அத்தோடு லார்க்கிடமிருந்து ஏதாவது உருப்படியான தகவல் கிடைக்குமா என்று நான் கேட்டுப் பார்க்கலாம்.
SALOON
அதையடுத்து -
ஹலோ.. லார்க்... கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி வந்து சேர்ந்திருக்கிறாய்!
பிரச்னையா?
ஐந்து விஷமிகளை தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்.
அடடே..!
நான்கு வெள்ளையர்களும் ஒரு செவ்விந்தியனும்...! நீ அவர்களை இங்கே பார்த்தாயோ?
இல்லையே... டெக்ஸ்!
அவர்களைப் பற்றி இங்கே விபரம் கிடைக்கும் என்று ரொம்பவும் நம்பிக்கை கொண்டிருந்தேன்.



ரௌடி கும்பலா?
உடனடியாக வெட்டிப் புதைக்க வேண்டிய சனியன்கள்
பன்றிக்கும் கருநாகத்திற்கும் பிறந்த, ஈன ஜந்து போல் இருப்பான் அந்தக் கும்பலின் தலைவன்.
ஹம்ம்... இங்கே அப்படி யாரும் வரவில்லையே.
அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். நான் அவர்களை முந்திக் கொள்ளவே விரும்பினேன்.
நிச்சயமாக அவர்கள் இங்கே வருவார்கள் என்கிறாயா?
ஹம்ம்... அவர்கள் ஆபத்தான பேர்வழிகளோ?
அந்த விஷயத்தில் என் குதிரையை உன் பீற்றல் தொப்பிக்கு நான் பந்தயமாக வைக்கத் தயார்.
அதுதான் கருநாகங்கள் என்று சொன்னேனே
சண்டாளர்கள்
அவர்கள் மனம் மாறி வேறு பாதையில் போய்விட பிரார்த்தனை செய்யத் தோன்றுகிறது எனக்கு.


சரி.. நான் எதற்கும் விழிப்போடு இருக்கிறேன். அவர்களுடைய தலை தென்பட்டால் உடனே உனக்கு தகவல் வரும்.
நன்றி லார்க்... பிறகு பார்ப்போம்.
எங்கே எலிபெண்ட் பாலஸுக்குத்தானே?
வேறு இடம் ஏது இங்கே?
அரிஸோனாவிலுள்ள புழுதி மொத்தமும் என் உடம்பின் மீதுதான் படிந்திருக்கிறது... குளியல் தொட்டி மாதிரியான ஒன்றை நான் அங்கேதான் காணமுடியும்.
குளித்து முடித்த பின் வா... ஜில்லென்று பீர் தருகிறேன்.
RED
நிச்சயமாக வருவேன்...!
சென்று வா!
ஒரு வழியா வந்து சேர்ந்துவிட்டோமடா...!
LIVERY STABLE


செலவு எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை... கைவசம் இருப்பதில் அருமையானதை தீனியை இதற்குக் கொடு!
ஓ... தாராளமாக!
அடுத்து நான் என்னை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்!
வாடிக்கையான வழித்தடத்தில் அவர்கள் வந்தால் நாளை விடிவதற்கு முன் இங்கே வந்துசேர சாத்தியமேயில்லை. நான் என்ன செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறேனோ அதை செய்து முடிக்க போதிய அவகாசம் இருக்கிறது எனக்கு!
STORE
ஹலோ... மிட்செல்!
அடடே... நீங்களா?
மறுபடியும் உங்களை பார்க்க எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?
எனக்கு மட்டும் என்னவாம்?


கிராமத்தின் தெற்கு நுழைவாயிலை பார்க்கிற மாதிரி அறை ஏதாவது இருக்கிறதா மிட்செல்?
எப்போதுமே ரௌடிகள் வேட்டைதானா?
துரதிர்ஷ்டவசமாக திரும்பிய பக்கம் எல்லாம் அவர்களாகத்தான் இருக்கிறார்கள்!
இம்முறையும் வேட்டையில் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்.
இந்தாருங்கள்... பன்னிரெண்டாம் நம்பர் அறை சாவி... ஜன்னல் வழியாக பார்த்தால் பிரதான சாலையின் நுழைவாயில் தெள்ளத் தெளிவாகத் தெரியும்.
சபாஷ்...!
இது மாதிரியான கண்காணிப்பு மையத்தில் நான் இருக்கும் போது என் பார்வையில் படாமல் ஒரு பயல் உள்ளே நுழைய முடியாது.
இன்னொரு விஷயம்...! குளியல் தொட்டி என்று நீ சொல்வாயே அந்தத் தொட்டி இன்னமும் இங்கே இருக்கிறதா?
வேறொன்று வாங்கிப் போட்டிருக்கிறோம்... ஸ்டார் ஹோட்டல்களில் இருக்கிற மாதிரி புத்தம் புதிதாக... கண்ணைப் பறிக்கும்!


அப்படியா... ரெடி பண்ண எவ்வளவு நேரம் பிடிக்கும்?
இதோ... பத்தே நிமிடத்தில் வெந்நீரை நிரப்பி ரெடி பண்ணி விடுகிறேன்!
வெந்நீர் போதாது மிட்சேல்... கொதிநீர் தேவைப்படலாம்
அழுக்கை நீக்குவதோடு தொய்ந்து போயிருக்கும் என் உடலிலிருந்து களைப்பை விரட்டி அடித்து நரம்புகளில் முறுக்கேற்ற வேண்டும்!
ஓ.கே... அப்படியே ரெடி பண்ணிவிடுகிறேன்!
அரை மணி நேரம் கழித்து
ஆகா... என்ன இதம்.. என்ன சுகம்!
குளியல் என்றால் இது தான் குளியல்!
வேறு வேலை இல்லையெனில் இதைவிட்டு லேசில் எழுந்திரிக்க மனம் வராது..
ஆனால்... சுகம் அனுபவிக்க இது தருணம் அல்ல.


லார்க் உருப்படியான தகவல் ஏதாவது சேகரித்திருக்கக் கூடும்...
அகோரப் பசி...
...தாமதித்தால் சிறு குடலை பெருங்குடல் விழுங்கிவிடக் கூடும்!
சீக்கிரம் கிளம்ப வேண்டும்
பீரோடு வயிற்றை நிரப்ப நிச்சயம் வேறு ஏதாவது வைத்திருப்பான் லார்க்!


டுமீல்
?
என்ன விபரீதமோ - திடீரென்று தோட்டா முழக்கம் கேட்கிறதே
மொடாக் குடியன் எவனாவது தான் எப்போதும்
சந்தோஷமாகத்தான் இருப்பதாக மற்றவர் களுக்கு நிரூபித்துக் காட்ட போடும் வெறியாட்டமா?
சண்டாளன் - சரமாரியாக சுடுகிறானே
டுமீல் டுமீல்
அதே வினாடியில் - தெருவில் எழுந்த கூப்பாடு டெக்ஸின் செவியை எட்டியது.
ஷெரீப்...!
ஷெரீப்பை சுட்டுவிட்டார்கள்!
அட.... அநியாயமே!


ஓடி வாருங்கள்... லார்க்கை சுட்டுவிட்டார்கள்!
டாக்டரை கூப்பிடுங்கள்... சீக்கிரம்!
அக்கிரமம்...
நிச்சயம் அந்த சைத்தான்களின் விஷமமாகத்தானிருக்கும்.



மிஸ்டர் வில்லர்... என்ன விபரீதம் இது?
...வந்து சொல்கிறேன்!
போய் பார்த்தால்தான் தெரியும்!
KINON'S
GENERAL STORE
மூச்சு வருகிறது... இன்னமும் உயிர் இருக்கிறது.
ஷெரீப்... தைரியமாக இருங்கள்... இதோ டாக்டர் மில்டன் நொடியில் வந்து விடுவார்.
விலகுங்கள்... தயவு செய்து வழிவிடுங்கள்.


லார்க்...!
வில்... வில்லர்!
சரி... இது எப்படி நடந்தது.
அவர்கள்தான்... வந்துவிட்டார்கள்
நீ சொன்னது சரிதான்... சரியான விஷப்பாம்புகள்- அத்தனை பேரும்!
நீ...நீ...நிச்சயமாக...
ஆ..ஆ
லார்க்...
லார்ர்க்க்!
பாவம்...! போய்விட்டான்!


செத்து விட்டார்!
ஆமாம்... நீண்ட காலமாக முறையான சட்ட பரிபாலனம் செய்து வந்த ஒரு நல்ல மனிதரின் பெருமைக்கு ஒவ்வாத மரணம் இது!
இப்படி ஒரு அடாவடி பேர்வழிகளை நான் பார்த்ததேயில்லை... அவர்கள் கிராமத்தினுள் நுழைய முற்பட்டபோது ஷெரீப் எதிர்ப்பட்டார்.
ஷெரீப் தப்பாக எதுவுமே செய்யவில்லை.
உராங் உடான் மாதிரி இருந்தவனிடம் ஏதோ ஒரு கேள்விதான் கேட்டார்.
சுலபத்தில் மறந்துவிட முடியாத காட்சி அது.
எந்த வழியாக அந்த சைத்தான்கள் ஓடிப் போயினர் - தெரியுமா?
அவர்கள் எங்கேயும் ஓடிப் போகவில்லை மிஸ்டர்! அங்கே மதுபானக் கடையினுள்ளேதான் இருக்கிறார்கள்.


நீங்கள் எல்லாம் என்ன மனிதர்கள்? அவர்களானால் உங்கள் ஷெரீப்பை படுகொலை செய்திருக்கிறார்கள்.
ஆனால் நீங்களோ அவர்களுக்கு எதிராக சுண்டு விரலைக் கூட அசைப்பதாக இல்லை?
எங்கள் மீது பழி சுமத்தாதீர்கள்... அந்த நீசர்களை எதிர்ப்பது என்பது நமக்கு நாமே சவக்குழி தோண்டிக் கொள்வதற்கு ஒப்பாகும்!
MURRHY
நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்...! நான் வேறுவிதமாக நிரூபித்துக் காட்டுகிறேன் - இப்போதே!
வேண்டாம்... அங்கே போகாதீர்கள்.
உங்களையும் கொன்று விடுவார்கள்.
அதையும்தான் பார்ப்போமே!
அற்ப பூச்சிகளாக பதுங்கி வாழ்வதைவிட வீர ஆண் மகனாக சாவது பெருமை அல்லவா?
MERMAID SALOON



ஹூம்... இவருக்கு என்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா?
இல்லாவிடில் வாழ்க்கை வெறுத்துப் போயிருக்கலாம்.
உங்களுக்குத்தான் புத்தி போதாது... அவர் டெக்ஸ் வில்லர் என்பது தெரியாதா?
என்ன டெக்ஸ் வில்லரா?
பிரபல ரேஞ்சர்?
ஆமாம்...!
அப்படியா! நல்லவேளை... ஷெரீப்பை கொன்ற கும்பலில் ஒருவனாக நானில்லை!
உள்ளே, இஷ்டத்திற்கு அட்டூழியம் பண்ணு கிறார்கள் என்று தோன்றுகிறது.
MERMAID SALOON
டுமீல் டுமீல்


டுமீல்
டுமீல்
!
டுமீல்
அந்த ஈனப் பிறவிகளின் உடம்பில் ஓடுவது இரத்தமாக இராது. நிச்சயம் விஷமாகத் தானிருக்கும்!
இருதயம் இருக்க வேண்டிய இடம் பாலைவன வெளியாக இருக்கும்.
டுமீல்


அடுத்து அவனை கவனியுங்கள்!
டுமீல்!
ஆட்டம் சுவாரஸ்யமாக இருக்கிறது... இடையில் நிறுத்திவிடாதீர்கள்!
டுமீல்
டுமீல்
டெக்ஸ் வில்லர் என் எதிரில் நின்றால் அவன் தலையை இப்படித்தான் குறி வைப்பேன் ஹீ...ஹீ...ஹீ..
டுமீல்
அவனை நாம் எதிர் கொள்ளும் வேளையில் பட்டாசு, வாண வேடிக்கை எப்படி அட்டகாசமாக இருக்கும் தெரியுமா?
டுமீல்


ஐயோ... இத்தோடு நிறுத்துங்களேன்... ஒரேயடியாக என்னை நாசமாக்கி விட்டீர்களே!
என்ன சொல்கிறான் கேட்டாயா?
எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுகிறான் கிழவன். அவனுக்கு அந்தக் கஷ்டத்தை நாம் கொடுக்கப் போவதில்லை. ஹி... ஹி... ஹி...
நான் நினைத்தால் உன்னை இப்படியே பரலோகம் அனுப்பி விட முடியும்...! அனுப்பி விடட்டுமா?
நீ... நீ... -
அற்பப்புழு - தொலைகிறான்! - விடு!
கேட்டாயாடா?
டமார்
விலகிப் போ அப்பால்.


பளார்!
டமார்!
விடுங்கள் அவனை!
இவன் நமக்கு ஏதாவது ஒரு வகையில் பயன்படலாம்!
நான் சொல்வது காதில் விழுகிறதாடா... கிழட்டு முண்டமே!
ம்ம்... விழுகிறது!
சரி... டெக்ஸ் வில்லர் என்று ஒரு தலைக்கனம் பிடித்தலையும் தறுதலையை தெரியுமா உனக்கு?
தெ..தெரி..யும் ஸார்!



சபாஷ்! அவன் ஒருவேளை இங்கே வந்தான் என்றால் அவனிடம் சொல்...
...தோட்டாக்களால் அவனுடைய மூளையை சிதறடிக்கும் ஆசையோடு நான் ஒருவன் காத்துக் கொண்டிருப்பதாக!
அதற்கு அவசியமே யில்லை அற்பப் பதரே... இதோ - நானே நேரில் வந்து விட்டேன்!
நே...!
''இரவுக் கழுகு''
?!
சைத்தான்!
என்ன பேச்சைக் காணோம்... நாக்கு வறண்டு விட்டதோ!


பாஸ்... ஜாக்கிரதை!
ஓ... நீதான் டெக்ஸ் வில்லரா?
இதோ - அவனை நொடியில் பிணமாக்கிவிடுகிறேன்.
டுமீல்
என்னைப் பற்றி உனக்குச் சொன்னவர்கள் சரியான தகவல் கொடுக்கவில்லை போலிருக்கிறது!
உடனடியாக பரலோகம் போய்ச் சேர அவசரப் படுகிறவர்கள் மட்டுமே துப்பாக்கியில் கை வைக்கலாம்...


என் துப்பாகி விசை ரொம்பவும் துடிப்பானது... ஜாக்கிரதை!
கைகளை உயர்த்துங்கள்.. பார் மேன் உங்கள் துப்பாக்கிகளை சேகரித்துக் கொள்ளட்டும்!
ரேட் க்ளிப்... தைரியமாக போ!
ஓ...!
நான் இருக்கிறேன் - பயப்படாதே!
சனிப் பயல்


அதோ.. நடமாடும் பிணம்போல் காட்சியளிக் கிறானே தலைவன் அவனிடமிருந்து ஆரம்பி.
உராங் உடான் தேவலை!
ரேட்க்ளிப் துரதிர்ஷ்டமாக டெக்ஸ் வில்லருக்கும் அந்தக் கயவனுக்கும் குறுக்கே புகுந்தான்...
...சட்டென்று அந்த தவறை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு விட்டான் எதிரி!
பிரமாதம்!
வில்லர்..!
முட்டாள்!
ரேஞ்சர்..! நில் அப்படியே!
?!
நகர்ந்தாயோ இவனுடைய பூசணிக்காய் மண்டையை சிதறடித்துவிடுவேன்.


என்னுடைய் துப்பாக்கி விசையும் துடிப்பானது - எச்சரிக்கிறேன்!
துள்ளாதேடா... முண்டமே!
வில்லர்!
உன் துப்பாக்கியை கீழே போடு!
அவன் இஷ்டப்படியே நடக்கட்டும்... பதறாதே ரேட்க்ளிப்!
ஐயோ... தெய்வமே!
நீ ஓர் இமாலய தவறு பண்ணிவிட்டாய்... ஆனால் அதன் விளைவு உன்னை பாதிக்கலாகாது!
இதோ - எறிந்து விட்டேனடா... உன் இஷ்டப்படியே!
ஆங்.. சமர்த்து!


தூள் கிளப்பிட்டீங்க... பாஸ்.
பயலை சுலபமாக சரணடைய வைத்துவிட்டீர்களே.
நெஞ்சுக்குள்ளே கொதிப்பாக இருக்கிறதோ?
பரலோகம் கண்ணுக்கு தெரிய ஆரம்பித்திருக்குமே!
என் கையை காயப்படுத்தின உன்னை பழி வாங்காமல் விடமாட்டேன்.
உன்னுடைய துப்பாக்கியாலேயே உன் கதையை முடிப்பேன்
அந்த பிஸ்டலை தொடாதே.. கிறிட்டி!
டீங்!
அவனைக் கொல்ல நான் காத்திருப்பதை மறந்துவிட்டாயா?
நாசமாகப் போக...


அந்த அக்கிரமக்காரனின் உள்நோக்கம் என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே!
ஆனால்... இன்னும் ஏன் தயக்கம்?
இந்த ரேஞ்சரை தேடி அரிஸோனா முழுக்க காடு மேடு என்று கஷ்டப்பட்டு அலைந்தோம். இப்போது ஒரு வழியாக கண்டு பிடித்துவிட்டோம்... இன்னும் ஏன் தாமதம்?
கிறிட்டியின் கேள்வி நியாயம்தானே பாஸ்?
நாம் எண்ணிக் கொண்டிருந்ததைவிட வில்லர் படு ஆபத்தான பேர்வழி என்று இப்போது தெரிந்து கொண்டோம்... கிடைத்திருக்கும் முதல் வாய்ப்பிலேயே ஒழித்துக் கட்டி விடுவதுதான் நமக்கு நல்லது!
உங்களுடைய பிஸ்டலுக்கு எதிரே நிராயுதபாணியாக நிற்கும் அவனை சுட்டு வீழ்த்த என்ன தயக்கம்?
மூடு வாயை! இது என் சொந்த விஷயம்... யாரும் மூக்கை நுழைக்க வேண்டாம்!


பாஸ் நான் உத்தரவிடுகிறேன்... போய் குதிரையை தயார் செய்யுங்கள்.
உங்கள் இஷ்டம்!
என்ன இழவோ!
நீ என்னை பின் தொடர்ந்து வந்து மடக்காமலிருக்க இந்த தடியனையும் கூடவே அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்.
அநியாயம்...! விட்டு விடு - என்னை!
புலம்பாதே! நீ மட்டும் துள்ளாமலிருந்தால் உனக்கு எந்த ஆபத்தும் வராது!
?!
நட...! நாளை உன்னை ப்யூப்லோ பெலிஸ் சந்திப்பில் விட்டுச் செல்கிறேன்!
எப்படியோ தப்பித்துக் கொண்டுவிட்டாய்... - இம்முறை!


ஹலோ ரேஞ்சர்... நம் சந்திப்புக்கு வைக்கப்பட்டுள்ள கெடு ஞாபகம் இருக்கிறதல்லவா?
நாளை சூரிய அஸ்தமன வேளையில் ப்யூப்லோ பெலிஸில் உள்ள இடுகாடு!
தப்பாமல் வந்து சேருவேன்!
நீ யார்.. எதற்காக என்னை இப்படி அடியோடு வெறுக்கிறாய் என்று எனக்கு விளங்க வில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி...
...உன்னை என் பிஸ்டலுக்கு பலி கொடுக்காதவரை எனக்கு வேறு எதிலும் நாட்டம் இராது!
அதையேதான் நானும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
வரும்போது மறக்காமல் உயிலை எழுதி வைத்துவிட்டு வா...!
உன்னை எங்கே புதைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போ!
அவருக்கு எவ்வித தீங்கும் நேரிடக்கூடாது...


நீ இங்கிருந்து நகராதவவைர பத்திரமாக இருப்பான்...
அதில் உனக்கு சந்தேகமே வரவேண்டியதில்லை.
ரேட்கிளிப்... உனக்கு எந்த ஆபத்தும் வராது- தைரியமாகப் போ... விரைவிலேயே மீண்டும் சந்திப்போம்...
ம்ம்... நட
ரேஞ்சர் தன் வாக்கை காப்பற்ற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்...
சீக்கிரம் நாம் புறப்பட்டு விட வேண்டும்... பாஸ்.. ஜனங்கள் குவியத் தொடங்கிவிட்டனர்.
வரட்டுமே...! நமக்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டால் தோட்டாவால் பதில் சொல்வோம்!



மறு நிமிடம் -
ம்ம் - கிளம்புங்கள்
யீயீயீஹீஹீ...
எங்களை தடுத்து நிறுத்த யாரும் முயற்சித்தால் நேரே பரலோகம்தான் - ஜாக்கிரதை
?!
!?
விலகுடா...
யாயாஹிஹி...
ம்ம்... ஒதுங்கிப் போ - அப்பால்
MAGAZ
பாவம் ரேட்க்ளிப்
அவனை மீண்டும் உயிரோடு பார்க்கும் வாய்ப்பு ஒரு சதவீதம்தான்!
யாஹிஹி...
நாசகாரக் கும்பல்...
HOTEL


ரேஞ்சரின் கதி?
நிச்சயம் கொன்று போட்டிருப்பார்கள்.
வாருங்கள் போய் பார்ப்போம்
அதே சமயம்....
ம்ம்... இனி எனக்கு இங்கே என்ன வேலை?
அந்த சைத்தான்களை உடனடியாக நான் பின்தொடர முடியாது. அத்தோடு வேறு சில முக்கிய ஏற்பாடுகளை கவனிக்க வேண்டியுள்ளது.
மீண்டும் சகஜநிலைமை திரும்பிவிட்டது - ஒரு வழியாக
ஹே...! அங்கே பாருங்கள்!
எப்படி? இன்னமும் அப்படியே முழுசாக இருக்கிறேரே!
சந்தோஷமான சங்கதி!


அவர்கள் உங்களை நிச்சயம் கொன்று போட்டிருப்பார்கள் என்றே நினைத்தோம்.
நான் இன்னமும் உயிரோடிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது - அல்லவா?
உள்ளே என்னதான் நடந்தது?
நிறைய...! நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக அமைந்துவிட்டது நிலவரம்!
அதைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்க இப்போது அவகாசம் இல்லை!
ரேட் க்ளிப்பின் கதி?
அவனுக்கு எந்த ஆபத்தும் வராது. கலவரமடைய வேண்டாம் என்று அவனுடைய குடும்பத்தாரிடம் தேறுதல் சொல்லுங்கள். நாளை மீண்டும் அவனை நாம் நல்லபடியாக பார்க்கலாம்!
ஓ.கே... நாளை யாராவது என்னோடு ப்யூப்லோ பெலிஸ் சந்திப்பு வரை வர முடியுமா? அந்த இடத்தில்தான் ரேட் க்ளிப்பை விட்டுச் செல்வதாக அந்த நீசர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய விவகாரம் அல்லவா?



கோட்டையிலிருந்து சிப்பாய்களை அனுப்புவதுதான் உசிதம்.
அல்லது கால்லப் ஷெரீப்புக்கு தகவல் கொடுப்போம்.
வெட்டிப் பேச்சு வேண்டியதில்லை
எல்மியூர்டோ கும்பலோடு மோத எனக்கு துணையாக நிற்கக் கோரி நான் அழைப்பு விடுக்கவில்லை உங்களுக்கு! ரேட் க்ளிப்பை திருப்பி அழைத்து வரவே உங்களில் யாராவது ஒருவர் என்னோடு வர முடியுமா என்று கேட்டேன்!
புரிந்ததா...?
ஓ.கே. வில்லர்! நான் வருகிறேன்!
என் பெயர் கிர்க்னர்... டுகானின் ஸ்டோருக்கு மேலே மாடியில் வசிக்கிறேன்.. நீங்கள் புறப்பட தயாரானதும் சொல்லுங்கள் -
நல்லது...! நாளை விடிகாலையில் கிளம்ப தயாராக இரு!
எலலோரும் கலைந்து அவரவர் வேலையைக் கவனிக்கச் செல்லலாம்.
நாங்கள் செய்யக்கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.



உங்களுடைய பாதுகாப்புக்காகவும், நல்வாழ்விற்காகவும் உயிரை துறந்த லார்க்கை சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்ய தேவையான ஏற்பாடுகளை செய்யுங்கள்... போங்கள்!
அந்த பணியை நான் பார்த்துக் கொள்கிறேன் வில்லர்.
அவருடைய குடும்பத்திற்கு நிதி திரட்டும் வேலையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.
சரி... நான் கிளம்புகிறேன்!
பிறகு சந்திப்போம்!
நாளை அதிர்ஷ்டம் உங்களுக்கு துணை நிற்கட்டும்!
கோழைகள்... உயிர் மீது அபரிமித ஆசை வைத்திருக்கும் சுயநல கும்பல்!
தெரு நாய்கள் மீது வேண்டுமானால் கல்லெறியும் தைரியம் இருவர்களுக்கு இருக்கலாம். ஆனால் வேட்டை நாய் குரைத்தால் கூட ஓடி ஒளிந்து கொள்ளும் தொடை நடுங்கிகள்!


அன்றைய இரவுப் பொழுது சலனமின்றி கழிந்தது!
துப்பாக்கி, தோட்டாக் களோடு வந்திருக்கிறேன் வில்லர் - எதற்கும் கைவசம் இருக்கட்டுமே என்று
உன் முன் யோசனையை பாராட்டுகிறேன்... ஆனால் அதற்கெல்லாம் அவசியம் இராது!
தூங்கி வழிந்து கொண்டிருந்த கிராமத்தின் அமைதியினூடே மூன்று குதிரைகளின் குளம்பொலி மட்டுமே கேட்டது.
எப்படி அவ்வளவு நிச்சய மாக சொல்கிறீர்கள்?
அந்த சைத்தான்களின் குறி என்னுடைய உயிர் மீது மட்டுமே!
அவர்களுடைய பாஸை உரிய இடத்தில் நிச்சியமாக நான் போய் சந்திப்பேன் என்பது உறுதியாகிவிட்டபின்,
வேறு சில்லறை சேஷ்டைகளில் இறங்க மாட்டார்கள் என்பது என் கணிப்பு!


அப்படி என்ன வெறுப்பு உங்கள் மீது?
அதுதான் எனக்கும் புரியாத புதிர்!
எனக்கு வெறியூட்டி அவர்களுடைய பாஸின் சவாலை நான் ஏற்றுக் கொள்ளவே இத்தனை அட்டூழியங்களையும் செய்து வந்திருக்கிறார்கள்.
வில்லர்... ஏதோ அரவம் கேட்கிறது!
கொஞ்சம் கூட ஆபத்து இல்லாத இடம் இது! என் பேச்சை நம்பு...!
இருக்கலாம்...! ஆனாலும் என் முதுகில் தோட்டா ஒன்று பாய்வதான கற்பனை
சில மணி நேரம் கழித்து -
வந்து சேர்ந்து விட்டோம் - இடம் இதுதான்!
நாம் ரொம்பவும் விழிப் போடு இருக்க வேண்டும்!
அந்தப் பன்றிகள் எங்கேயாவது ஒளிந்து கொண்டிருக்கலாம்
அப்படியொரு சந்தேகம் உனக்கு வேண்டவே வேண்டாம்.



ப்யூப்லோ பெலிஸை சென்றடையும் வரை வழியில் எந்த ஆபத்தும் வராது!
அங்குள்ள இடிபாடு களிடையே நீங்கள் அந்த சவமூஞ்சிக்காரனோடு ஒற்றைக்கு ஒற்றை சவாலில் இறங்கப் போகிறீர்களா?
PUEBLO FELIZ
ஆமாம்... அந்த அரிய வாய்ப்பை நான் எக்காரணம் கொண்டும் இழந்துவிட விரும்ப வில்லை.
முதலில் ரேட்க்ளிப்பை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்...!
கொடுமை... அக்கிரமம்!
ஏன்.. என்ன ஆயிற்று திடீரென்று?
அங்கே... கற்றாழை புதரின் பின்னால் பாருங்கள்!


?!
சுருண்டு பிணம் போல் கிடக்கிறான். ஒரேயடியாக ஒழித்துக் கட்டி விட்டார்களோ?
பொறு... மயக்க மடைந்திருக்கலாம்!
இவ்வளவு பேராசை கூடாது உங்களுக்கு!
அந்த நீசர்கள் நியாயத் திற்கு கட்டுப்பட்ட கூட்டமல்ல
உயிர் இருக்கிறதா?
வெறும் மயக்கம்தான்!
இதைவிட படுமோசமான நிலையில் கிடப்பான் என்று நான் எதிர்பார்த்தேன்
அந்த தண்ணீர் குடுவையை இப்படிக் கொடு கிர்க்னர்!
இதோ...!


இந்தாருங்கள்.
நன்றி!
சலோர்ப்
ரேட் க்ளிப்... கண்களை திற
ம்ம்..
மெள்ள... பருகு... அவசரமே வேண்டாம்.
தண்...ணீர்...
ஒரு பார்மேன் தன்னுடைய தாகத்திற்கு தண்ணீர் பருகும் பரிதாபம்!
?!
வில்லர்? அப்படி யானால்... நான்... இன்னமும் உயிரோடு பத்திரமாக இருக்கிறேனா?
ஆபத்து முற்றிலுமாக நீங்கி விட்டது... உன்னைப் பொறுத்த மட்டில்!


ஆனால் என்னுடைய பிரச்னை இப்போ திருந்துதான் தொடங்கப் போகிறது.
இந்த இளைஞன் உன்னை பத்திரமாக ஊருக்கு அழைத்துப் போவான்.
அப்படியானால் நீங்கள்?
அந்த நச்சுப் பாம்புகளைத் தேடியா போகப் போகிறீர்கள்?
வேண்டாம்... உங்களை பலி கொள்வதிலேயே குறியாக இருக்கிறான் அந்த கருங்குரங்கு மூஞ்சிப் பயல்!
இருக்கட்டுமே...!
அதிர்ஷ்டவசமாக இம்மாதிரி தறுதலைகளை எப்படி நடத்த வேண்டும் என்று நன்றாக அறிவேன் நான்..
அந்த ஞானம் மட்டும் எனக்கு இல்லாதிருந்தால் எப்போதோ நான் மண்ணோடு மண்ணாகிப் போயிருக்க மாட்டேனா?
ம்ம்...


சரி... நான் கிளம்புகிறேன்... அதிர்ஷ்டமிருந்தால் விரைவிலேயே மீண்டும் நாம் சந்திப்போம்.
நல்வாழ்த்துக்கள்... வில்லர்!
அதிர்ஷ்டம் உங்களுக்கு துணை புரிவதாக!
நாம் புறப்படுவோமாடா... ராஜா!
ம்ம்... கிளம்பு!
PUEBLO FELIZ
ப்யூப்லோ பெலிஸ்
யமனின் பாசக் கயிறு அங்கே காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் யாருக்கு?


ஒரு மணி நேர சமவெளிப் பயண முடிவில் மலைப் பிரதேசத்தை வந்தடைந்தார் டெக்ஸ்...
அருமையான இயற்கை சூழல்.
மலைப் பிரதேசத்தை ஊடுருவி தொடர்ந்தது பயணம்...
பாதை கரடு முரடாக இருக்கிறதடா... ராஜா... ஒவ்வொரு காலையும் நீ வெகு கவனமாக எடுத்து வைக்க வேண்டும்... தப்பு நேரிட்டதோ எலும்புகள் நொறுங்கிப் போய்விடும்.
ப்யூப்லோ பெலிஸை இன்னும் சில மணி நேரத்தில் சென்றடைந்துவிடலாம். நிதானமாக போனால் கூட நேரத்திற்கு போய்ச் சேர்ந்துவிடலாம்.


திடீரென்று -
டுமீல்
சண்டாளன்!
டுமீல்
குறி தப்பிவிட்டது..! முதலில் அவனுடைய குதிரையை காலி செய்வோம்!
டுமீல்
டுமீல்
தெரு நாய்க்குப் பிறந்த பொறுக்கிகள்... வஞ்சகமாக தாக்குகிறார்கள்...
டுமீல்
அஸ்தமன வேளையில் மயானத்திற்கு அருகே தானே சந்திப்பு என்று சொன்னான்.
தோட்டாக்களால் அவனுடைய உடலை சல்லடையாக்குங்கள்.


என் பிரேதத்தை முதலீடாக வைத்து
இங்கேயே ஒரு மயானத்தை தொடங்க திட்டமிட்டு விட்டார்களோ?
டுமீல்
டுமீல்
தப்பியோடுகிறான்...
டுமீல்
டுமீல்
நாசமாகப் போக.
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
வாக்குத் தவறிய ஈனப்பிறவிகள்!
டுமீல்



எதற்கும் சளைத்த வனில்லை நான்.
படீ!
சைத்தானே!
க்ராக்!
இப்படியொரு எதிர்விளைவு-நான் கொஞ்சமும் எதிர்பாராதது!
வாக்குத் தவற மாட்டான் எல் மியூர்டோ என்று நான் நம்பியது முட்டாள்தனம்...! அதிரடியாக என்னை தாக்கியது மட்டுமல்லாமல் தன் கும்பல் மொத்தத்தையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டது அக்கிரமம்...
திருட்டுப் பயல்களின் பேச்சை நம்பியது எத்தனை பெரிய தவறு என்று புரிகிறது!
ஒருவேளை நான் இதிலிருந்து தப்பிப் பிழைத்தால் இது ஒரு நல்ல பாடமாக அமையும் எனக்கு!


ஹே...!அங்கே யாரோ அசிங்கம் பிடித்த மூஞ்சியை காட்ட முற்படுவது தெரிகிறது.
வாழ்க்கை அலுத்து விட்டது போலும்...!
?!
நான் இங்கே இருக்கிறேனடா..!
டுமீல்
ஐயோயோ...!
ஆஆ..
டுமீல்
நீ ஒருவன் செத்துப் போவதால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது!


அதே தருணத்தில் -
அதோ இருக்கிறான்.. அவனை எமலோகம் அனுப்பு முன் துப்பாக்கி முனையில் நிறுத்தி வைத்து மூஞ்சியை வேடிக்கை பார்க்க வேண்டும் என்றொரு அற்ப ஆசை எனக்கு
எங்கேடா போய் விட்டீர்கள் அத்தனை பேரும்?
அறிவு கெட்ட முண்டமே! உன் வாழ்க்கை இன்னும் ஓரிரு நிமிடங்களில் முற்றுப் பெறப் போகிறதடா.:
நாசமாகப் போக...
டுமீல்
அடேய் ரேஞ்சர்... இது தாண்டா என் பதில்.
டுமீல்
நண்பர் ரொம்ப கோபமாக இருக்கிறார் போலிருக்கிறது.
டுமீல் டுமீல்


சரியாக குறி வைக்கத் தவறினால், தோட்டாக்கள் தீர்ந்து போய் எக்கச் சக்கமாக மாட்டிக்கொண்டு விடுவேன்!
சரமாரியாக தோட்டாக்கள் வரும் இவ்வேளையில் பையிலிருந்து தோட்டாக்களை எடுத்து நிரப்பிக் கொள்ளக் கூட அவகாசம் கிடைக்க மாட்டேன் என்கிறது.
டெக்ஸ் துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பு முன் கிண்டலாக வந்தது ஒரு குரல்...
அப்படியே நிறுத்து வில்லர்...! முடியப் போகிறது உன் கதை...!
சண்டாளா...!
ம்ம்... தூக்கி ஏறி உன் துப்பாக்கியை!
எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டுவிட்டேனே இவனிடம்..!
என்ன.. எமலோகம் கண்ணுக்குத் தெரியத் தொடங்கிவிட்டதா? ஹா... ஹா... ஹா..!


ஓடி வாருங்கள் தோழர்களே... என் துப்பாக்கி முனையில் ரேஞ்சரை நிறுத்தி வைத்திருக்கிறேன். கண் கொள்ளாக் காட்சி. காண வாருங்கள்.
என் விழிகளில் மரண பீதியை காணும் ஆசை உனக்கிருந்தால் பாவம் நீ ஏமாந்து போவாய் பன்றியே!
இன்னமும் உன் வாய்க் கொழுப்பு அடங்க வில்லையா? உன்னை.. இப்போதே பரலோகம் அனுப்பி...
...அதற்கு முன் அங்கே உன்னை நான் அனுப்பி வைக்கிறேனடா...
?!
யாயாஹிஹி...
ஆஆஆ...
ஆண்டவனே... டைகர்.. இது.. என் அதிர்ஷ்டம் என்பதை தவிர வேறெப்படி சொல்வது?


சமய சஞ்சீவி போல் சரியான தருணத்தில் வந்து சேர்ந்தாய் நண்பனே!
மேலே மற்ற எதிரிகள் பதுங்கிக் கிடக்கிறார்கள்- ஜாக்கிரதை!
சற்று நேரம் கழித்து -
ஏய்.. எங்கே நீ பதுங்கிக் கிடக்கிறாய்?
கேட்கிறதல்லவா?
நெருங்கி சுடும் வரம்பினுள் வா... பதில் சொல்கிறேன்.
மறுகணம் -
ஙே.. டைகர் ஜாக்!
?!
துப்பாக்கியை தூர எறியுங்கள்... ம் - உடனடியாக!


ஆனால் அந்த மூடர்களோ சரணடையாமல் சுடத் தொடங்கினார்கள்...
ஒழிந்து போ...!
டுமீல்
இதெல்லாம் என்கிட்ட செல்லுபடியாகாது தம்பிகளா!
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
ஆஆஆ
உங்கள் தலைக்கனத்திற்கு மருந்து - தோட்டக்கள் தான்!
டுமீல்
டுமீல்
ஏய்... குள்ளநரியே - நில்!
டுமீல்
இப்படி ஓடுவதால் நீ தப்பிவிட முடியும் என்று மனப்பால் குடிக்காதே!
டுமீல்
டுமீல்



அவர்களை தப்பியோட அனுமதிக்கவே கூடாது டைகர்.
விடவே மாட்டேன் டெக்ஸ்! பழைய கணக்கு ஒன்று பாக்கி நிற்கிறதே - சரி செய்ய வேண்டாமா?
வாஸ்தவம்தான்...! அவனை நீ விடாதே..! நான் எல் மியூர் டோ என்ற விஷப்பூச்சி எங்கே ஒளிந்து கிடக்கிறது என்று தேடிப் பிடித்து வெளியே கொண்டு வருகிறேன்!
அப்புறமாக சந்திப்போம்!
உலகின் மூலைக்கே நீ ஓடினாலும் உன்னை நான் விடமாட்டேன்!
விடாமல் துரத்தி வருகிறானே... சண்டாளன்
ஸ்கார் ஃபேஸ்... உன் கடைசி பிரார்த்தனையை சொல்லிக் கொள்!
அவசியமில்லை - இதோ -
டுமீல்
தோட்டாக்களை ஏன்தான் இப்படி வீண்டிக்கிறாயோ
டுமீல்


நானாவது சரியாக குறிவைக்க முடிகிறதா பார்ப்போம்...
டுமீல்
ஊஹூம்... இம்முறை தப்பித்துக் கொண்டு விட்டான்! ஆனால்...
அவனை கொல்லாமல் நான் ஓயமாட்டேன்!
டுமீல்
மூச்சு விடக் கூட அவகாசம் தரமறுக்கிறானே சனியன்!
டுமீல்
டுமீல்
ஸ்கார் ஃபேஸ் - ஓடாதே!


அவனை தீர்த்துக் கட்ட அருமையான தருணம்
கீழே ஒரு சிறு நுழை வாயில் உண்டு... எப்படி யாவது அங்கே போய்ச் சேர்ந்து விட்டேன் என்றால் தப்பித்துக் கொண்டு விடுவேன்.
டுமீல்
விஷ்
ஆஆ...
ஐயோ.. தெய்வமே!



இனி நீ என்னிடமிருந்து தப்பவே முடியாது
அதிர்ஷ்டம் உன்னை கைவிட்டு விட்டது ஸ்கார் ஃபேஸ்
நீ நாசமாகப் போக!
நரகத்திற்குப் போக உன்னை தயார்ப்படுத்திக் கொள்.
கூடாது!
நிராயுதபாணியான என்னை நீ கொல்வது நியாயமில்லை.
ப்பூ...!



ஒரு வீரனைப் போல்- கௌரவமான முறையில் சாக எனக்கு வாய்ப்புக் கொடு!
சைத்தான் வேதம் ஓதுகிறது...! நியாயத்தைப் பற்றி நீ பேசுகிறாயா... தூ!
நரம்பில்லாத நாக்கு எப்படி வேண்டு மானாலும் பேசும்!
தன் இனத்தவன் எவனோடும் மோத டைகர் ஜாக் ஒருபோதும் மறுத்த தில்லை.
...ஆனால் உன்னை ஒரு செவ்விந்தியனாக கருத என் மனம் சம்மதிக்க வில்லை.
வெறி நாயைப் போல ஈவு இரக்கமின்றி சாகடிக்கப் பட வேண்டியவன் நீ!
?!


வெள்ளையர்களைப் போல் உடுத்திக் கொண்டு அவர்களுடனேயே வாழும் நீ...
... மனிதாபிமானமற்ற முறையில் ஒரு நவஜோவை படுகொலை செய்தாய்... உனக்கு இப்படி ஒரு சாவுதான் பொருத்த மானதாக இருக்க முடியும்!
எனக்கு ஒரே ஒரு வாயப்புக் கொடு!
முடியாது..! ஒரு செவ்விந் தியனுக்கு உரிமையான 'நீயா-நானா' சவாலுக்கு நீ அருகதையற்றவன்!
இனத் துரோகியான நீ உன் புதிய பங்காளிகளான வெள்ளையர்களின்...
...நரகத்திற்கே போய்ச் சேர்!
ஆ ஆ ஆ...
டுமீல்


டுமீல்
டுமீல்
நீசனுக வாழ்ந்த உனக்கு இப்படியொரு ஈனத்தன மான சாவுதான் பொருத்த மானது ஸ்கார் ஃபேஸ்!
இனி - அங்கே டெக்ஸ் என்ன பண்ணிக் கொண்டி ருக்கிறார் என்று போய் பார்க்க வேண்டும்!
துப்பாக்கி முழக்கம் கேட்பது ஓய்ந்துவிட்ட திலிருந்து அவர் இன்னமும் அந்த கோர முகரயனை கண்டு பிடிக்கவில்லை என்று புரிகிறது... எனினும் நான் போய் அவரோடு சேர்ந்து கொள்வதுதான் உசிதம்!
டெக்ஸ்...! எங்கே இருக்கிறீர்கள்?


இங்கே இருக்கிறேன் டைகர்...! நிதானமாகவே வா - எந்த ஆபத்தும் இல்லை இங்கே!
தப்பிவிட்டானா என்ன?
கண்ணில் படவேயில்லை! நீ போன காரியம் என்ன ஆயிற்று!
கணக்குத் தீர்ந்துவிட்டது!
நவஜோக்களின் இரத்தம் சிந்தக் காரணமாக இருந்த ஸ்கார் ஃபேஸை வஞ்சம் தீர்த்துவிட்டேன்!
அப்படியானல் என்னை விட நீ அதிர்ஷ்டசாலி தான்!
எல் மியூர்டோ எங்கே கண்ணில் படவே காணோம்?
காரணம் மிக எளிமையானது!
நாம் தீர்த்துக் கட்டிய நான்கு பன்றிகளோடு அவன் இங்கே வரவே யில்லை!
நிச்சயம்தானா?


சர்வ நிச்சயம்! ஐந்தாவது குதிரையின் காலடித்தடம் இங்கே எங்கேயும் தென்படவில்லை!
அதுமட்டுமல்ல நம் தோட்டாக்களுக்கு பலியான ஒருவன் சாகும் தறுவாயில் அவ்வுண்மையை உறுதி செய்தான்.
அப்படி என்னதான் சொன்னான்?
உங்களுடைய பங்குப் பணி முடிந்தது இந்தாருங்கள் பணம் என்று மற்ற நால்வரையும் அனுப்பிவிட்டு ப்யூப்லோ பெலிஸ் நோக்கி பயணமாகிவிட்டானும் எல் மியூர்டோ. ஆனால் என்னால் கையில் காயமடைந்த மடையனுக்கு என்னை பழிவாங்கும் வெறி ஏற்பட்டிருக்கிறது. மற்ற மூவரையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு எனக்கு வலை விரித்துக் காத்திருக்கிறான்.
ஓகோ.. அப்படியானால் சவால் இன்னமும் பாக்கி நிற்கிறதா!
அப்படித்தான்! அந்த உராங்உடானுக்கு எப்படியும் என்னோடு மோதிப் பார்த்துவிட வேண்டும் என்று வெறி!



இரண்டு மணி நேரம் கழித்து.-
ப்யூப்லோ பெலிஸ்..
ஹூம்.. பாவ பூமி போல் கண்ணை உறுத்துகிறது இந்த இடம்.
சமீப காலம் வரை ஓகோ என்று இருந்த இடம்...! திடீரென்று பாழடைந்து மயான பூமி போல் பரிதாபமாக காட்சி யளிக்கிற கொடுமையை என்னவென்பது?
ஆச்சரியப்பட இதில் என்ன இருக்கிறது?
மானிடர்கள் தன்னிடமிருந்து பிடுங்கி ஆக்கிர -மித்துக் கொண்ட இடத்தை மீட்டுக் திரும் பவும் தன்னுடைய தாக்கி. கொள்வதில் பாலைவனம் தாமதம் செய்வதேயில்லை!
ஏன்?
ஆனாலும் ஆறு ஆண்டுகளுக்கு முன் இவ் வழியாக நான் சென்றபோது இருந்த நிலவரமும் இப்போதுள்ள நிலவரமும் இரு வேறு துருவங்கள் போன்றவை. அப்போது இங்கிருந்த ஜனங்கள் அபரிமிதமான எதிர்
பார்ப்போடு பரபரத்துக் கொண்டிருந்தார்கள்...



தென் மேற்கு பிராந்தியத்தில் பியூப்லோ பெலிஸ் விரைவிலேயே கான்ஸாஸ், சான்பிரான்சிஸ்கோவைப்போல் ஒரு மகோன் னதமான இடத்தைப் பிடிக்கப் போகிறது என்று உறுதியாக நம்பினார்கள்.
SALOON
LODGING for 500PERSONS
சுற்றிலும் பார்வையை ஓட்டு...! ஏகப்பட்ட தியேட்டர்கள், மதுபானக் கடைகள், நூற்றுக்கணக் கானோர் தங்க வசதி கொண்ட ஹோட்டல்கள்!
ஆனால் -
GOLDEN CAGE THEATRE
வெள்ளிச் சுரங்கம் திடீரென்று ஒருநாள் கையை விரித்து விட்டது!
அவ்வளவுதான்... அத்தனை பேரும் இர வோடு இரவாக மூட்டை முடிச்சுகளை கட்டிக் கொண்டு போய் வெவ்வேறிடத்தில் தரையை சுரண்ட ஆரம்பித்துவிட்டனர் - தங்கமோ வெள்ளியோ கொள்ளையாக கிடைக்கும் என்ற முடிவில்லா நம்பிக்கையோடு!
அதாவது இன்னொரு ப்யூப்லோ பெலிஸை உருவாக்கும் பேராசையோடு..!


ஆனால் அங்கங்கே மயானங்கள்தான் உருவாயின..!
அதோ அங்கே தெரிகிற ஒன்றினைப்போல் - இல்லையா?
ஆமாம்... டைகர்! - 'பூட் ஹில்ஸ்!'
அந்நாளில் மயானம் எப்போதுமே சுறு சுறுப்பாக இருக்கும்!
கொக்கை சுடுவது போல் இஷ்டத்திற்கு ஆட்களை வேட்டையாடுவது அப்போது சகஜமாக இருந்தது இங்கே...!
அங்கே கவனியுங்கள்!
SALOON


எல் மியூர்டோவினுடைய
தாகத் தானிருக்கும்.
குதிரைகளை நாமும் இங்கேயே விட்டுச் செல்வோம் டைகர்.
அந்த விஷப்பாம்பு இங்கேதான் எங்கோ அருகில் இருக்கக் கூடும்!
ஒவ்...!
க்ராக்
?
?!



சப்தம் கேட்கிறது! அவன் உள்ளேதான் இருப்பான்!
சூழ்ச்சி வலையாக இருக்க லாம் - ஜாக்கிரதை!
மறுமொழி ஏதும் கூறாமல் டெக்ஸ் வாசலின் ஒருபுறம் எச்சரிக்கையோடு பதுங்கி நின்று கொண்டார். டைகர் மறுபுறம் நிலை கொண்டான்.
அடுத்த சில நிமிடங்கள் எவ்வித சலனமுமின்றி அமைதியாக் கழிந்தது. காத்திருந்தது போதும் என்று செயலில் இறங்க தீர் மானித்தார் டெக்ஸ்!
பயல் ஏதோ சாமர்த்திய மாக செய்வதாக நினைத்துக் கொண்டிருக் கிறான்... நான் தரும் அதிர்ச்சியில் ஆடிப் போகப் போகிறான்.
உள்ளே போகிறேன்...
...ஆனால் அவன் எதிர் பார்க்கும் வழியாக அல்ல.
அத்தோடு என்னை என் துப்பாக்கி அறிமுகம் செய்து வைக்கும்!


அதோ.. வருகிறான்!
நகராதே... அப்படியே நில்,.. உன் முதுகை குறி வைத்துக் கொண்டு காத்தி ருக்கிறது ஒரு துப்பாக்கி!
?!
அகப்பட்டுக் கொண்டு விட்டான் என்னிடம் - இங்கே வா... டைகர்!
அருமை!
தூள் கிளப்பிட்டீங்க... டெக்ஸ்! இதோ நான் -
...அடக் கடவுளே!
இவன் எல் மியூர்டோ இல்லை.
எ...என்னை கொன்று விடாதீர்கள் நண்பர்களே!
?!



யார் நீ?
ம்ம்.. நா.. நான்...
என் பெயர் ஷாண்டி... புதையல் தேடுபவன்!
?!
உடனே வீணாக கற்பனை செய்து கொள்ளாதீர்கள்... என்னை அடித்து உதைத்து சக்கையாக பிழிந்தாலும் ஒரு கிராம் வெள்ளிகூட பெயராது... என் வியாபாரம் நசிந்துவிட்டது. நான் இப்போது ஓட்டாண்டி!
நீ இங்கே - இந்த பாழடைந்த பூமியிலா வாசம் செய்கிறாய்?
ஹே... ஹே... ஹே... இது என் சொந்த பூமி... இங்கே முதன் முதலில் வீட்டைக் கட்டியவன் நான்தான்... இதைவிட்டு வெளியேற எனக்கு ஒரு காரணமும் இல்லை!
ஹே... ஹே... ஹே... மற்றவர்களும் சீக்கிரமே திரும்பி வந்துவிடுவார்கள்... ப்யூப்லோ பெலிஸ் இழந்த தன் பெருமையை திரும்பப் பெறும்... இதில் சந்தேகமே வேண்டாம் உங்களுக்கு!


மலைப் பகுதிக்கு நான் வெள்ளியை தேடி செல்லாத நாளே கிடையாது... என்றாவது ஒருநாள் பெரும் புதையல் கிடைக்காமல் போகாது!
அப்போது அந்தச் செய்தி பரபரப்பாக அரிஸோனா முழுக்க் காட்டுத்தீ போல் பரவும்... அதைக் கேட்டு இனிப்பை நாடி வரும் எறும்புகள் போல் ஜனங்கள் ஓடோடி வந்து இங்கே குவியத் தொடங்குவார்கள்... ஹே... ஹே... ஹே...
ஆனாலும் இங்கே இப்படி நீ தனியாக வாழ்வது கஷ்டமாக இல்லையா?
ஹே...ஹே...ஹே... க்ரீன் ஆற்றின் கரையோரம் பொழுது போக்கு அம்சங் கள் ஏராளமாக உள்ளன...
...அத்தோடு நான் இங்கே தனியாக இல்லை... தினசரி நான் மயானத்திற்குப் போய் நண்பர்களை சந்தித்து உரையாடிவிட்டு வருவேன்.
அங்கே மேலே வால்ட்டர், மார்ட்டி, ஜோனதன் இப்படி நிறையப் பேர் இருக்கிறார்கள்... பழங்கதை பேசி சிரித்து மகிழ்வோம்!
ஐயோ பாவம்...!
பைத்தியம் ரொம்பவும் முற்றிப் போயிருக்கிறது...!



இந்தா ஷாண்டி... இதைக் குடி... எங்களை கண்ட தால் ஏற்பட்ட மிரட்சி கொஞ்சம் குறையும்
நன்றி...
மடக்! மடக்!
ம்ம்...
ப்ப்ப ஆ...!
க்ரீன் ஆற்று நீரைவிட இது ருசியாக இருக்கிற தல்லவா?
அடடா... இம்மாதிரி அருமையான விஸ்கியை ருசிபார்த்து எவ்வளவு கால மாகிவிட்டது?
அப்படியானால் மிச்சத் தையும் நீயே வைத்துக் கொள்...
ஆண்டவன் உங்களுக்கு அருள்பாலிக்கட்டும்!
அந்த குதிரையின் சொந்தக்காரனை எங்கே காணோம்?
இரண்டு மணி நேரத்திற்கு முன் இங்கே வந்தான். உடனே மேலே பூட்ஹில்ஸ் நோக்கிப் போய்விட்டான். வித்தியாசமான பேர்வழி... ரொம்பவும் வித்தியாசமான ஆள்!


அங்கே யாரையோ சந்திக் கவிருப்பதாக சொன்னான் - இதை மட்டும்தான் சொன்னான்... போய் விட்டான்.
நல்லது!
சூரிய அஸ்தமனம் நெருங்கிவிட்டது... டைகர்! குறிக்கப் பட்டுள்ள நேரம் இது தான்!
டெக்ஸ்...
எதுவும் சொல்லாதே டைகர்... விரைவிலேயே நாம் மீண்டும் சந்திப்போம்...! ஷாண்டி வரட்டுமா!
அதிர்ஷ்டம் துணை புரிவதாக!
அப்படியானால் சந்திப்பு நிகழவிருப்பதாக அவன் சொன்னது சரிதான் போலும்!
ஆமாம்!



சில நிமிடங்களுக்குப் பின்
!
ஓ... நீ வந்துவிட்டாயா வில்லர்?
சில வாய்ப்புகளை நான் கை நழுவ விடுவதே யில்லை எல் மியூர்டோ!
நானும்தான்... ரேஞ்சர்! பொறு... இன்னும் கொஞ்சம் தோண்டி விட்டு வந்து விடுகிறேன்.
சில நிமிடங்களுக்குப் பின்
முடிந்ததா?
முடிந்தது!


உன் சவக்குழியை நான் தோண்டும் போது நீ இங்கே வரவேமாட்டாய் என்று தான் நினைத்தேன்...
என்னைப் பற்றி நீ சரியாக தெரிந்து கொள்ளவில்லை என்று தோன்றுகிறது!
நான் இன்னும் முன்னதாகவே இங்கே வந்து சேர்ந்திருப்பேன். ஆனால் வழியில் உன் கைக்கூலிகள் என்னை மடக்கி எமலோகம் அனுப்ப முயற்சித்தனர்.
என்ன... நிஜம்தானா?
அறிவு கெட்ட முண்டங்கள்...! நான் அவர்களுக்கு என்ன குறை வைத்தேன் என்று நெடுங்காலமாக நான் திட்டமிட்ட 'பழிக்குப்பழி' வாய்ப்பை என்னிடமிருந்து பறிக்க முயன்றார்களோ?
உன்னை யாரென்றே எனக்கு இனம் விளங்க வில்லை...! என்னை நீ பழி தீர்க்க நினைக்க காரணம் என்ன?
எனக்கு ஞாபக சக்தி தீர்க்கமானது... அதிலும் குறிப்பாக உன் முகத்தை நான் இதற்கு முன் பார்த்திருந்தேன் என்றால் நிச்சயம் மறந்துவிட்டிருக்கமாட்டேன்.
சொல்கிறேன்!



முதலில் இங்கேயுள்ள இரு சமாதிகளில் பொறிக் கப்பட்டுள்ள பெயர்களை படி...
?!
நெருங்கி வந்து இதை படி.. பளிச்சென்று பழைய சம்பவம் ஒன்று உன் ஞாபகத்திற்கு வரும்.
இன்னும் வா நெருங்கி..
FERNANDO ORDOÑEZ KILLED 12 APRIL
இதை படித்த பிறகும் ஞாபகம் வரவில்லையா?
FERNANDO ORDOÑEZ KILLED 12 APRIL
சரி... இதைப்படி! இன்னமும் உனக்கு எதுவுமே ஞாபகத்திற்கு வர வில்லையா?
DIEGO ORDOÑEZ MURDERED 12 APRIL


ஓ! ஞாபகம் வந்து விட்டது! ஆர்டோனஸ் சகோதரர்கள் - ஓவர்லாண்ட் கோச்சு வண்டி அசம்பாவிதத்தோடு சம்பந்தப் பட்டவர்கள்!
பரவாயில்லை.. ரேஞ்சர்! உனக்கு நினைவாற்றல் அபாரம்!
உன்னைப் போன்ற கொலை வெறியர்களுக் கும் கூட தங்களால் பலி கொள்ளப்பட்டட அப்பாவிகளின் பெயர்கள் சுலபத்தில் மறந்து விடாது!
அப்பாவிகளா....? அவர்களா?
அந்த சண்டாளர்களிடமிருந்து என்னை நான் காப்பற்றிக் கொள்ள சுடவேண்டிய நெருக்கடியை உருவாக்கியது தெய்வாதீனமான அதிசயம்!
அன்று நடந்த சம்பவம் அப்படியே பசுமை யாக என் நினைவில் இருக்கிறது. அவர்கள் இருவரும் பதுங்கி வாழ்ந்த குடிசையின் கதவை நான் தட்டினேன்.
இருவரா? நிச்சயமாக இருவர்தானா?



...ஆமாம்... அதில் என்ன சந்தேகம்?
ஓ...! அப்படியா சமாச் சாரம்..? நீ...நீ -
பகோ ஆர்டோனஸ்!!
நீ பகோ...! மூவரில் இளையவன்!
பாராட்டுக்கள் வில்லர்...! ஒருவழியாக என்னை யாரென்று நீ புரிந்து கொண்டு விட்டாய்!
ஆனால் எப்படி நீ உயிர் தப்பினாய்? உன் உடல் கண்டுபிடிக்கப்படாத போதிலும், குடிசையை கபளீகரம் செய்த தீயின் பிடியில் சிக்கி நீயும் மடிந்துவிட்டதாகவே நான் முடிவு செய்து விட்டேன்!
இல்லை...! என்னைப் பார்த்தால் ஆவியோ என்று நினைக்கத் தோனறு கிறதோ?
அன்று பின்னர் நடந்ததை நான் சொல்கிறேன்!


என் வாழ்விலேயே படுமோசமான அந்த கொடிய நாளில் நடந்த சம்பவங்கள் அப்படியே என் கண்முன் நிழலாடுகின்றன. அவற்றை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் என் உள்ளமும் உடலும் அப்படியே பதறிப் போகின்றன. இரத்தம் கொதிப்படைகிறது...
ஓவர்லாண்ட் கோச்சு... ஆமாம் நீ சொன்னது சரிதான்... ஐந்தாண்டுகளுக்கு முன்... ஏப்ரல் ஐந்தாம் தேதி... எனக்கும் என் சகோதரர்களுக்கும் மிகவும் அதிர்ஷ்டமான நாளாகத்தான் தொடங்கியது...
யாரும் அசையக்கூடாது...
...நாங்கள் பார்வையி லிருந்து மறையும்வரை!



தாராளமாக வாரி வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி... நாங்கள் புறப்படுகிறோம்.
வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது...
உங்களில் யாருக்கேனும் சிறு தீங்கும் நாங்கள் இழைக்கவில்லை!
ஆமாம் தானே?
செத்தொழிவதைவிட கொஞ்ச டாலர்களை இழப்பது என்பது லாப கரமான தீர்மானம் அல்லவா?
வா.. போகலாம்!
கொஞ்சம் பொறுங்கள்...
?!
?!
பார்த்தாயா...! அருமை யான இதை கோட்டை விட விருந்தோமே?
கடவுளே!
நாளை மாலை என்னை சந்திக்க காத்திருக்கும் என்னருமை காதலியிடம் இதை கொடுத்தேன் என்றால் என்னை நிச்சயம் மெச்சுவாள்...!


கழற்றிக் கொடு...! இவ்வளவு வயதான பிறகு உனக்கு இதெல்லாம் அவசியம்தானா?
மாட்டேன்... தர மாட்டேன்...
இதை என்னிடமிருந்து பறிக்காதே...! உன்னை கெஞ்சி கேட்டுக் கொள் கிறேன். இது மிக அற்பமானது... ஆனால் எனக்குமட்டும் விலை மதிப்பற்றது...
போதும் உளறல்!
எடு கையை...
பறிக்க விடமாட்டேன் உன்னை!
விடமாட்டாயா...? பார்த்துவிடலாம்!
ஆ..ஆ..
இதை பரிசாக கொடுத் தால் என் காதலி ஆனந்தக் கூத்தாடுவாள்.
மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.. அதை திருப்பிக் கொடுத்து விடு என்னிடம்... என் தாயாரின் நினைவாக என்னிடம் உள்ள ஒரே பொருள் அதுதான்.
போ... அப்பால் -- வெறியை கிளப்பாதே!


ஆகா... படுஜோர்...
?
டக்
அடடே.... இன்னிசை
எழுகிறதே!
தோழர்களே.... இந்த
அதிசயத்தை பாருங்கள்.
திறந்தவுடன் இசை
பாடுகிறது..
இது ஒரு அதிசயமா?
இதற்கு முன் இது மாதிரி நீ
பார்த்ததில்லை போலும்!
பார்த்ததுமில்லை-கேள்
விப்பட்டதுமில்லை...!
அதனுல் தான் இந்த
அதிசயப் பொருள்மீது
எனக்கு இவ்வளவு ஆசை.
என்ன செய்வேன்
ஐயோ!



திடீரென்று -
சண்டாளா... உனக்கு இதயமே கிடையாதா?
ஏய்.. என்ன இது திடீரென்று வெறி பிடித்த மாதிரி?
அதை கொடுடா என்னிடம்... சைத்தானே.
பிசாசே.. கிட்டே வராதே- போய்த்தொலை!
ஆனால் அந்தப் பெண் மணி பிறர் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக புலிப் பாய்ச்சலாக பாய்ந்து திருடனின் முகமூடியை பிடுங்கினார்...
அட அநியாயமே
அந்த திருடன் அதிர்ச்சி யில் ஒரு கணம் சிலையென உறைந்து போய் நின்றான்.
?!
...மறுகணம் வெறி பிடித்தவன் போலானான்...
நாசமாகப் போகிறவளே... உன்னை...
படார்
அவன்...? ஆமாம் அவன்தான்..!


ஆர்டோனஸ்... பகோ ஆர்டோனஸ்
கெட்ட்து காரியம்... அந்த கிழக் கோட்டான் பகோஸ்வ அடையாளம் தெரிந்து கொண்டு விட்டது!
அவனுக்கு கேடு காலம் - வேறென்ன?
மற்றவர்களுக்கும் தான் ஜாதகம் சரியில்லை!
டுமீல்
டுமீல்
எல்லோரையும் ஒட்டு மொத்தமாக கொன்று குவிப்போம்.
ஆஆஆ...
ஆஆஆ....
அடப் பாவிகளா...
டுமீல்
டுமீல்



ஐயோ.. தெய்வமே...
லிண்டா... லிண்டா...
ஜாக்கிரதை... அவன் துப்பாக்கி வைத்திருக் கிறான்.
கொலை காரப் பாவிகளா.... நீங்கள் நாசமாகப் போக
அவனிடம் டெர்ரிஞ்சர் இருக்கிறது
விடு அவனை என்னிடம்!
ஆ ஆ...
டுமீல்
நீங்கள் நரகத்திற்குத்தான் போவீர்களடா பாவிகளே
அந்த துப்பாக்கியை கீழே போடுடா... பன்றிப் பயலே!
யா



உன்னை தீர்த்துக் கட்டிவிட்டு அப்புறம் போடுகிறேன்.
டுமீல்
ஆஆஆ.....
பகோ...!
அந்த சண்டாளன் அவனை-கொன்று விட்டான்.
டுமீல்
டுமீல்
ஆஆஆஆ
அதிர்ஷ்டவசமாக குண்டடிபட்ட நான் செத்துவிடவில்லை... தோளில் படு காயம் ஏற்பட்டதோடு சரி...


என் சகோதரர்கள் இருள் கவிழ காத்திருந்தனர். பிறருக்கு சந்தேகம் எழாதவகையில் என்னை வீட்டிற்கு தூக்கிச் செல்ல!
வீடு என்றா சொன்னேன்?... தவறு - குடிசை என்று சொல்லியிருக்க வேண்டும்! ஆற்றங்கரையில் காமா சோமா வென்று நின்று கொண்டிருந்தது எங்கள் இருப்பிடம்.
எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது... மேலே சொல்!
"எதிர்பார்த்த மாதிரியே கோச்சு வண்டி தாக்கப்பட்ட சம்பவம் நகரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது."
எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று ஜனங்கள் சந்தேகக் கண்ணோடு பார்த்து வினா எழுப்பினால் நெருக்கடியாகிவிடும் என்று பயந்த என் சகோதரர்கள் என்னை பரண் போன்ற மேல் அறையினுள் கொண்டு போய் பதுக்கி வைத்தார்கள்.
கடுமையான காய்ச்சல்.. உடம்பு முழுக்க பயங்கர வலி... நரகவேதனை அனுபவித்தேன். டாக்டரை அழைக்கப் பயந்து என் சகோதரர்களே என்னை கவனித்துக் கொண்டார்கள்...


பிழைப்பேஞ என்ற உத்தரவாதமற்ற நிலையில் நைந்துபோன உடலும், நொந்துபோன நெஞ்சமுமாக நான் நாட்களை கடத்தினேன்.
சில தினங்களுக்குப்பின் ஒருநாள் இரவு நீ அங்கே வந்து சேர்ந்தாய்...! நினைவிருக்கிறதா ரேஞ்சர்?
ஓ... நேற்றுதான் நடந்தது போல் இருக்கிறது!
கோச்சு வண்டிப் பயணிகளை வெறித்தனமாக கொலை செய்த பாவிகளை தேடிக் கண்டுபிடிக்குமாறு எனக்கு மேலிடத்து உத்தரவு வந்தது.
சுற்று வட்டாரத்திலிருந்த ஷெரீப்புகளோடு நான் கலந்தாலோசனை செய்ததில் கொலையாளிகள் இங்கே தான் எங்கோ பதுங்கிக் கிடப்பது ஊர்ஜிதமானது.
ப்யூப்லோ பெலிஸ் நகரவாசிகளில் ஏறத்தாழ பாதிப்பேரை விசாரித்துவிட்டேன். ஆர்டோனெஸ் சகோதரர்களுக்கும் அந்த அசம்பாவிதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஆணித்தரமான கருத்து வெளிவந்தது...



அவர்கள் வசிக்கும் இடத்திற்கு சென்று நோட்டம் விடத் தீர்மானித்தேன்...
ஆற்றங்கரை நோக்கிச் சென்றேன்.
துப்பாக்கியின் செயல் திறனை முதலில் சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஓ.கே...
சிக்கென்றிருக்கிறது...!
இனி போய் சந்திக்கலாம்!


மேலும் பத்து டாலர் பந்தயம் வைக்கிறேன்!
சரி... புரட்டு!
உள்ளேதான் இருக்கிறார்கள்
ஆனால் இருவர் மட்டுமே தென்படுகிறார்கள்
இப்போதைக்கு இரு வரோடு நான் திருப்தி யடைய வேண்டியதுதான்.
அத்தோடு, உதைக்கிற விதத்தில் உதைத்தால் மூன்றாவது நபரின் இருப்பிடத்தைப் பற்றி சொல்லாமலா போய்விடுவார்கள்?


நேரடி நடவடிக்கையில் குதிக்க இனியும் நான் தாமதிக்க தேவையில்லை.
மறு வினாடி...
க்ராஷ்
?
!
குட் ஈவ்னிங்!
டமீர்!
கைகளை உயர்த்துங்கள்! மம் - சீக்கிரம்!
மரியாதையாக சரண டைந்து விடுங்கள்
?!
?!



யார் நீ?
எங்களிடம் என்ன எதிர் பார்க்கிறாய்?
என் பெயர் டெக்ஸ் வில்லர்
எதற்காக வந்தேன் இங்கே என்ற கேள்விக்கு....
...இந்த நட்சத்திரம் தான் பதில்!
பாவிப்பயல்!
ஏதோ குளறுபடி நடந்திருக்கிறது ரேஞ்சர்... நாங்கள் சுரங்கம் தோண்டும் அப்பாவிகள்...
வெட்டிப் பேச்சு வேண்டாம்!


நீங்கள் சுரங்கம் தோண்டுகிற இலட்சணம் எனக்குத் தெரியும். இந்த வசதிகள் எல்லாம் உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றும் தெரியும்..
உங்களுடைய சுரங்கம் அப்பாவி கோச்சு வண்டிப் பயணிகளின் பாக்கட்டுகள்தான்...
நீங்கள் பயன் படுத்தும் உபகரணங்கள் மண்வெட்டியும் தோண்டு கோடரியும் அல்ல... துப்பாக்கியும் தோட்டாக்களும்
அபாண்டம்... அப்பாவிகள் எங்கள் மீது வீண்பழி சுமத்தாதீர்கள்.
அடித்து விரட்டு அவனை!
நீ தப்பான கருத்தோடு இங்கே வந்து அடாவடித் தனம் செய்கிறாய் ரேஞ்சர்!
நானோ என் சகோதர்களோ கற்பனையில்கூட சட்டத்தை மீறும் எண்ணம் இல்லாதவர்கள். யாரோ எங்களைப்பற்றி உங்களிடம் இல்லாததும் பொல்லாததுமாக உளறியிருக்கிறார்கள்.
இப்படியெல்லாம் புளுகி என்னை ஏமாற்றி விடலாம் என்று கனவு காணாதே மூடனே!


ஓவர்லாண்ட் கோச்சு வண்டிப் பயணிகளை தாக்கி கொன்ற குற்றத்தை உங்கள் மீது முறைப்படி சுமத்துகிறேன் இப்போது
உங்களை தூக்கிலிட தேவையான தடயங் களை நான் இங்கே தேடி எடுக்க வசதியாக நீங்களிருவரும் சுவரை பார்த்து நின்றவாறு வலது கையை உயர்த்திக் கொண்டு இடக் கையால் துப்பாக்கி இருக்கும் பெல்ட்டை களற்றுங்கள்!
நச்சுப்பாம்பு
ம்ம்.. ஏய் தாடிக்காரா... முதலில் நீ போடு கீழே - உன் துப்பாக்கி வகையறாக்களை
இதோ போட்டுவிட்டேன் ரேஞ்சர்.
ஆனால் என் சகோதரன் சொன்ன மாதிரி நீ பெரும் தவறு ஒன்றை செய்கிறாய். அன்று கோச்சு வண்டி தாக்கப்பட்ட தருணத்தில் நாங்கள் முப்பது மைல்களுக்கு அப்பால் இருந்தோம் என்பதை திட்டவட்டமாக நிரூபிக்க முடியும் எங்களால்!


இவ்வாறு சொல்லிக் கொண்டே -
தம்பி.. பதுங்கிக் கொள்- இவனை ஒரு கை பார்த்து விடலாம்!
!
பொறுக்கி ராஸ்கல்!
வா... தோட்டாக்களால் இவனை சல்லடையாக துளை போடுவோம்!
கிடைக்குமா இப்படி ஒரு வாய்ப்பு இன்னொரு முறை?
க்ராஷ்
தொலைந்து போ சனியனே!
டுமீல்
நரகத்திற்கு உன் பயணம் நல்லபடியாக அமையட்டும்!
டுமீல்



ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்று சும்மாவா சொன்னார்கள்...? முட்டாள்களே -
டுமீல்
ஆஆ ப்!
சண்டாளனே... உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன்.
டுமீல்
நீ நாசமாகப் போக....
டிங்!
நீ தப்பிக்க முடியாது ரேஞ்சர் -
டுமீல்
தொலைந்தேன்


தாமதித்தால் அந்தக் கொரில்லா என்னை தோட்டாக்களால் துளை போட்டுவிடுவான். அதை தவிர்க்க ஒரே வழி -
அவன் மீது இப்படி பாய்வதுதான்!
ஆவ்... விடு என்னை!
பிழைத்தேன்!
இதற்கிடையே கீழே கவிழ்ந்த விளக்கிலிருந்து தீ நாலாதிசைகளிலும் வேகமாக பரவியது.
குடிசை மொத்தமும் இன்னும் சற்று நேரத்தில் எரிந்து சாம்பலாகப் போகிறதடா...


துப்பாக்கியை தூர எறி... இல்லையேல் இருவருமே தீயில் வெந்து சாவது நிச்சயம்!
துப்பாக்கியா... தீயா - நீயே தேர்ந்தெடுத்துக் கொள் ரேஞ்சர்... நான் எப்படியும் தப்பி விடுவேன்!
மூர்க்கனே... போடுடா கீழே - துப்பாக்கியை!
ம்ம்... இனி உன்னை வழிக்கு கொண்டு வந்து விடுவேன்.
நடக்காதுடா... சோமாறி!
?!



அடச்சே...!
டமால்!
அற்பக் கொசுவை நசுக்கு வது போல் உன்னை நசுக்குகிறேன் பார்...
எருமையே... நெருங்கி வா...
என்னை நீ புரிந்து கொள்ள வைக்கிறேன்!
இப்படி நான் விலகிக் கொண்டு....
...திருப்பி கச்சிதமாக கொடுத்தால்...
கும்!
ஆவ்வ்
... அது உன்னை வீழ்த்த போதாது என்றால்...


இது காரியத்தை முடித்து விடும்!
எமன்..
என் வெறியை தூண்டு கிறான்....
க்ராக்
க்ராஷ்
உத்திரம் எந்த வினாடியும் விழுந்துவிடலாம்.. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து... எனவே -
ஆஆஆ...
இனியும் உன்னோடு விளையாடிக் கொண்டி ருக்க எனக்கு அவகாசம் இல்லை...
எனக்கும் தான்.... ரேஞ்சர்!


உன்னை ஒழித்துக் கட்டுவேன்....
...இக்கணமே!
ஏய்...,கொரில்லா...
செத்தொழி.... சனியனே
ஐயோ... என்ன ஒரு அசுரப் பிடி... உடனடியாக என்னை...
நான் விடுவித்துக் கொள்ளத் தவறினால்... தொலைந்தேன்.


ஹா...ஹா... முடியப் போகிறது உன் கதை... ரேஞ்சர் இனி நீ தப்பிக்கவே முடியாது..
தெய்வமே... பிஸ்டல்!
அதை மட்டும் எட்டி எடுக்க முடிந்தால்...
அவன் பார்த்து விடலாகாது...
கிடைத்துவிட்டது!


மறுகணம் -
ஆஆஆ...
டுமீல்
... நீ... நீ...
... உயிரை விடுமுன் உன்னையும் தீர்த்துக் கட்டியே தீருவேன்.
டுமீல் டுமீல்


தொலைந்தான் - ஒரு வழியாக!
சே... நான் இம்முறை தப்பியது மறுபிழைப்புத்தான்!
ஓரிரு கணங்கள் நான் தாம தித்திருந்தால் இந்நேரம் பரலோகத்தில் இருந் திருப்பேன்.
அப்போது - திடீரென்று
?!
உதவி... உ...த...வி...
யாரங்கே....?
கேட்டது சந்தேக மில்லாமல் மனிதக் குரல்தான்!


உதவி கோரும் அபயக் குரல்.
க்ராஷ்
?!
இன்னும் என்னை சனி விடவில்லை..
குடிசை மொத்தமும் பற்றி எரிகிற இந்த தருணத்தில்
...இப்படி நான் பொறியில் அகப்பட்ட எலியாக மாட்டிக் கொண்டுவிட்டேனே..


இன்றுதான் என்னுடைய கடைசி நாளோ?
எவ்வளவு முயன்றும் அந்த உத்திரம் அசைந்து கொடுக்கவில்லை.
வெந்து சாக வேண்டும் என்பதா என் தலை எழுத்து?
ஆனால்....
அதோ... அங்கே... யாரோ - உயிரோடு!
கடவுளே
உதவி
அடடே... ரேஞ்சர்!
ம்ம்... ஓடி வாருங்கள்... கூரை சரியுமுன் உத்தி ரத்தை நகர்த்துவோம்!


ம்ம்... சீக்கிரம்...!
தைரியமாக இருங்கள் வில்லர்... இதோ - நொடியில் உங்களை விடுவித்து விடுவோம்!
சில விநாடிகளுக்குப் பின்
எழுந்து நிற்க முடியுமா- உங்களால்?
ம்ம்... அதிர்ஷ்டவசமாக எலும்பு எதுவும் முறிந்ததாக தெரியவில்லை.
ஓடி வாருங்கள்... இங்கே நிற்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து!
க்ராஷ்!
ம்... சீக்கிரம்!
ஒரு நிமிடம்... பொறுங்கள்!


மேலே இன்னும் வேறு யாரோ இருக்கிறார்கள்... உதவி கோரி குரல் வரக் கேட்டேன் - சற்று முன்!
அதற்கு அவகாசம் இல்லை இப்போது
இங்கே வேறு அறைகளே கிடையாது... எனவே, வேறு எவரும் இங்கே இருக்க வாய்ப்பில்லை.
ஆனாலும்...
சொன்னால் கேளுங்கள்... வீணாக உயிரை பணயம் வைப்பது மதியீனம்
ம்ம்...
சீக்கிரம்... வில்லர்... சீக்கிரம்.


சில நிமிடங்களுக்குப் பின்
கடவுளே.. மயிரிழையில் தப்பிவிட்டோம்!
ஹ்ம்ம்... நல்ல கட்டுக் கதை வில்லர்! உன் தூக்கத்தில் வேண்டுமானால் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்ற நினைப்பு எழுந்திருக்கலாம்!
...ஆனால், நீ சொன்னது பொய்யோ நிஜமோ எப்படியானாலும் உன் மீது எனக்குள்ள வெறுப்பை துளியும் குறைக்க அது உதவாது...


அந்தக் கொடிய தீ என் உடலில் ஏற்படுத்திய வடுக்கள் நிரந்தரமாகி விட்டன...
... அப்போது நான் அனுபவித்த சித்திர வதையும் நரக வேதனையும் அக்கினியாக என் நெஞ்சுக்குள் கனன்று கொண்டேயிருக்கிறது... இந்த நிமிடம் வரை!
...புகையினுல் அன்று தொண்டையில் ஏற்பட்ட கமறலை இப்போதும் உணர முடிகிறது...
...தீ!
உதவி... உ..த..வி
நிலவறை கதவை நான் எப்படியாவது திறந்துவிட வேண்டும்.


உள்ளே மூச்சுத் திணறுகிறது!
என் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி கதவை தூக்கினேன்...
" மறுகணம்... குபீரென்று வெளிப்பட்ட தீப்பிழம்பு கள் என்னை விழுங்கப் பாய்ந்தன."
ஐயோ... என் முகம்!
நா.. நான்... செத்துவிடக் கூடாது... நான் சாக விரும்பவில்லை...


...பாதி குருடனாகிவிட்ட நான் தட்டுத் தடுமாறிச் சென்று கோடரி இருந்த இடத்தை தேடிக் கண்டு பிடித்தேன்...
கூரை மீது வெறித்தனமாக வெட்டினேன்...
தெய்வமே... நான் எப்படியாவது இந்த நரகத்திலிருந்து வெளியேற வேண்டும்....
...எப்படியாவது - உயிரோடு!
இப்படியொரு கோரமான முறையில் மரணத்தை தழுவ எனக்கு இஷ்ட மில்லை.
"சில நிமிட முயற்சிக்குப் பின் ஓர் ஆள் நுழைகிற அளவுக்கு இடைவெளி உருவாகியது."


"அதே விநாடியில் மீண்டும் தீப்பிழம்புகள் என்னை சூழ்ந்து கொண்டன."
"உயிர் பிழைக்க வேண்டும் என்ற வெறி தந்த அசுர பலத்தோடு மேலே பாய்ந்த நான் கூரையை பற்றிக் கொண்டேன்..."
...மறுகணம்...
...என்னை கபளீகரம் செய்ய முயன்ற தீயின் பிடி யிலிருந்து விடுபட...
"...என்க்கு வேறு வழி யில்லையாதலால்....
...ஆற்றினுள் குதித்தேன்..."


தொப்
தப்பிவிட்டேன்... நான்...
தப்பிவிட்டேன்!
...எனக்கு சில அடி
தொலைவில் மரகட்டை
ஒன்று மிதந்து செல்வதை
கண்டேன்...


... ஆவேசத்தோடு அதை நோக்கி நீந்தினேன்...
அ...அ..தை பற்றிக் கொள்ள வேண்டும்!
...ஒருவழியாக -
அப்பாடா...! தெய்வமே... உனக்கு ஆயிரம் கோடி நன்றி!
நா..நான்.. பி..ழை..த்..துக் கொண்டு விட்டேன்!
நீரோட்டம் என்னை எவ்வளவு தூரம் இழுத்துச் சென்றதோ எனக்குத் தெரியாது...
அதைப் போலவே அந்தக் கட்டையை விடாது பற்றிக் கொள்ள ரணமாகிப் போயிருந்த என் உடலுக்கு வலு எங்கிருந்து தான் வந்ததோ அதுவும் எனக்குத் தெரியாது.


ஒருவேளை எனக்குள் எரிமலையாய் குமுறிய பழி வாங்க வேண்டும் என்ற வெறி தான் உயிரை தக்க வைத்துக் கொள்ளத் தேவையான சக்தியை எனக்கு கொடுத் திருக்கக் கூடும்.
என் வீட்டையும், குடும்பத்தையும் நிர்மூல மாக்கிய நீசனை பழி வாங்க வேண்டுமானால் நான் உயிர் வாழ்ந்தேயாக வேண்டும் என்றொரு வெறி...! புரிகிறதா ரேஞ்சர்!
புரியாமல் என்ன..! மேலே சொல்!
இதற்கு மேல் சொல்வதற்கு அதிகம் இல்லை...! பல மணி நேரம் கழித்து, ஒரு செவ்வந்திய குடிசையில் நான் இருப்பதை உணர்ந்தேன். அவர்கள் அளித்த அற்புத சிகிச்சையினால் தீயினால் செயலிழந்து போயிருந்த கைகள் கூட மீண்டும் வலிமை பெற்றுவிட்டன. முழுவதுமாக குணமடைந்த பின்னர் நான் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, எல்லையை கடந்து மெக்ஸிகோ போய்ச் சேர்ந்தேன்.
அடுத்த ஓராண்டுக்குள் சிகுவாகுவா பிராந்தி யத்தில் என்னை மிஞ்சிய துப்பாக்கி வீரன் எவனுமில்லை என்று பெயர் எடுத்தேன்.
பார்ப்பதற்கே குமட்டும் என் குரூரமான முகம் ஒன்று போதுமே என் எதிரிகளை தொடை நடுங்கச் செய்ய!


'எல் மியூர்டோ' (நடமாடும் பிணம்) என்று எனக்கு பட்டப் பெயர் சூட்டினார்கள் ஜனங்கள்.. என் தோற்றத்துக்குப் பொருத்தமாக! ஆனால் மேல்மட்ட சமூக விரோதிகள் கூலிக்குக் கொலை செய்ய என் திறமையை பயன்படுத்திக் கொண்டார்கள்...
...மற்றவர்களுக்கு காலப் போக்கில் என் விகார தோற்றம் பழகிப் போய்விட்டது. அத்தோடு, என் கையில் தாராளமாக புழங்கிய பணம் என்னிடம் ஜனங்கள் மதிப்பு வைக்க காரணமாகியது
பழி வாங்கும் எண்ணம் மட்டும் என் நெஞ்சுக்குள் குடைந்து கொண்டிராவிட்டால், வாழக்கை எனக்கு சகல சுகபோகங்களோடும் இதமானதாக அமைந்திருக்கக் கூடும்.
என்னை பழி வாங்குவதே உன் இலட்சியமாகி விட்டதாக்கும்...
ஆமாம்... சரியாகப் புரிந்து கொண்டு விட்டாய் ரேஞ்சர்...!
ப்பூ...! உனக்கு விவேகம் போதாது!
இருக்கலாம்..! ஆனால் நடந்ததை அப்படியே மறந்து விட நானொன்றும் உணர்ச்சிகள் அற்ற ஜடம் அல்ல!


உன் திறமையை கேள்விப்பட்ட நான் வெய்யில், மழை என்று பாராமல் சதா துப்பாக்கி பயிற்சியிலேயே பொழுதைப் போக்கினேன்.
என் துப்பாக்கியிலிருந்து கிளம்பும் முதல் தோட்டாவிலேயே உன்னை பரலோகம் அனுப்பிவிட முடியும் என்ற அளவுக்கு திறமையை வளர்த்துக் கொண்டதும் உன்னை தேடத் தொடங்கினேன்.
ஓகோ!
என்னை பழிவாங்கும் முயற்சியில் உன் உயிரையே பணயம் வைக்கும் அபாயம் இருக்கிறது என்று எப்போதுமே உன் மந்த புத்தியில் உறைக்கவில்லையா?
கிண்டலா...?
எண்ணி ஐந்தே நிமிடங் களுக்குள் நீ இந்தப் புதை குழியினுள் பிணமாக வீழ்ந்து கிடக்கப் போகிறாய் ரேஞ்சர்!
இந்தக் குழியை என் சகோதரர்களின் சமாதிக்கு வெகு அருகாமையிலேயே தோண்டியிருக்கிறேன் என்பதை நீ கவனித்தாயோ?
வெட்டிப் பேச்சு போதும் ஆர்டோனஸ்!


நீ ஆசைப்பட்ட மாதிரியே இதோ நான் உன் எதிரில் வந்து சேர்ந்து விட்டேன்...
நீ தயார் என்றால் இப்போதே எண்ணத் தொடங்கிவிடலாம்!
நீ ஐந்து எண்ணி முடித்ததும் நம் பிஸ்டல்கள் சீறட்டும்...
எண்ண வேண்டிய அவசியமில்லை ரேஞ்சர்... வேறொரு அருமையான மாற்று ஏற்பாடு இருக்கிறது
இதோ இந்த பதக்கத்தை கவனி... இதுதான் உனக்கு சாவுமணி அடிக்கப் போகிறது!
?!
கோச்சு வண்டியை கொள்ளையடித்த நாளில் கிழவியிடமிருந்து நான் பறித்தெடுத்தது இந்த பதக்கத்தைத்தான். என் தலைவிதியை மாற்றியமைந்த இந்த பதக்கம் ஒரு அருமையான இசைக்கருவியும் கூட.
ஆற்று நீர் புகுந்ததில் கொஞ்சம் துரு ஏறிவிட்டது. எனவே, திறந்த உடனே இயங்க வேண்டிய இது ஒரு சில நிமிடங்கள் தாமதமாகவே இசை எழுப்புகிறது.


ஆனால் எவ்வளவு தாம தமாக என்று எனக்கோ உனக்கோ தெரியாது... இது ஒரு நியாயமான ஏற்பாடுதான் என்று நீ ஒத்துக் கொள்வாய் என நான் நம்புகிறேன்.
ஓ. கே. இதை இங்கே தொங்க விடுகிறேன்.
.. எந்த வினாடியிலும் அது இசை எழுப்பத் தொடங்கலாம்.
...இசை ஒலிக்கத் தொடங் கியதும் துப்பாக்கியை நீ முழக்கலாம்...
...கண்ணிமைக்கும் பொழுது நீ தாமதித்தாலும் உன் உயிர் உன்னுடைய தாக இராது ஜாக்கிரதை.
வெறும் வாய்ச் சவடால் உன்னை காப்பாற்றாது அற்பனே...
அரங்கேற விருந்த மரண நாடகத்தை நிசப்தமாக பார்வையிட்டது பாலைவன நிலவு...! சீறியடிக்கும் பாலைவனக் காற்று கூட ஒரு கணம் செயலிழந்து நின்றது...!


மூன்று... நான்கு... ஐந்து நிமிடங்கள் அமைதியாக கழிந்தன... தாங்கிக் கொள்ள முடியாத மயான அமைதி அது...
துப்பாக்கியை உருவ தயாராக இருந்த கரங்கள் பரபரப்பினால் இறுகி விறைத்துப் போயின...
ஆறு... ஏழு..., எட்டு... எல்மியூர்டோவின் நெற்றியில் வியர்வை முத்துக்களாய் வழியத் தொடங்கியது..
ஆனால் டெக்ஸின் முகமோ எப்போதும் போல் கல்லில் - செதுக்கியது போல் இறுகிப் போயிருந்தது.
திடீரென்று - அங்கே நிலவிய ஆழ்ந்த மௌனத்தை குலைத்துக் கொண்டு எழுந்தது ஒரு மெல்லிய இசை முழக்கம்.
தொலைந்தாய்...!


இரண்டு துப்பாக்கிகளும் ஏக காலத்தில் தோட்டாக் களை கக்கின...
டுமீல்! டுமீல்!
ஆ... ஐயோ... ஐயோ .....!
சைத்தானே.. நீ... நீ...
...நாசமாகப் போக!
டுமீல்!


..பழி... பழி...
வாங்காமலேயே...
ஆ ஆ ஆ...
இறுதியாக நீயும் உன்
சகோதரர்களோடு போய்
சேர்ந்து கொண்டாய்
ஆர்டோனெஸ்.. நான்
விடை பெற்றுக்
கொள்கிறேன்...
குட் பை!
மரண கீதம்
இசைக்கிறதோ?


நிறுத்தித் தொலை... சைத்தானே! ஆட்டம் முடிந்து விட்டது!
டுமீல்!
க்ராக்!
பழி வாங்க நினைத்தான்...! ஆனால் அதில் நியாயம் இல்லை! இது - சரியான முடிவுதான்!
DIEGO URDONEZ MURDERED 12 APRIL
இனி இங்கே எனக்கு என்ன வேலை!
கிளம்ப வேண்டியதுதான்!
அங்கே டைகர் பதைபதைப்போடு காத்துக் கிடப்பான்!



"துப்பாக்கி எடுத்தவனுக்கு துப்பாக்கியாலேயே சாவு" என்பது மேற்கத்திய பழமொழி. மீண்டும் ஒருமுறை அது நிரூபணமாகியது!
பத்து நிமிடங்களுக்குப் பின் -
டெக்ஸ்!
ஆண்டவனுக்கு நன்றி!
விபரீதமான கற்பனைகள் முளைவிடத் தொடங்கிய வேளையில் நல்லபடியாக வந்து சேர்ந்து விட்டீர்கள்... அடடே... தோளில் என்ன... காயமோ!
லேசான சிராய்ப்புத் தான்!... என் அதிர்ஷ்டம் -


அவன் யார் எதற்காக அவனுக்கு உங்கள் மீது இப்படியொரு பகை என்ற உண்மைகளை தெரிந்து கொள்ள முடிந்ததா?
அது ஒரு நீண்ட கதை டைகர்!
போகும் போது வழியில் விபரமாக சொல்கிறேன்... முதலில் என் காயத்தின் மீது கொஞ்சம் ஆல்கஹாலை விட வேண்டும்...
நான் ஏதாவது செய்கிறேனே!
அவசியம் இல்லை... என் சட்டையை அந்த இடத்தில் நனைத்தாலே போதும்!
அப்படியே என் தொண்டையையும் நன்றாக நனைத்துக் கொள்ள வேண்டும்...
பெரியவரே... நீங்கள் இஷ்டத்திற்கு அரட்டை யடிக்க அங்கே இன்னும் ஒரு ஆள் கிடைத்துவிட்டான்...
பெயர் - பகோ ஆர்டோனெஸ்! அவனுடைய சமாதி மீது எழுதுங்கள்!
செய்கிறேன் ஸார்!


இங்கே பூமியை சுரண்டும் ஆசை என்றைக் காவது உங்களுக்கு அலுத்துப் போனால் கயேன்டா ஏஜென்ஸிக்குச் சென்று டெக்ஸ் வில்லர் என்று விசாரித்து வந்து சேருங்கள். உங்களுக்கு உதவ எப்போதும் தயாராக இருப்பேன்.
இதை நான் நிச்சயம் நினைவில் வைத்திருப் பேன் நண்பரே!
AZINE
டைகர்... புறப்படலாமா?
ஓ...!
இந்த பாழடைந்த கிராமத்தை பார்க்க சகிக்க வில்லை. எப்போது விலகி ஓடிப் போவோம் என்றிருக்கிறது எனக்கு.
போய் வாருங்கள்...!
சீக்கிரம் வந்து சேருங்கள்!













பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக 'லயன் காமிக்ஸ்' மாத இதழை அச்சிட்டு, வெளியிடுபவரும், ஆசிரியரும் : **S. விஜயன்** முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண் : 374, சிவகாசி - 626 123 அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123, வெளியீடு எண் : 86.

ரிப் கிர்பி தோன்றும்

# ஒரு வெறியனைத் தேடி...!

அசகாய சூரனுன மேங்க்ளர் ஒரு முதல் தர மொள்ளமாரி! ரிப் கிர்பி அவனை கைது செய்து சிறையில் அடைத்தார். சிறையிலிருந்த ஒரு ஓட்டை டாங்கியை கிளப்பிக் கொண்டு தப்ப முயன்றான். கிர்பி மீண்டும் அவனை சிறையில் அடைத்தார்!







அவனும் ஓய்ந்து காணப் பட்டான்...
பரவாயில்லையே! - என்ன டிஸைன் அது.. மேங்க்ளர்?
எலெக்ட்ரிக் நாற்காலி ''மிஸ் நெல்சன்'' நானாகவே வடிவமைத்தேன்!
உபயோகமான பொழுது போக்குகளில் ஈடுபடுமாறு கைதிகளுக்கு ஆலோசனை தரப்பட்டு இருந்தது.
ஒரு அழகான பூந் தோட்டத்தை டிசைன் செய்யேன் - இதைவிட அழகாக இருக்கும்.
ஓ... அருமையான யோசனை! இதை முடித்துவிட்டு அடுத்து அதை செய்கிறேன்!
ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டிய 99 ஆண்டு ஜெயில் தண்டனைகள் மூன்று இருப்பதால் நான் நிதானமாகவே எதையும் செய்யலாம்...
COMIN
Thrills
ஆனால் - புதிய ''வாய்ப்பு'' ஒன்று விரைவிலேயே உருவானது.


கைதிகளை உற்சாகப் படுத்த இந்த சர்க்கஸ் காட்சி ஏற்பாடாகி யிருக்கிறது... ப்ராங்க்!
தங்களைப் போலவே சில மனிதர்களும் கம்பிகளின் பின்னால் சுதந்திரம் இழந்து தவிப்பது புரிந்தால் இந்த விலங்குகளுக்கு சற்று ஆறுதலாக இருக்குமில்லையா?
கைதிகளின் புனர் வாழ்வுத் திட்டத்திற்கு இந்த சர்க்கஸ் நிகழ்ச்சி நிச்சயமாக உறு துணை புரியக் கூடும் வார்டன்!
உண்மைதான் மிஸன் பாட்டர்! ஆனால் எதற்குமே அசைந்து கொடுக்காத கல் நெஞ்சக்காரர்களுக்கும் இங்கே பஞ்சமில்லை!
அடடே... அப்படியா சமாச்சாரம்!
என்னப்பா யோசனை... சர்க்கஸ் கம்பெனியோடு நைஸா தப்பிச்சு ஓடிடலாம்னு கனவு காண்றியா?
உளறாதே...! இன்னமும் பூந்தோட்ட டிசைனை நான் போட்டு முடிக்க வில்லை...!



சில நிமிடங்
களுக்குப் பின் -
அந்த ஆப்பிள்களை
இப்படிக் கொடு... ஒரு
காரியம் பண்ணப்
போறேன்.
சர்க்கஸ் அங்கே
வருவது
மேங்க்ளருக்கு
'நம்பிக்கை'யை
தந்தது...
இந்த விளையாட்டை
நிச்சயமாக நான்
பயின்றுவிட முடியும்..!
ஏய்... என்ன இது - சிறு
பிள்ளைத்தனமான
விளையாட்டு?
என்னை நீ புரிந்து
கொண்டது அவ்வளவு
தான்!
கற்று வைத்துக்
கொண்டால் எந்த ஒரு
கலையும் உரிய
தருணத்தில் நமக்கு
கைகொடுக்கும் தம்பி!
தண்டனையை அனுப
விக்க மேங்க்ளருக்கு
இந்த ஆயுள் போதாது
- இல்லையா...!
ஆமாம்... அவனைப்
பற்றி இனி நாம்
அலட்டிக் கொள்ள
தேவையேயில்லை...!


அவன் வெளியில் இருந்தால் பொதுமக் களுக்கு அதிலும் குறிப்பாக உங்களுக்கு ஆபத்து!
ஆமாம்...! ஏனோ அவன் என்னை அடி யோடு வெறுக்கிறான்.
நியூயார்க்கில் நிலவரம் அமைதி யாகவே இருந்தது.
ஆனால் மேல் திசை சிறைச் சாலை ஒன்றில் புயல் சின்னம் உருவாகிக் கொண்டு இருந்தது...
இந்தத் திறமை எனக்கு ஒரு புது வாழ்க்கையை தரப்போகிறது...
எனக்கு மட்டும் சுதந்திரம் கிடைத்தால் முதல் வேலையாக திமிர் பிடித்த அந்த டிடெக்டிவ்வின் முகரையை பெயர்ப்பேன்.
பரவாயில்லையே... ரொம்ப லாவகமாக ஆடுகிறாயே!
ரிப் கெர்பி மீது உனக்கு அவ்வளவு கோபமா?
கோபம் என்று சாதாரணமாக சொல்லி விட்டால் எப்படி... என் பரம எதிரி... அவனை அப்படியே
நார் நாராக கிழித்துப் போட வேண்டும் போல் அப்படி ஒரு வெறி எனக்கு!
பின்னர் ஒரு நாள் -
கைதிகளை குஷிப்படுத்த ஏற்பாடாகி யிருந்த சர்க்கஸ் வந்து இறங்கியது.
MENU
J.P. BROS.
CIRCUS



மேங்க்ளர்...! என்ன விஷயம்?
சர்க்கஸ் ஆட்களுக்கு நான் ஒத்தாசை செய்யலாமா... அந்த மாதிரி வேலைகள் என் ரத்தத் தோடு ஊறிப்போன ஒன்று...
ஓ... நீ தாராளமாக உதவலாம்... எனக்குத் தெரியும் உள்ளுக்குள் நீ ஒரு குழந்தை என்று!
தாங்க் யூ... ஸார்!
அப்பபாவிபோல் நாடக மாடினான் மேங்க்ளர்..
வார்ட்னை ஏமாற்றியாயிற்று...
யாருக்கும் சந்தேகம் எழாத வாறு நான் நடந்து கொள்ள வேண்டும்!
கலைஞர்கள் நிகழ்ச்சிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந் தார்கள்.
கோமாளி ஒருவன் வெகு சிரத்தையாக வேடம் புனைந்து கொண்டிருந் தான்...
பூனைபோல் அங்கே வந்து சேர்ந்தான் மேங்க்ளர்...
உயரம், உடல்வாகு எல்லாம் என்னைப் போலவே இருக்கிறது- அதிர்ஷ்டக்காரன் நான்!


ஓ... வார்டன்... இந்தக் கைதிகள் எப்படி மனம் விட்டுச் சிரிக் கிறார்கள் பார்த்தீர்களா?
அவர்களுடைய கல் மனங்களை இது இளகச் செய்யக்கூடும்.
நான் காலதாமதம் செய்யக்கூடாது.
இதோ புறப்பட்டுவிட் டேன். ஆனால் மேடையை நோக்கி அல்ல...
தந்திரமாக தப்பி வெளியேற மேங்க்ளர் துணிந்து விட்டான்.
சமயோசித புத்தி அவனுக்கு கைகொடுத்தது.
ஓ... வார்டன்... அந்த கோமாளியின் சாகஸத்தை பாருங்க ளேன்.
அநாயாசமாக பந்துகளை போட்டுப் பிடிக்கிறான்... அட் டகாச மாக இருக்கிறது.


ஆட்டம் சுறு சுறுப்பாக தொடங்கியது
ஹைய்யா... யானை வந்திட்டுது...!
அதோ... கொரில்லா வருது பார்...!
பார் விளையாட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு இருந்தது...
பாவம் கைதிகள்... அவர் களை இன்னிக்கு வயிறு குலுங்க சிரிக்க வைக்கணும்!
உள்ளே நிகழ்ந்த போக்கிரித் தனம் யாருக்கும் தெரியாது.
J. B. BROS. CIRCUS
MAIN ENTRANC
TICKETS



இந்தக் கட்டத்தில் அதிர்ஷ்டம் எனக்கு துணை நிற்க வேண்டும்... இல்லை
என் வேஷம் கலைந்து விடும்.
மேங்க்ளர் நேராக தலை வாசலை நோக்கி நடந்தான்.
இந்த யோசனை வேறு யாருக்கு வரும்?
பாருங்களேன்... அந்தக் கோமாளி வந்து ஆட்டத்தை ரசிக்க முடியாமல் வெளியே பொறுப்பில் இருக்கும் காவலாளிகளை குஷிப்படுத்த அவர்கள் இருக்குமிடத்திற்கே போகிறான்.
அங்கிருந்து வெளியே கிளம்பிக் கொண்டிருந்த டிரக்கின் டிரைவர் வியப்போடு கோமாளியை பார்த்தான்.
F & D PLUMBING
நீ வெளியேறும்போது நான் டிரக்கில் ஏறி பின்னால் நின்று கொள்கிறேனே?
ஓ...! ரொம்ப தமாஷா இருக்கும் - ஏறிக்கோ!
டிரக்கிலே ஏறிக்கிட்டு தமாஷ் பண்றான் பாரு அந்த கோமாளி!
அருமையான வேடிக்கைதான்! கதவை திறந்து விடு - டிரக் போகட்டும்!
&D PLUMBING


அந்தக் கோமாளி திரும்பி வரும்போது, அனுமதி இல்லை என்று சும்மாவேணும் சொல்லி கலாட்டா பண்ணுவோம்...!
ஆசாமி ஒரு நிமிஷம் கதிகலங்கிப் போயிடுவான்!
பார்க்க ரொம்ப தமாஷாக இருக்கும்.
யாருக்குமே சந்தேகம் எழ வில்லை.
தூள் கிளப்பறே தம்பி...
எங்கள் பாராட்டுக்கள்.
F&D PLUMBING CO.
நான் கட்டிப் போட்டு விட்டு வந்திருக்கிற ஆசாமியை பார்த்த பிறகு என்ன சொல்வார்களோ?
ஆகா... வெளிக் காற்று எவ்வளவு சுத்தமாக, மணமாக இருக்கிறது!
F & D PLUMBING CO
வெளிவாசலை நெருங்கிவிட்டது டிரக்
இதுவரை வந்தது போதுமில்லையா...? நீ திரும்பிப் போக வேண்டும் - அல்லவா?
பிரச்னை முளை விட்டது



அந்தக் கோமாளி வரம்பு மீறி போவதாக் உறுத்துகிறது.
திரும்பி வந்து தன் கூட்டத்தாரோடு சேர்ந்து கொள்ள கணிசமான தூரத்தை அவன் கால் நடையாக கடந்து வர வேண்டும்.
தொடர்ந்து போய்க் கொண்டே இரு.. சில காவலாளிகள் இன்னமும் என்னை பார்க்கவில்லை.
இன்னமும் நான் ரைபிளின் சுடும் வரம்புக்குள் இருக்கிறேனடா மடையா...
எப்போதும் குழாய் களோடு மாரடிக்கிற தொழிலில் இப்படி ஒரு மாறுதல் உற்சாகமாகத் தானிருக்கிறது.
ரொம்ப தூரம் போய் விட்டான்... ஒரு வேளை டிரைவரே அவனை திரும்ப கொண்டு வந்து சேர்க்கக்கூடும்.
ஆமாம் அப்படித்தான் தோன்றுகிறது!
ம்ம்.. இனி ஒரு பயல் என்னை எதுவும் செய்து கொள்ள முடியாது.
அடுத்த நடவ டிக்கைக்கு ஆயத்த மானான் மேங்க்ளர்.
ஓ...! எனக்கு வேண்டிய ஆயுதங்களை இவனே பையில் வைத்திருக்கிறான்!



டொங்!
'லிப்ட்' கொடுத்தமைக்கு மிக்க நன்றி தம்பி... ரொம்பவும் களைத்துப் போய் விட்டாய் - கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்.
ரிப் கெர்பியின் பரம எதிரி தப்பி விட்டான்...
இனிமேலும் இந்த அசிங்கங்களை மாட்டிக் கொண்டிருக்க அவசியமில்லை. கழற்றி எறிந்து விடலாம்.
கோமாளியின் உடுப்புகளை சுலபமாக கழற்றிவிட்டேன். ஆனால் இந்த மேக்கப் பூச்சு லேசில் போக மாட்டேன் என்கிறது.
அங்கே சர்க்கஸ் கூடாரத்தில் -
ஏய்... நீ எப்படி திரும்ப இங்கே வந்து சேர்ந்தாய்! இப்படி இந்தக் கோலத்தில் நிற்கிறாயே - என்ன வகையான சேஷ்டை இது?
அந்த ரிங்மாஸ்டருக்கு ஏகப் பட்ட கோபம்!
ஏய் ஜெர்ரி... உன்னை என்ன செய்கிறேன் பார் - முதல் குற்றம்... அனுமதியின்றி நீ வெளியே போனது... எப்படியோ திரும்பி வந்த நீ கூடுவிட்டு கூடு பாய்கிற வித்தைக் காரன் மாதிரி இந்தக் கோலத்தில் நிற்பது இரண்டாவது குற்றம்.


வேஷத்தை திரும்பவும் போட்டுக் கொண்டு மேடைக்கு வந்து சேருகிற வழியைப் பார்..
மேங்க்ளர் சுறு சுறுப்பாக இயங்கினான்...
அந்த பாங்க்கில் என் கைவரிசையை காட்டினால் என்ன?
பாய்லர் அறையில் குழாயில் ஏதோ கசிவு என்று போன் பண்ணினார்கள்...
என்னோடு வாருங்கள்... ஏகப்பட்ட உபகரணங்க ளோடு வந்து இருக்கிறீர்கள்!
TELLER
எனக்கு உன் துப்பாக்கி வேண்டும் - எனவே...
ணங்!
செக் புத்தகத்தை எடுத்துவர மறந்துவிட்டேன். அதற்காக பணம் இல்லைன்னு மறுத்து விட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.



நான் கிளம்பிச் செல்கிறவரை வாயை திறந்தீர்களோ மண்டையில் ஓட்டை போட்டுவிடுவேன்- ஜாக்கிரதை!
TELLER
முதல் முயற்சி யில் முழு வெற்றி...
இந்த ஊர் ஜனங்கள் பெருந்தன்மை யானவர்கள்... காரை நிறுத்திவிட்டு செல்லும்போது சாவியை அப்படியே விட்டுப் போயிருக்கிறார்கள்...
சிறைச்சாலையிலோ
விஷமத்தனமான கண்கள், காலிப்ளவர் மாதிரியான காதுகள்? அப்படியானால் அது
நிச்சயம் மேங்க்ளர்தான்! சர்க்கஸ் ஆட்டத்தை நிறுத்துங்கள்.
அறிவிருக்கிறதா...? அவனை வெளியே போக விட்டு விட்டீர்களே!
நிஜ கோமாளி என்றே நம்பி விட்டோம் வார்டன்! திரும்பி வந்துவிடுவான் என்று எதிர் பார்த்தோம்!
திடீரென்று விசில் ஊதப் பட்டதும் லெஸ்டர் என்னை அப்படியே விட்டு விட்டார்...
பொத்தென்று வலையில் வந்து விழுந்தேன்.
உலகம் பிறந்தது எனக்காக...



கிழக்கு திசையில் விரைந்தான் மேங்க்ளர்.
ஐம்பதினாயிரம் கிடைத்தது - அந்த பேங்க்கிலிருந்து
நான் நியூயார்க் போய்ச் சேருகிறவரை வழிச் செலவுக்கு இது போதும்!
அங்கே போனதும் முதல் காரியமாரிப் கெர்பியை ஒழித்துக் கட்ட வேண்டும்.
என் தொழிலுக்கு அவன் ஓர் இடைஞ்சல்...
இந்த 'ரெஞ்ச்'சில் மேங்க்ளரின் கைரேகை பதிவாகியிருக்கிறது!
ஆனல் அவனை பிடிக்க இது எவ்வகையில் பிரயோஜனப்படும்?
ம்ம்... இந்த கோட்டு அருமை - ஒரு துப்பாக்கியையே உள்ளே மறைத்து வைத்து எடுத்துப் போகலாம்!
20% OFF
ஓ... பிரைவேட் டிடெக்ட்டிவா? ஆனலும் போலீஸ் உத்தியோகம் 'த்ரில்'லானதுதான்!
ஆமாம்... நீ சொல்வதும் ஒருவகையில் சரிதான். எனக்கும், போலீஸாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு - எப்போதும்.
அங்கே - நியூயார்க்கில்..
கோமாளி வேடமிட்டு ஜெயிலைவிட்டு வெளியேறி தப்பிவிட்டான் பார்த்தீர்களா...
மேங்க்ளருக்கு இதெல்லாம் வெகு சாதாரணம்.



மறுபடியும் பாங்குகளை கொள்ளையடிக்கத் தொடங்கி விடுவானோ?
ரிப் சுதாரித்துக் கொண்டு விட்டார்
அந்த கோணல் புத்திக் காரன் அடுத்து என்ன செய்வான் என்று எவராலுமே கணிக்க முடியாது..
அவனை எந்த நிமிடமும் நான் இங்கே எதிர்பார்க்கலாம்...!
நான் தப்பிவிட்ட செய்தியறிந்தால், தேடி வருவேன் என்று நிச்சயமாக எதிர்பார்ப்பான் ரிப்.
தன்னை ஜெயிலுக்கு அனுப்பிய ரிப் கெர்பி மீது அடங்காத கோபம் மேங்க்ளருக்கு...
அவனை ஒழித்துக் கட்டாதவரை எனக்கு நிம்மதியே கிடைக்காது.
ஏன் திடீரென்று என்னை போகச் சொல்கிறீர்கள் ரிப்.
ஸாரி... அன்பே... மேங்க்ளரை திரும்பவும் பிடித்து ஜெயிலுக்குள் தள்ளுகிறவரை நீ என் அருகில் இருப்பது ஆபத்து.
க்ராக்
அவன் வெளியில் சுற்றுத் திரியும் போது, நான் ஓய்ந்துகிடக்கலா
கூடாது. எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும்!


அவனுக்கு ஈடு கொடுக்க இம்மாதிரி பயிற்சிகள் எல்லாம் அவசியம்,
மேங்க்ளரை சந்திக்க தன்னை தயார்படுத்திக் கொண்டிருந் தார் ரிப்...
SAINTLY ANGEL
ஓ... இந்த 'க்ளப்' இன்னமும் இருக்கிறதா..? உற்சாகமான வரவேற்பை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்!
ஹலோ... நண்பர்களே
அடடே... மாங்க்ளரா? வாப்பா... வா!
ஊரே கிடுகிடுக்கப் போகிறது!
உன்னை மீண்டும் பார்க்க எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?
க்ரஞ்ச்... எனக்கு ஒரு உதவி
க்ரஞ்ச்சும், மேங்களரும் நெடுநாளைய நண்பர்கள்
வாசலில் ஒரு காரை கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறேன்... விற்றுக் கொடு - ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்வோம்.
ஓட்டம் அத்யாவ சியமான ஒரு பயிற்சி! - மேங்க்ளரை எதிர் கொள்ள நான் ரெடியாகிவிட்டேன்...!


மேங்க்ளரை பிடித்து விட்டதாக செய்தி ஏதேனும் உண்டா ஸார்?
இல்லை... டெஸ்மாண்ட்! ஆனால் -ஹாங்காங் உள்பட பதினேழு இடங்களில் அவன் தென்பட்டதாக, தகவல் வந்து இருக்கிறதாம்.
அவனை பிடிக்கிற வரை நீ என்னோடு இருக்க வேண்டாம்... பட்லர்களின் விடுதிக்கு போய்விடு டெஸ்மாண்ட்
மேங்க்ளர் அருகாமையில்தான் இருந்தான்...
நியூயார்க்கை உனக்கு ரொம்பவும் பிடித்து இருக்கிறது- இல்லையா?
ஆமாம்... திரும்பிய பக்கம் எல்லாம் பாங்குகள்... வேறென்ன எனக்கு வேண்டும்
பறவைகளுக்கு பழத் தோட்டம் மாதிரி உனக்கு இந்த நியூயார்க்... அப்படித்தானே!
சந்தேகமில்லாமல்...!
ஏகப்பட்ட புது கட்டிடங்கள் முளைத்து இருக்கின்றன.
ஆமாம்... தப்பியோட நீ படிக்கட்டை உபயோகிக்க நினைத்தால் நிச்சயம் மாட்டிக் கொள்வாய்.
அருகே, ஜனங்கள் கூடத் தொடங்கினர்.



NAL
ANK
UST
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
தெரு முனையில்-
துப்பாக்கி முழக்கம்...! அங்கே ஏதோ விவகாரம்!
கட்!
நமக்கேன் வம்பு -வா... ஓடிப் போய்விடலாம்!
அலட்டிக் கொள்ளாதே.! சினிமா படப்பிடிப்பு நடக்கிறது அங்கே!
''சூப்பர் க்ரூக்'' என்ற சினிமா எடுக் கிறார்கள்.... வா- போய் வேடிக்கை பார்க்கலாம்!
ம்ம்... ஒதுங்கு... ஒதுங்கு... - அப்பால் போ!
என் மேலே கையை வைத்தான் என்றால் அல்லவா தெரியும் சேதி!



சரி... மறுபடியும் முயன்று பார்ப்போம்!
படப் பிடிப்பு தொடர்ந்தது...
ஊஹூம்.. அவர்களுக்கு சரியாகவே செய்யத் தெரியவில்லை.
ஒரு செய்தி நிருபர் கூட்டத்தினரை படம் பிடித்தார்...
படத்தைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன மேங்க்ளர்?
ஹீரோ செய்வது அம்மாஞ்சித்தனமாக இருக்கிறது! பாங்க்கை கொள்ளையடிக்கிற இலட்சணமா இது - தூ!
காட்டமாக விமர்சனம் செய்தான் மேங்க்ளர்...
கற்றுக் குட்டிகள்...! இவர்கள் பண்ணுகிற கோமாளித்தனத்தை வேடிக்கை பார்த்து பொழுதை வீணடிக்க எனக்கு இஷ்டமில்லை.. வா போகலாம்.
அன்று மாலையில் -
அடிசக்கைன்னானாம்!
FILM MOVIE


ஸார்... இதைப் பாருங்களேன்!
என்ன... விலைவாசி மறுபடியும் கூடி விட்டதா- இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?
படப்பிடிப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற இந்த மூஞ்சியை அடையாளம் தெரிகிறதா?
ஓ... இவன் எப்படி இங்கே - ?
FILM MOVIE
மேங்க்ளர் நியூயார்க் வந்து சேர்ந்து விட்டானா?
என்ன ஒற்றுமை பார்த்தீர்களா... மேங்க்ளர் 'சூப்பர் க்ரூக்' படப் பிடிப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறான்!
நியாயமில்லைதான்... அவனை ஹீரோவாக அதில் நடிக்கச் செய்திருக்க வேண்டும்!
கூட்டத்தினரை படம் பிடித்த நிருபருக்கு நன்றி! எனக்கு வேலை வந்து விட்டது டெஸ்மாண்ட்!
பணத்தை குவிப்பதா... இல்லை - ரிப் கெர்பியை தீர்த்துக் கட்டுவதா? எது - முதலில்.. மேங்க்ளர்?
இரண்டையும் எப்படி ஒரே முயற்சியில் சாதிப்பது என்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன் க்ரெஞ்ச்!



இங்கே உன் திறமைக்கு ஏற்ற வாய்ப்புகள் ஏராளம்!
ஆமாம்... பாங்க்கு களையும், கவச வண்டிகளையும் பார்க்கும் போது என் கைகள் என்னமாய் தினவெடுக் கின்றன தெரியுமா?
மேங்க்ளரின் விழிகளில் பேராசை மின்னியது..
அந்தப் படத்தை அச்சிட்ட பத்திரிக்கை அலுவலகம் இதுதான்!
DAILY TELLITE
இந்தப் படத்தை பெரிதாக உருப் பெருக்கம் செய்துதர முடியுமா... ப்ராங்க்?
ஓ... முடியுமே! இதில் இருந்து நீங்கள் ஏதாவது கண்டுபிடித்தால் முதலில் எங்களுக்குத்தான் சொல்ல வேண்டும் மிஸ்டர் கொ்பி!
இதோ.. நீங்கள் கேட்ட மாதிரி என்லார்ஜ் செய்யப்பட்ட படம்...
நன்றி... லென்னி!
ஆர்வத்தோடு படத்தை பெற்றுக் கொண்டார் ரிப்...
மேங்க்ளருக்கு அருகில் நிற்கிற அந்த ஆசாமி யார்...?



மறுபடியும் வெளியே கிளம்பிவிட்டீர்களா.... ஸார்?
ஆமாம்... டெஸ்மாண்ட்! கதவை நன்றாக தாழிட்டுக் கொள்!
மேங்க்ளர் என்னைத் தேடி வந்து சேருமுன் நான் அவனுடைய இருப்பிடத்தை தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே எனக்கு உபயோக மான தகவல் கிடைக்கக் கூடும்.
குற்றவாளிகள் பற்றிய தகவல் நிலையம்
மொள்ளமாறிகள் பற்றி தெரிய வேண்டு மானால் நீங்கள் பெட்டி படுக்கையோடு இங்கே வந்து விடுவதுதான் நல்லது... கெர்பி...! ஏனென்றால் பதிவேடுகள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன.
வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது சற்று வித்தியாசமான அனுபவமாக இருக்கும் என்றாலும் நான் துணிந்து விட்டேன்...!
அதோ அங்கே தெரிவதுதான் ரிப் கெர்பியின் அபார்ட்மெண்ட்... ஆனல் ஆசாமி வீட்டில் இல்லை போலிருக்கிறது!
விடா முயற்சி யோடு பதிவேடு களை புரட்டிக் கொண்டிருந் தார் ரிப்...
'வைக்கோல் போர்' சற்று சின்னதாக இருந்திருக்கலாம்!


அங்கே யார் அல்லது எது அசைந்தாலும் சுட்டுவிட வேண்டியது தான்!
அடடே... ஸார் எல்லா கதவுகளையும் சாத்தி வைக்கச் சொல்லி விட்டுப் போனரே...
காரணமாகத்தான் சொல்லியிருப்பார்...! அந்த ஜன்னல் திறந்து கிடக்கிறது... - சாத்தி வைத்துவிடலாம்!
டெஸ்மாண்ட்டுக்கு போதாத வேளை போலும்!
அவரோடு எப்போதும் ஒட்டிக் கொண்டிருக்கிற பட்லர் அவன்... அவனுக்கு ஒரு புதுப்பாடல் கற்றுக் கொடுக்கப் போகிறேன்!
மேங்க்ளர் குறி வைத்தான்!



டுமீல்!
யிப்பாஈ.....!
வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் மேங்க்ளர்..
இதுபோதும்... இப் போதைக்கு! மிச்சத்தை அப்புறமாக வைத்துக் கொள்ளலாம்!
சங்கீத ஞானம் இல்லாத கழுதை...! என் கித்தாரில் ஓட்டை போட்டுவிட்டான்!
மறுபடியும் கதவை சாத்த முயன்றால் ஆபத்தாகிவிடலாம்! மாறாக, விளக்குகளை அணைத்து விடுவது தான் விவேகம்!
ரிப் கெர்பி
இன்னொரு 'விருந்தாளி' நேரம் கெட்ட நேரத்தில் அங்கே வந்து சேர்ந்தார்.
யார்...? யாரது?
டெஸ்மாண்டா? ...நான் பிலிமி வந்திருக்கிறேன்!
நண்பன்தான்!


ஏன்...? எலெக்ட்ரிக் பில் கட்ட வசதி இல்லையாக்கும்?
முதல் தோட்டா என் கித்தாரில் ஓட்டை போட்டது. அடுத்த தோட்டா என் நெற்றியில் ஓட்டை போட்டுவிடக்கூடாது பார்- அதனால்தான்...
போலீஸ் தலை மையகத்தில் -
அப்பாடா..! அகப் பட்டுவிட்டது...- படத்தில் மேங்க்ளரோடு நிற்கும் நண்பனின் பதிவேடு!
விடாமுயற்சி முடிவில் வெற்றியை தந்தது...
ஓகோ... பழைய நண்பனோடு ஒட்டிக் கொண்டிருக்கிறான் போலும்... பெயர்- க்ரெஞ்ச்... வேறென்ன தகவல் கிடைக்கிற தென்று பார்ப்போம்!
ம்ம்... சமூக விரோதி... பெட்டிகளை உடைப்பதில் திறமை சாலி... -
வேண்டுமானால் இவற்றிற்கு நகல் தயாரித்து கொடுக் கட்டுமா... மிஸ்டர் கெர்பி?
WANTED
மின்சார தட்டுப்பாடு இருப்பது உண்மைதான் டெஸ்மாண்ட்... ஆனால்- இது... கேலிக்கூத்து!
ஓ... ஸார்.. என் கித்தாருக்கு நேர்ந்த கதியை பார்த்து விட்டுச் சொல்லுங்கள்!


ஜன்னல் கதவுகளை எல்லாம் சாத்திவிட்டு விளக்கைப் போடு டெஸ்மாண்ட்... அக்கம் பக்கத்தில் யாரையும் காணோம்!
இது தோட்டா பாய்ந்த ஓட்டைதான்!
அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் யாரேனும் டெஸ்மாண்டை சுட முயன்றிருக்கலாம்
சேச்சே... என் மியூஸிக்கை நிஜமாகவே ரசிக்கிறவர்கள் அவர்கள்... மேங்க்ளர்தான் என்னை கொல்ல முயற்சித்திருக்கிறான்.
மேங்க்ளரின் குறி எப்போதும் தப்பியதில்லை... சும்மா மிரட்டவே இதை அவன் செய்திருக்கக்கூடும்!
உனக்கு புது கித்தார் வாங்கித் தருகிறேன்..! ஆனால் நீ இப்போதே பட்லர்களின் ஹாஸ்டலுக்கு போய் விடு!
உங்களை ஆபத்தில் தவிக்கவிட்டுவிட்டு நான் மட்டும் எப்படி ஸார்... போவேன்?
கூடவே இருந்து உதவி செய்கிறேன்...! நான் என்ன செய்ய வேண்டும்- சொல்லுங்கள்!
அங்கே
முதலில் பெரிதாக ஒரு கொள்ளை... நிறைய பணம் சேர்த்துக் கொள்ள வேண்டும் - அப்புறம் அந்த கெர்பியை பரலோகம் அனுப்ப வேண்டும்...! பிறகு - சுகபோகம் தான்!


இவன்தான் மேங்க்ளரா... கூட இருக்கிறவன் பெயர் க்ரெஞ்ச்சா?
ஆமாம்... பிலிமி!
ஜெயிண்ட்லி ஏஞ்சல்ஸிலே நான் எப்படியாவது வேலைக்கு சேர்ந்து கொள்கிறேன். அவர்களுடைய நடமாட்டத்தை ரகசியமாக உங்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கிறேன்!
அவர்கள் ஆபத்தான பேர்வழிகள். நீங்கள் இருவரும் சற்று ஒதுங்கியே இருப்பது நல்லது.
என் கித்தார்தான் அநியாயமாக கெட்டுப் போய்விட்டது.
செய்தித்தாளை மேங்க்ளரும் காண நேரிட்டது.
ஓ...! க்ரெஞ்ச்சோடு என்னைத் தேடிக் கொண்டு ஜெயிண்ட்லி ஏஞ்ச்ல்ஸுக்கு வந்து சேருவது நிச்சயம்
அப்படியா சேதி...? பொறு மேங்க்ளர்... நாம் வேறு எங்கே யாவது சந்திப்போம்!
இது சாதாரண மில்க் ஷேக்தான்... ஆனால் என்னுடைய ஸ்பெஷாலிடி... சாப்பிட்டு பார்த்தால்தான் இதன் அருமை புரியும்!
புரிந்து கொள்ள உயிர் இருக்க வேண்டுமே!


அங்கே வேலை தேடிக் கொள்ள முடியும் என்றாயே - எப்படி சாத்தியம்?
என் நண்பனுக்கு தெரிந்த ஒரு நபருக்கு வேண்டிய ஒரு ஆள் அங்கே வேலை செய்கிற ஆசாமிக்கு சொந்தக்காரன்.. இது போதாதா - ?
ஆனால் இதைப் பற்றி கெர்பியிடம் மூச்சு விடாதே....
கிளப்பிலோ
ஏன்... மேங்க்ளர் இந்தப் பக்கம் வருவதே யில்லை... நம்மை பிடிக்கவில்லையா என்ன?
இங்கே ஆபத்து சூழ்ந்திருப்பதாக நினைக்கிறான். நாளை நான் அவனுடைய இருப்பிடத்திற்கு போய் அவனை சந்திப்பதாக இருக்கிறேன்...
அதோ... சார்லி! அங்கே வேலை பார்க்கிறவன்!
கூப்பிடு அவனை!
பிலிமி தன் வழியில் முன்னேறிக் கொண்டி ருந்தான்
உன்னை சந்தித்ததில் சந்தோஷம் சார்லி..!
வேலை - உனக்குத்தானா?


ராத்திரிக்கு மாற்று ஆள் ஒன்று தேவைப்படுகிறது... ஏற்பாடு செய்துவிடட்டுமா?
எதிரிகளின் முகாமில்...
திறமைசாலிதான்! இடத்தை பளிச்சென்று தோன்றும்படி மாற்றி விட்டாயே!
ஆமாம்... ஸார்..! நேற்றுத்தான் வேலைக்குச் சேர்ந்தேன்!
மேங்க்ளரோ, க்ரெஞ்ச்சோ கண்ணில் படக் காணோமே - ஏன்?
என்னுடைய இந்த இடம் நூற்றுக்கு நூறு பத்திரமானது தோழர்களே....! நாம் அந்தக் கொள்ளையை எப்படி நடத்தி முடிக்கப் போகிறோம் என்று சொல்கிறேன்- இப்போது!



மேங்க்ளர் தன் திட்டத்தை விவரித்தான்.
பழைய கார்களை கடாசும் மைதானத்தில் கவச மோட்டார் கார் காணப்படுவதில்லையே ..... ஏன் என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா!
கவச வண்டியாக இருந்தாலும் அது காலியாக இருக்கும் போது யாருக்கு அதில் அக்கறை இருக்க முடியும்!
நீ ஏன் இன்னமும் பெரிதாக எதையுமே சாதிக்கவில்லை என்பதற்கு இதுதான் காரணம் க்ரெஞ்ச்!
காரணத்தை நான் சொல்கிறேன் - அவற்றை கழிசடை என்று தூக்கி எறிவதில்லை. சிறு நாடுகளுக்கு விற்று விடுகிறார்கள்!
எனக்கு இது தெரியாமல் போயிற்றே!
அப்படி விற்பதால் நமக்கென்ன வந்தது..!
நாம் நமக்கென்று ஒன்றை திருடி எடுத்து வரப் போகிறோம் மார்ட்டின்...!
ஹைய்யா..! ரேஸில் ஜாக்பாட் அடித்தால் ஒரு கவச மோட்டார் வாங்க வேண்டும் என்று ரொம்ப நாளாக கனவு கண்டு கொண்டிருந்தேன்!
அடுத்து நாம் என்ன செய்யப் போகிறோம் என்று பின்னர் சொல்கிறேன்... இப்போது நீங்கள் போகலாம்!


ஓ..! நோ..! மேங்க்ளர் வரக்காணோம் - ஆனால் படத்தில் அவனோடு இருந்த க்ரெஞ்ச் இதோ வந்திருக்கிறான்!
Ooo...
என்ன ஸார் வேண்டும்!
யார் நீ?
பெயர் - பிலிமி! புதிதாக வேலைக்கு வந்து சேர்ந்திருக்கிறேன்..! தற்காலிக உத்தி யோகம் என்று சொன்னார்கள்.
ஜெயிண்ட்லி ஏஞ்சலில் புதிதாக யாரைப் பார்த்தாலும் சந்தேகக் கண் ணோடுதான் பார்ப்பார்கள்...
நல்லவேளை க்ரெஞ்சுக்கு என்னை தெரிந்திருக்கவில்லை.
கொஞ்சம் கூடுதலாக ஊற்றிக் கொண்டார்கள் என்றால் தாராளமாக உளறுவார்கள்... உருப்படியாக ஏதாவது தகவல் கிடைக்கலாலம்!
Ooooo...



சற்று நேரம் கழித்து -
கவச மோட்டார் ஒன்றை திருடி எடுத்து வரும் மேங்க்ளரின் திட்டம் பற்றி நீ என்ன நினைக்கிறாய் கிரெஞ்ச்?
எனக்கு தெரிந்த தெல்லாம் மேங்க்ளரின் திட்டம் என்றைக்குமே தோற்றுப் போன தில்லை என்பதுதான் மார்ட்டின்.
அவனுடைய பாச்சா பிரைவேட் டிடெக்டிவ் ரிப் கெர்பியிடம் மட்டுமே பலிக் கிறதில்லை.
டிரக்கை தேவைக்கு பயன்படுத்திக் கொண்ட பிறகு அதை ஆற்றினுள் மூழ்கடிக்கு முன் அதனுள்ளே கெர்பியையும் கட்டிப் போட அவன் பிரியப் படலாம்!
மேங்களருக்கு கெர்பி மீது அவ்வளவு ஆத்திரம்!
பழி தீர்த்துக்கொள்ள புதுமையான யுக்திதான்!
நிறைய தகவல்கள் கிடைத்துவிட்டது பிலிமிக்கு...
டெஸ்மாண்டின் பாஸுக்கு உதவ இன்னும் கூடுதலாக தகவல் சேகரிக்க வேண்டும்.
இன்னும் கொஞ்சம் ஊற்றட்டுமா... ஸார்?
ஏன்.. இதற்கு மேல் என்னால் குடிக்க முடியாது என்று நினைத்தாயா- கொடு இப்படி!



நீ.. உன் பெயர்.. பிலிமி - இல்லையா? இது - உன் நலத்துக்காக!
எனக்கு அவசியப் படுமோ!
ந...நன்றி!
கொள்ளையடித்த பணத்தை கொண்டு சேர்த்தபின் கெர்பியோடு கவச மோட்டாரை ஆற்றில் மூழ்கடிக்கப் போகிறார்கள்... டெஸ்மாண்ட்!
ஏன் இப்படி மிரண்டு போயிருக்குறாய்
டெஸ்மாண்ட்? மறு படியும் கித்தாரில் ஓட்டை விழுந்து விட்டதா என்ன?
அதைவிட மோசம் ஸ்ார்!
ஏகப்பட்ட பணத்தை கொள்ளையடித்துக் கொண்ட பின்னர் மேங்க்ளர் கவச மோட்டாரோடு
உங்களையும் சேர்த்து ஆற்றில் மூழ்கடிக்கப் போகிறானாம் ஸார்...!
பிலிமி சேகரித்த தகவலா...?
ஆபத்து வருமுன் அவன் அங்கிருந்து கிளம்பி விடுவது நல்லது!
எங்கிருந்து கவச மோட்டாரை கடத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டிருந் தான் மேங்க்ளர்.



ஓரிடத்தில் -
பழைய டிரக்குகளை வெளிநாட்டில் விற்க ஏற்றிக் கொண்டிருக் கிறார்கள்... எனக்கு வேண்டியது - ஒரு கவச மோட்டார்!
மேங்க்ளரின் திட்டம் பற்றி எனக்கு தெரிந்த தகவல்கள் அவ்வளவு தான் இன்ஸ்பெக்டர்..
போலீஸாருக்கு நீங்கள் தகவல் கொடுத்தது ரொம்ப நல்லது ஸார்.
ஏகப்பட்ட துறைகள் இருப்பதால் அவன் எங்கிருந்து கவச மோட்டாரை திருடப் போகிறான் என்று தனி ஒரு மனிதனாக என்னால் நிர்ணயிக்க முடியாது என்பதால்தான் போலீஸாருக்கு தெரிவித்தேன் டெஸ்மாண்ட்!
சில இரவுகளுக்குப் பின் -
அதோ - அருமையான கவச மோட்டார்..! நாம் கோட்டை விட்டு விட்டோம்!
இன்னமும் அது கை நழுவிப் போய்விட வில்லை க்ரெஞ்ச் - என்னோடு வா!
அந்த மோட்டாரை திரும்ப தளத்திற்கு கொண்டு வா!



ம்ம் - என்ன யோசனை...? பத்திரமாக திரும்ப கொண்டுவந்து இறக்கு!
ச..சரி.. ஸார்!
க்ரேனை இயக்கிக் கொண்டிருந்த ஆசாமிக்கு சாக விருப்ப மில்லை.
அடுத்த பத்து நிமிடங் களுக்கு நீ ஊமையாக இருக்க வேண்டும். இல்லையேல், தேடி வந்து கொல்வேன் - ஜாக்கிரதை
மேங்க்ளருக்கு கவச மோட்டார் கிடைத்து விட்டது.
காரேஜ் ரெடியாக இருக்கிறது... தேவைக்கு ஏற்ப இதை உடனடியாக சீர் செய்ய வேண்டும்.
நீ ஏன் அபயக் குரல் எழுப்பவில்லை?
கொன்று விடுவேன் என்று அச்சுறுத்தினான் ஸார்...!


டிரக்கை தன் இருப்பிடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தான் மேங்க்ளர்...
புது பெயிண்ட் அடிக்கணும்... புல்லட் ப்ரூப் கண்ணாடிகளை பொருத்த வேண்டும்... காரியங்கள் மளமள வென்று நடக்க வேண்டும்.
கச்சிதமாக கிளப்பிக் கொண்டு போய் விட்டானாக்கும்... இன்ஸ்பெக்டர்? அப்படியானால் அது நிச்சயம் மேங்க்ளராகத்தான் இருக்கும்!
திருடி கொண்டு வரப்பட்ட டிரக் கின் தோற்றம் முழுவதுமாக மாற்றப்பட்டது.
ஒரு டாங்க்கையே சமாளிக்கும் திறன் இந்த டிரக்கிற்கு இருக்க வேண்டும்.
மேங்க்ளர் கவச மோட்டாரை சம்பாதித்துக் கொண்டு விட்டான். நீச்சலில் நான் என் திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.
ஸார்... இப்படி அலட்சியமாக எடுத்துக் கொள்கிற சமாச்சாரம் இல்லை ஸார் - மேங்க்ளர் விவ்காரம்!



ம்ம்... பிரமாதமாக இருக்கிறது... ஒரு நம்பர் பிளேட்டை
எங்கிருந்தாவது திருடி கொண்டு வர வேண்டும்... மெஷின் துப்பாக்கிகள் சில கைவசம் இருந்தால் நல்லது.
கம்பெனி பெயர் எதையாவது எழுத வேண்டாமோ?
கட்டாயம் எழுத வேண்டும்... ''எஸ். ஏ. செக்யூரிட்டி'' என்று எழுது. எஸ். ஏ. என்றால் ஜெயிண்ட்லி ஏஞ்சல்ஸ் என்று நமக்கு மட்டும்தான் தெரியும்.
அதோ வருகிறார்கள்- இன்று சற்று தாமதமாக!
நோக்கம் என்னவோ?
ஹாய்ய்... ப்ளுமி.. வழக்கம் போல ஊற்றிக் கொடு!
தருகிறேன் ஸார்...! என் பெயர் ப்ளுமி இல்லை பிலிமி!
வந்தவர்களிடம் உற்சாகம் வெளிப் படையாக தெரிந்தது.
ஏதோ டிரக் என்று அவர்களுடைய கிசு கிசு பேச்சில் அடிபடு கிறது... டியூட்டி முடிந்த பின் முழுமூச்சில் தகவல் சேகரிக்க வேண்டும்.
அதோ போகிற க்ரெஞ்ச்சை பின் தொடர்ந்து சென்றால் ஏதாவது உருப்படி யான விஷயம் தெரிய வரலாம்



ஓ.கே.. இதுதான் அவன் வீடா...? மிஸ்டர் கெர்பிக்கு இந்த அட்ரஸ் தேவைப் படலாம்!
பிலிமி வந்த வழியே திரும்பி விட்டான்.
இந்த விலாசத்தை உன் மாஸ்டரிடம் கொடு டெஸ்மாண்ட் அவருக்கு இது பிரயோஜனப்படலாம்.
எதிரிகள் இதை அறிய நேர்ந்தால் உனக்கு ஆபத்தாகிவிடலாம். ஜாக்கிரதையா இரு.
எந்த கவச மோட்டாரை பார்த்தாலும் சந்தேகம் வந்து விடுகிறது எனக்கு...!
மேங்க்ளரின் கவச மோட்டாராக இருக்கும் பட்சத்தில் பணம் வண்டியிலிருந்து பாங்குக்குள் போகாது.
சந்தேக கண்ணோடு சுற்றிச் சுற்றி வந்தார் ரிப்.
அங்கே -
அதோ அங்கே தென்படுகிற கட்டிடத்தை கவனி... க்ரெஞ்ச்!
இரும்பு பெட்டகம் மாதிரி இருக்கிறது- உறுதியாக!
விமானங்களில் மில்லியன் கணக்கில் பணம் இங்கே வந்து சேருகிறது.


இங்கே பத்திரப் படுத்தப்பட்டு பின்னர் கவச மோட்டார்களில் பெடரல் பாங்குக்கு போகும்.
புரிகிறது. நாம் கபால்னு உள்ளே புகுந்து அகப்பட்டதை சுருட்டப் போகிறோம்.
மேங்க்ளர் தன் திட்டத்தை வெளியிட்டான்.
அது சற்று ஆபத் தானது... பணம் டிரக்கிற்கு மாற்றப்படும்வரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும்...
பிறகு நாம் கை வரிசையை காட்டுவோம்!
சில தினங்களுக் குப்பின் ஒரு நாள்
பெரும் தொகை அங்கிருந்து டிரக்கில் எடுத்துச் செல்ல ஏற்பாடானது.
துப்பாக்கி தயாராக இருக்கட்டும்... அவர்கள் கிளம்பிச் சென்றதும் வழியில் மடக்குவோம்!


வேறொரு கம்பெனியின் டிரக்...? அவர்களுடைய நோக்கம் தான் என்ன?
திட்டமிட்டே விஷமம் பண்ணுகிற மாதிரி தோன்றுகிறது.
ஏறத்தாழ அதே மாதிரி தோற்ற மளித்த கவச மோட்டார் ஒன்றினால்
ஓரம் கட்டப்பட்டது அந்த கவச மோட்டார்...
ம்ம்... முன் கண்ணாடியை, டயர்களை... - குறிவை மார்ட்டின்!
மேங்க்ளரின் டிரக்கில் இருந்து சரமாரியாக தோட்டாக்கள் சீறிக் கொண்டு வெளிப் பட்டன.
டுமீல் டுமீல் டுமீல்
கைகளை உயர்த்திய வாறு கீழே இறங்கி வாருங்கள்
ஆல்ரைட்... உங்களுடைய துப்பாக்கி களையும், சாவிக் கொத்தையும் எடுத்துக் கொள்கிறோம்!



சரக்குகளை எங்கள் வண்டிக்கு மாற்ற ஒத்தாசை செய்யுங்கள்.
கரென்ஸிகள் அடங்கிய பெட்டிகள் நொடியில் கைமாறின.
S.A.
CURI
அவர்களுடைய டிரக்கின் பின் புறத்திலேயே அவர்களை போட்டு அடைத்துவிட்டு கிளம்புங்கள்.
ம்ம்... சீக்கிரம் ஏறு க்ரெஞ்ச் - போலீஸ் வேன் ஒன்று அதோ வருகிறது.
BELT
அந்த கவச மோட்டார் பிரேக் டவுன் ஆகி நின்று விட்டதோ!
நம் உதவி அவர்களுக்கு தேவைப்படலாம்.
இம்மாதிரியான கவச மோட்டாரில் நான் இருக்கும்போது போலீஸ் என்னை நிறுத்தினால் எவ்வளவு அட்டகாசமாக இருக்கும் என்று நான் நெடுநாளாக கனவு கண்டதுண்டு!



ஒரு வண்டி நகரத் தொடங்குகிறது!
ஹே... மிஸ்டர்-நிறுத்து!
அவர்களுடைய வாகனை கொஞ்சம் கவனி மார்ட்டின்!
மேங்க்ளரின் நெடுநாளைய கனவு இன்று ஈடேறி விட்டது!
டுமீல் டுமீல்
புஷ்
டுமீல் டுமீல்
அந்த போலீஸ்காரர் களின் மூஞ்சியை பார்க்க முடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான்!
நம்மையே சந்தேகப் பட்டு விட்டார்கள் போலிருக்கிறது!
நியாயம்தானே! கொள்ளையர்கள் நம்முடைய உடுப்பில் வருவது இப்போதெல்லாம் சகஜமாகிவிட்ட தல்லவா?


பணம் கைக்கு வந்து விட்டது மேங்க்ளர்...! பறிபோய்விடாமல் இருக்க வேண்டுமே!
நம்மை தடுத்து நிறுத்த எவனால் முடியும் -
திட்டம் நூற்றுக்கு நூறு நிறைவேறி விட்டது.
உதவி...! பணத்தை கொள்ளை யடித்து விட்டார்கள்! தயவு செய்து எங்களை விடுவியுங்கள்
STERLI
SECURIT
பதறாதீர்கள்.. எங்களுடைய தலைமையகத்திற்கு போன் செய்து ஆட்களை வரவழைக் கிறேன்.
உன் கணிப்பு சரியாகி விட்டது ரிப். ஒரு கவச வண்டி இன்னொன்றை வழிப்பறி செய்து இருக்கிறது.
நிச்சயம் இது மேங்க்ளரின் கைவரிசை யாகத்தானிருக்கும்.
எல்லா ரோந்து வண்டி களுக்கும் தகவல் அனுப்பி கண்ணில் பட்ட கவச வண்டிகள் ஒன்றுவிடாமல் சோதனை போடச் சொல்...
சரி... ஸார்!
போலீஸ் வலை வீச்க ஆரம்ப மாகியது.
ஆனால் மேங்க்ளரை வளைத்துப் பிடிக்க இந்த ஏற்பாடு போதாது. குள்ள நரிப் பயல் - தப்பிவிடுவான்!
ரிப் கோர்பியின் கணிப்பு சரியே.... பத்திரமான இடத்துக்கு எப்போதோ போய் சேர்ந்து விட்டான்
அப்பாடா... இனி எவனும் நம்மை எதுவும் செய்ய முடியாது!


சாலையில் கவச வண்டிகளை நிறுத்தி சோதனை போட்டார்கள் போலீஸார்.
ஆனால் தேடப் பட்ட வண்டி தான் ஏற்கனவே
பயணத்தை முடித்துக் கொண்டு விட்டதே!
பணம் டிரக்கிலேயே இருக்கிறது. சாவிகள் என்னிடம் இருக்கின்றன. நான் இங்கேதான் தூங்கப் போகிறேன்.
கமான்...! வெற்றியை நாம் கொண்டாடு வோம்...! ஜெயிண்டலி ஏஞ்சல்ஸுக்குப் போவோம் - செலவு என்னுடையது!
ஜெயிண்ட்லி ஏஞ்சல்லை நோக்கி கார் விறைந்தது..
அந்த இடம் ஆபத் தானது பிலிமி... வெட்டிக் கொண்டு வந்து விடு!
நீ சொல்வதும் சரிதான்... இன்றிரவோடு முழுக்குப் போட்டு விடுகிறேன்!
அவர்களை க்ரெஞ்ச் பார்த்து விட்டான்.
ஹே.. மேங்க்ளர்.. அந்த வழுக்கை தலையன்தான் க்ளப்பில் புது பார்மேன்.
அவனை எனக்குத் தெரியாது... ஆனால் உடன் இருப்பவனை நன்றாக அறிவேன்!


அவன் யார்?
பெயா டெஸ்மாண்ட்.. *கொர்பியோடு ஒட்டிக் கொண்டு திரிவான்..
இவர்கள் தோழர்கள் போலிருக்கிறது
உதைக்கிறதே! அவனை உடனடியாக கழற்றிவிட ஏற்பாடு செய்... இல்லையேல் வில்லங்கமாகி விடலாம்.
இப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது.
எனக்கும்தான்! துப்பறிகிற வேலையெல்லாம் நமக்கு ஒத்து வராது!
இன்றைக்கே அனுப்பி விடுகிறேன்!
உடனடியாகச் செய்...!
பிலிமியின் குட்டு வெளிப் பட்டுவிட்டது!
பிலிமி... எங்கே போகிறாய்?
ம்ம்... டியூட்டிக்குத் தான்! இன்றோடு வேலையை விட்டு விடலாம்னு இருக்கிறேன்!
இங்கிலாந்துக்கே திரும்பி போயிடப் போறேன்... ஊர் நினைப்பு வந்து விட்டது.


அப்படியா.. சரி வண்டியில் ஏறு!
ச..ச...சரி... மிஸ்டர் க்ரெஞ்ச்!
பிலிமிக்கு நெருக்கடி...
ஏதோ உள்நோக்கத்தோடுதான் என்னோடு வருகிறான் இந்த கயவன்...
நகர எல்லைப் பகுதியில் -
சமர்த்தன் நீ இல்லையா - அதற்கான பரிசு... இதோ!
நின்றால் ஆபத்து என்று புரிந்தது.
தொலைந்தேன்... எப்படியாவது தப்பி ஓடிவிடவேண்டும்
உ..உ..த..விவி...
டுமீல்



சுருண்டு விழுந்தான் பிலிமி...
டுமீல்
அடித்துவிட்டேன். நெருங்கிச் சென்று செத்துவிட்டானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்!
ஆனால் போலீஸ் ரோந்துக் கார் ஒன்று அப்போது அவ் வழியாக வரவே -
போலீஸ்..! பிலிமி நிச்சயம் செத்துப் போயிருப்பான் -
என்ன ஆயிற்று ப்ராங்க்!
படு மோசமான காயம்..! ஆம்பு லன்ஸை வரவழை!
இன்றிரவு வேலையை விட்டுவிடுதாக இருந்தான் ஸார்
இவனை எப்படியா வது காப்பாற்றியாக வேண்டும் டெஸ்மாண்ட்.



நியூயார்க்கில் ஒரு மருத்துவ மனையில் -
துப்பறியும் ஆசை இவனுக்கு எதற்கு?
உயிருக்கு உத்தர வாதமே இல்லாத தொழில்!
பிலிமிக்கு அவர்கள் இழைத்த கொடுமைக்கு நான் பழிவாங்காமல் ஓயமாட்டேன்!
அதே சமயம்
மேங்க்ளரின் பாது காப்பில் பணத்தை விட்டு வைக்க மனம் ஒப்பவில்லையே!
போலீஸார் ஏன் அதிரடியாக ஜெயிண்ட்லி ஏஞ்சல்ஸை தாக்கக் கூடாது?
மேங்க்ளர் சுதாரித்துக் கொண்டுவிடுவான். குற்றத்தை நாம் நிரூ பிக்க வகையில்லாமல் போய்விடலாம். நாம் வேறு யுக்தியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்!
ஒருநாள் இரவு க்ரெஞ்சை ரகசியமாக பின்தொடர்ந்து சென்று அவனுடைய அட்ரஸை தெரிந்து கொண்ட பிலிமி அதை என்னிடம் எழுதி கொடுத்திருந்தான். இதோ -


அதுதான் க்ரெஞ்ச்சின் வீடா?
நான் நினைத்ததைவிட பிலிமி சமர்த்தாகத் தான் காரியம் பண்ணி இருக்கிறான்.
பொறுமையாக காத்திருந்தார் ரிப்..
க்ரெஞ்ச்சை நான் வளைத்துப் பிடித்தால் மேங்க்ளர் நழுவி விடுவான்... இவனை பின்தொடர்ந்து சென்றால் மேங்க்ளரின் இருப்பிடம் தெரிய வரலாம்!
நேரம் ஓடிக் கொண்டிருந்தது
அவனை நான் நம்ப வில்லை என்று அர்த்த மில்லை.. ஆனால் என் பணத்துக்கு இன்னொ ருத்தன் காவலிருக்க நான் ஏன் சம்மதிக்க வேண்டும்?
என் நண்பனுக்கு ஒத்தாசை செய்ய நினைக்கிறேன் என்று வைத்துக் கொள்வோமே!
ரிப்பின் பொறுமைக்கு பலனில்லாமல் போகவில்லை.
அந்த அகால வேளையில் இரண்டு கார்கள் சாலையில் விரைந்தன.
அவனுக்கு சந்தேகம் எழாதவாறு இடை வெளிவிட்டு நான் பின் செல்ல வேண்டும். அதே சமயம் அவனை நான் கோட்டை விட்டு விடவும் கூடாது.


இவ்வளவு பெரிய தொகையை கையாள பயல்களுக்கு சமர்த்து போதாது... அவர்களை இது கெடுத்துவிடும்..
கணிசமான தொகையை மூட்டை கட்டினான்.
க்ரெஞ்சுக்கும், மார்ட்டினுக்கும் தலைக்கு நாலைந்து கட்டுக்கள் கொடுத்துவிட்டால் போதும்.. பெரிதாக அவர்கள் என்னத்தை கிழித்தார்கள்?
நண்பர்களின் 'நலனில்' மேங்க்ளருக்குத் தான் எவ்வளவு அக்கறை!
அந்த காரேஜ் அருகே காரை நிறுத்துகிறான்.. அங்கே இன்னும் வேறு யாரோ இருக்கிறார்கள்.
மார்ட்டின் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்.
உனக்கு வந்த சந்தேகம்தான் எனக்கும்.. மேங்க்ளர் நமக்கு துரோகம் பண்ணி விடுவானோ என்ற பயம்!
உள்ளே போகிறார்கள்.. அந்த கவச வண்டி நிச்சயம் உள்ளே இருக்கிறது என்கிறேன் - பந்தயத்துக்கு யாராவது தயாரா?
மேலே ஏறி நின்றால் ஜன்னல் வழியாக காரேஜினுள் நடப்பதை கண் குளிர பார்க்க முடியும்!



ஹலோ... மேங்க்ளர் - நாங்கள் உதவி செய்யலாமா?
ஓ.. ஹலோ.. பிரண்ட்ஸ்!
பயணம் கிளம்ப ஆயத்தமாகிற மாதிரி தெரிகிறது. லக்கேஜ் அதிகமாக இருக்கும் போலிருக்கிறது!
ம்ம்.. வந்து.. இந்த போலீஸாரை நினைக் கையில்.. எனக்கு கொஞ்சம் கிலேசமாகி விட்டது.
அதனால்தான் பணத்தை வேறொரு பத்திரமான இடத்திற்கு கொண்டு சேர்த்து விட்டு உங்களுக்கும் சொல்லிவிட நினைத்தேன்!
மேங்க்ளர்..! ஒருவழியாக கண்டு பிடித்துவிட்டேன். எப்படி அவனை மடக்குவது என்பது பற்றி நான் சீக்கிரமே தீர்மானிக்க வேண்டும்.
நாடகத்தின் அடுத்த கட்டம் என்ன...?
பொறுமையாக காத்திருந்தார் ரிப்..
நீங்கள் என்னை நம்பாமல்தானே வந்தீர்கள்?
நாம் ஒருவரை யொருவர் எப்போது நம்பினோம்- இப்போது புதிதாக சந்தேகம் வர?
திருடர்களுக் கிடையே மனக் கசப்பு...


இந்தாருங்கள்.... எடுத்துக் கொண்டு தொலையுங்கள்!
ஏய்.. நிறுத்து!
கரன்ஸி நோட்டுக்களால் அபிஷேகம் நடந்தது அங்கே -
... தொடர்ந்து துப்பாக்கி முழக்கம்!
டுமீல்
டுமீல்
ஊஹூம்.. இங்கே நின்றால் ஆபத்து!
டுமீல் டுமீல்
என்னை யாரென்று நினைத்தீர்கள்..?
மறுகணம்.. மேங்களரின் 'நண்பர்கள்' வட்டம் சுருங்கிப் போனது..!
டுமீல்


முதலில் விளக்கை அணைத்துவிட வேண்டும்..
க்ராக்
அடுத்து - காரில் பணத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு மேங்க்ளர் வெளியேற முயற்சிக்கும்போது பாய்ந்து மடக்க வேண்டும்..
அவன் அவசரமாக கிளம்பிவிடாமலிருக்க
க்ராக்
ஸ்-ஸ்...
சனியன்..! பங்க்சராகித் தொலைக்க இதுவா நேரம்.
ஹலோ மேங்க்ளர்.. உன் துப்பாக்கியை எடுத்து என்னிடம் கொடுக்கிறாயா?


கெர்பி..! நமக்குள்ளே ஏன் சச்சரவு..! நொடியில் உன்னை செல்வச் சீமானாக்கிவிட என்னால் முடியும்.. என்ன சொல்கிறாய்?
என்னை இப்போது சுட்டுக் கொன்றுவிட்டு பழியை என் சகாக்கள் மீது போட உனக்கு அருமையான வாய்ப்பு கிட்டியிருக்கிறது - இல்லையா?
அந்த நல்ல காரியத்தை செய்த பெருமையை வேறு எவருக்கும் தாரை வார்க்க நான் தயாரில்லை மேங்க்ளர்.
நீயாக தருவாய் என்று எதிர்பார்த்தேன்.. பரவாயில்லை - நானே எடுத்துக் கொள்கிறேன்!
உன் போக்கிரித்தனத்தினால் என் நண்பன் ஒருவன் படுகாயமடைந்திருக்கிறான்..
பழிக்குப் பழி..
நீ..நீ.. என்னை கொன்றுவிடப் போகிறாயா?
பதறாதே..! என்ன செய்கிறேன் என்று கவனி - மூர்ச்சை போட்டு விடாதே!
துப்பாக்கி விளையாட்டு வேண்டாம்.. புஜ வலிமை போதும் - வா.. மோதிப் பார்த்து விடுவோம்!


உன் தாராளத்திற்கு நன்றி - வருந்தப் போகிறாய்!
லாவகமாக விலகி தப்பிக்க எல்லோருக்கும் முடிவதில்லை.. மேங்க்ளர்!
கும்!
மேங்க்ளருக்கு இன்னொரு வாய்ப்பு கிட்ட வேயில்லை.
ஊப்ப்...
வ..வ..கையாக சிக்கிக் கொண்டாய்...
மென்னியை முறிக்கா மல் விடப்போவ தில்லை.
ஆனால் இம் மாதிரி நெருக்கடி களை சமாளித்த அனுபவம் நிறைய உண்டு ரிப் கேர்பிக்கு.


இது - பிலிமிக்காக..
ணங்!
இவன் மயக்கம் தெளிந்து எழுமுன் விலங்கை மாட்டி விடவேண்டும்.. இல்லையேல் வெறிகொண்ட விலங்காக ஆர்ப் பாட்டம் பண்ணி நாசத்தை விளைவித்து விடுவான்.
அவனுடைய முன்னாள் தோழர்களுக்கு இன்னமும் ஜீவன் இருக்கிறது.
ஆமாம்.. இன்ஸ்பெக்டர்! ஆம்புலன்ஸ் வண்டியும் ஒரு கொரில்லாவை அடைக்க கூண்டும் அவசரமாக தேவைப்படுகிறது!
இன்று நீ ஜெயித்து விட்டாய்.. ஹும்.. உன்னை இன்னொரு சந்தர்ப்பத்தில் 'கவனி'த்துக் கொள்கிறேன்.
அப்படியொரு நினைப்பா.. - கிடைத்தது போதாது என்று நீ நினைத்தால்...
..தலை எழுத்தை யாரால் மாற்ற முடியும்?


கிடைக்கப் போகும் வெகுமதி முழுவதும் உனக்கே சேருவது தான் நியாயம் பிலிமி..!
அப்படி நான் என்ன சாதித்துவிட்டேன்.. ஸார்?
ஒரு போக்கிரியை இரகசியமாக கண் காணிக்கும்போது ஆர்ப்பாட்டமில்லாமல் ஒன்றுமே தெரியாத அப்பாவிபோல் நாடகமாட வேண்டும் என்பது உளவுத் தொழிலின் அடிப்படை பாடம்.. டெஸ்மாண்ட்!
தூள் கிளப்பி விட்டாய் பிலிமி!
இப்போது கழுத்து எப்படி இருக்கிறது... டியர்?
இன்னும் கொஞ்சம் இடப்பக்கம் பிடித்து விடேன்!
சிறையிலோ
நான் ஸ்கேட்டிங்கில் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்! என்றைக்காவது ஒரு நாள் சிறைசாலையின் முற்றத்தில் பனி கொட்டிக் கிடந்தால் தப்பிச் செல்ல வழி பிறக்கலாம்!
முற்றும்

## வாசக அன்பர்களுக்கோர் இனிய செய்தி!

அன்பிற்குரிய உங்கள் ஆசிரியர் விஜயனுக்கு திருமணம்!
இதோ அழைப்பிதழ்! வாழ்த்தும் நெஞ்சங்களே -
இது உங்கள் இல்லத் திருமணம். அனைவரையும் வருக! வருக!
என அன்புடன் அழைக்கிறேன்!

நிர்வாகி, லயன் காமிக்ஸ்

உ

# திருமண அழைப்பிதழ்

நிகழும் ஆங்கீரஸ ஆண்டு, கார்த்திகை திங்கள் 7ம் நாள் (22-11-'92)
ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு மேல் 12-00 மணிக்குள்
எங்கள் புதல்வன்

திருவளர்ச்செல்வன் **S. விஜயன்** B. Com.,

சத்தியமங்கலம், திரு. S. ஜோதிமூர்த்தி அவர்களது புதல்வி

திருவளர்ச்செல்வி **J. லலிதா** B. Sc.,

இவர்களது திருமணம், சிவகாசி ரயில்வே பீடர் ரோடு,
மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோசியேஷன் அரங்கத்தில் நடைபெறுவதால்
தாங்கள் சுற்றமும், நட்பும் சூழ வந்திருந்து
மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

அன்புடன்

M. சவுந்திர பாண்டியன்

M. சத்ய பிரபா

முத்துகாமிக்ஸ் & லயன் காமிக்ஸ்,
சிவகாசி


லயன்
காமிக்ஸ்
லயன்
தீபாவளி மலர்!
ரூ.
10/-